# தாயகபூமி

கா. தவபாலன்



# தாயக பூமி

## கலாபூஷணம் கா.தவபாலன்

ஜீவநதி வெளியீடு
2017

# தாயகபூமி

(சிறுகதைகள்)


ஆசிரியர் : கலாபூஷணம் கா.தவபாலச்சந்திரன்

தொடர்புகளுக்கு : கணுக்கேணி கிழக்கு,
முள்ளியவளை

புனைபெயர் : கா. தவபாலன்

தொலைபேசி : 071-8501492, 0775454314

மின்னஞ்சல் : kthavapalan@yahoo.com

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : ஜீவநதி,
கலைஅகம், அல்வாய்

முதலாம்பதிப்பு : 2017வைகாசி

பக்கம் : 104

விலை : 300/-

ISBN : 978 955 43867 1-6

**ஜீவநதி வெளியீடு – 77**

நான் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிற்
கல்வி கற்ற காலத்தில் எனக்கு தமிழ் மொழியையும், தமிழ்
இலக்கியத்தையும் கற்பித்த ஆசிரியர்களாகிய
அமரர் வித்துவான் க.குமாரசாமி
அவர்களுக்கும்,
அமரர் வித்துவான் திருமதி குமாரசாமி
அவர்களுக்கும்
இந் நூல் சமர்ப்பணம்.

கா. தவபாலன் 03

## ஆசியுரை

எனது மகன் கா.தவபாலன் அரசியல் விஞ்ஞானத்தில் பீ.ஏ பட்டம் பெற்ற சந்தர்ப்பத்திலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரி மதிப்பீட்டாளராகப் பதவி உயர்வு பெற்ற சந்தர்ப்பத்திலும், இலக்கியத்துறையில் சிறுகதைகளையும், கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதிப் புகழ் பெற்று 2015ம் ஆண்டில் இலங்கை அரசின் கலாபூஷணம் விருதைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்திலும் நான் அடைந்த மகிழ்ச்சியை எழுத்தில் வடித்து விட முடியாது.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டார். அதாவது "ஒரு தாய் தன் மகனைச் சான்றோன் என அறியும் போது அடையும் மகிழ்ச்சி, அவள் தன் மகனைப் பெற்ற போது அடைந்த மகிழ்ச்சியை விட அதிகமானதாகும்" என்பதே இக்குறளின் பொருளாகும். என் விடயத்தில் இக் குறளானது மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பது கண்டு மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

இச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு திருக்குறளையும் சொல்லாமலிருக்க முடியவில்லை.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை

எந் நோற்றான்கொல் எனும் சொல்"

அதாவது "இவனை மகனாகப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்திருப்பானோ" என்று ஊரார் வியக்கும் வண்ணம் வாழ்வதுதான் ஒருவர் தன் தகப்பனுக்குச் செய்யும் பேருதவி என்கிறார் வள்ளுவர். இக்குறளும் எனது மகனுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பது கண்டு மகிழ்கின்றேன்.

இச் சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெறவும், என் மகன் நூறாண்டு காலம் வாழ்ந்து, மேலும் பற்பல நூல்களை எழுதி வெளியிடவும், எல்லாம் வல்ல இறைவன் இவருக்குத் துணைபுரிய வேண்டுமென்று பிரார்த்தித் துக் கொண்டு எனது ஆசியுரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன்.

**திருமதி.சுபத்திரா காசிப்பிள்ளை,**
**கனுக்கேணி கிழக்கு,**
**முள்ளியவளை.**
**15.11.2016**

## வாழ்த்துரை

கலாபூஷணம் கா.தவபாலன் அவர்களை ஞானம் சஞ்சிகை ஊடாக நான் நன்கறிந்துள்ளேன். வன்னிப் பிரதேசத்தி லுள்ள குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். இயல், இசை இரண்டிலும் இவர் சிறந்து விளங்குகின்றார்.

இவர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர். கணுக்கேணியூர் காசிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனாகிய இவர் ஒரு அரசியல் விஞ்ஞானப் பட்டதாரியாவார்.

வீரகேசரி "சமகால அரசியல்" பகுதியில் சமஷ்டி ஆட்சி பற்றிய விரிவான கட்டுரையொன்றை எழுதியதன் மூலம் எழுத்துலகிற்கு அறிமுகமானார். ஞானம், மல்லிகை, ஜீவநதி, பூங்காவனம், தாயக ஒலி, செங்கதிர், நீங்களும் எழுதலாம், சுவைத்திரள் ஆகிய சஞ்சிகைகளில் கவிதைகளையும், சிறுகதை களையும் எழுதிப் பிரபல்யம் அடைந்தார்.

நீர் வளமும், நில வளமும், வன வளமும், தேனும், பாலும், மீனும், நெல்லும், நவ தானியங்களும் நிறைந்தது வன்னிப் பிர தேசம். வந்தாரை வாழ வைக்கும் நாடு. விருந்தோம்பலில் புகழ் பெற்ற நாடு. கொம்பறை நிறைய நெல்லும், பட்டி நிறையப் பாற் பசுக்களும் ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும். வஞ்சகப் புத்தி யும், சூதுவாதும் இல்லாத அப்பாவி விவசாயிகள் நிறைந்த நாடு.

இங்கே எழுத்தாளர்களுக்கும் பஞ்சமில்லை. முத்தமிழும், பிரபந்தங்களும், காப்பியங்களும், நாட்டார் பாடல்களும்,

பள்ளுப் பாடல்களும், சிந்துப் பாடல்களும் மலிந்து காணப் பட்டன.

இலக்கியத்திற்கும், நிஜ வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இலக்கியம் மனிதனுடைய வாழ்க்கையில் இருந்துதான் ஊற்றெடுக்கின்றது. தன்னைச் சூழவுள்ள கூறு களைக் கலை நயத்துடன்சித்தரிக்க எழுத்தாளன் முயல் கின்றான். அவனது உள்ளத்தைத் தொட்ட சம்பவங்கள், பாதிப்புக்கள், அவலங்கள் ஆகியவற்றை எழுத்தில் வடித்து விடு கின்றான். கா.தவபாலனும் தனது சிறுகதைகளிலும், கவிதை களிலும் தான் அறிந்த அவலங்களைப் பதிவு செய்துள்ளார்.

வளமுடன் வாழ்ந்த வன்னி மக்கள் அகதிகளாக மாறியது பற்றிய இவரது இதயக் குமுறல் கவிதைகளாகவும், சிறுகதை களாகவும் உருப்பெற்றுள்ளன.

"இன்னவைதான்கவியெழுத
ஏற்ற பொருள் என்று பிறர்
சொன்னவற்றைநீர்திருப்பிச்
சொல்லாதீர். சோலை கடல்
மின்னல்முகில்தென்றலினை
மறவுங்கள் மீந்திருக்கும்
இன்னல்உழைப்புஏழ்மைஉயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

என்கிறார் கவிஞர் மகாகவி. கவிஞர் மகாகவியின் விருப்பப் படியே தவபாலன் அவர்களும் வன்னி மக்களின் இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு என்பவற்றைப் பாடியுள்ளார். ஞானம் சஞ்சிகையிற் பிரசுரமான இவரது கவிதை வரிகளைப் பார்ப்போம்.

"கூடார வீட்டுக் குடிமக்கள் நாங்கள்
முட்கம்பி வேலிக்குள் முடங்கிப் போனோம்
கைவிலங்கில்லாக் கைதிகள் நாங்கள்
சுதந்திரக் காற்றைச் சுவாசிப்போமா? "

என்று ஆதங்கப்படுகின்றார். கைவிலங்கு போடா

விட்டாலும் பலத்த பாதுகாப்புடன் முட்கம்பி முகாமுக்குள் தடுத்து வைக்கப்பட்டபடியால் இம்மக்கள் கைதிகளைப் போன்றவர்களே!

இவர்கள் எப்போது சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கப் போகின்றார்கள்? என்று ஆதங்கப்படுகிறார் கா.தவபாலன். மக்கள் அகதி முகாமில் இருந்தபோது சம காலத்தில் இக் கவிதை ஞானம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டது.

அகதிகளின் உள்ளக்குமுறல் என்ற தலைப்பின் கீழ் ஞானம் சஞ்சிகையில் பிரசுரமான இவரது இன்னொரு கவிதை வரிகளைப் பார்ப்போம்.

"கணுக்கேணிக் குளத்தினிலே கச்சிதமாய் நீந்தி
சோளகக் காற்றின் சுகம் தன்னை அனுபவித்து,
சீனட்டி வயலினிலே சீராய் நடந்து வந்து,
குமாரபுரம்குமரனை நான் கும்பிடும்நாள்எந்நாளோ?"

இது ஒரு மண்வாசனைக் கவிதையாகும். இக் கவிதையில் வரும் சீனட்டி வன்னி மக்களுக்கே உரிய சுவையான நெல்லரிசி. சீனட்டி அரிசிச் சோற்றில் இருந்து கமகம வென்று ஒருவித வாசம் வீசும். வன்னியில் ருதுவான பெண் பிள்ளைகளுக்கும், பிரசவித்த தாய்மார்களுக்கும் இந்த அரிசியில் சோறு சமைத்துக் கொடுப்பது வழக்கம்.

கமுகம் பூப்போலத் தீட்டிய இந்த சீனட்டி அரிசிச் சோற்றுடன் கொச்சிக்காய்ச் சம்பலும் புத்துருக்குப்பசுநெய்யும் புளிக்காத கட்டித்தயிரும் சாப்பிட்டவர்களுக்குத் தான் தெரியும் இதன் சுவை. அடுத்து ஞானம்சஞ்சிகையிற் பிரசுரமான இன்னொரு கவிதையைப் பார்க்கலாம்.

"பொய் சொல்லக் கூடாது
கோள் சொல்லக் கூடாது
அடுத்தவன் சொத்துக்கு
ஆசைப்படக் கூடாது."

என்று தனது தந்தை எப்போதும் புத்திமதி கூறித்தன்னை வளர்த்ததை ஞாபகப்படுத்துகின்றார் கவிஞர். வன்னி மக்கள்

அவர்களது மூதாதையர்களால் எவ்வாறு வளர்க்கப்பட்டார்கள் என்ற விடயம் இக் கவிதை மூலம் நன்கு புலப்படுகின்றது. ஞானம் சஞ்சிகையில் பிரசுரமான "காணவில்லை" என்ற கவிதையையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

"மீளக் குடியேற நாம்
மினைக்கடாமற் சென்ற போது,
எம் வீட்டைக் காணவில்லை
வேலியையும் காணவில்லை."

"உழவு மெசின் காரன்
உருத்திரனைக் காணவில்லை
முன் வீட்டில் வசித்த
மூர்த்தியையும் காணவில்லை."

காணாமற் போனோர் பட்டியலில் இப்படி ஏராள மானோர் உள்ளனர். இவர்களைத் தேடுகின்றார்கள். இன்று வரை தேடல் ஓயவில்லை. மனதைப் பிழியும் கவிதை யிது. இப்படி எத்தனையோ உருக்கமான கவிதைகளைப் பாடி யுள்ளார் கவிஞர் கா.தவபாலன்.

அடுத்து இவரது சிறுகதைகள் சிலவற்றை நோக்கு வோம். ஞானம் சஞ்சிகையில் வெளிவந்த "அகதியாய் ஓட மாட்டேன்" என்ற தலைப்பிலான சிறுகதை தர்மலிங்கம் என்பவரைப் பற்றிய கதை.

இரத்தமும் வியர்வையும் கலந்து கட்டிய வீட்டில் இருக்க விடாமல் யுத்த அரக்கன் துரத்துகின்றான். இடம் பெயர்ந்து செல்லும் போது புதுக்குடியிருப்புக்கு அண்மையில் ஷெல் விழுந்து செத்துப் போகிறார் தர்மலிங்கம். "செத்தாலும் எனது மண்ணில் சாவேனே தவிர அகதியாக அந்நியர் மண்ணுக்கு ஓடிப் போக மாட்டேன்" என்ற அவரது சபதத்தின் படி சொந்த மண்ணிலேயே சமாதியாகிவிட்டார் தர்மலிங் கத்தார். இது போல எத்தனையோ சோகங்கள் வன்னி மண்ணில்.

மல்லிகை இலக்கிய சஞ்சிகையில் பிரசுரமான இவரது "தண்ணிமுறிப்புக்குளம்" சிறுகதையும் ஒரு சிறந்த கதை. இதில் வரும் செல்லத்துரை என்பவர் எவ்வளவு கொடுமையானவர்? பாருங்கள் அவரின் குணத்தைக் கதாசிரியர் எப்படி வர்ணிக்கின்றார் என்று.

ஏழைகளின் கூலியை ஒழுங்காகக் கொடுக்க மாட்டார். காணி எல்லைகளை மாற்றிப் போட்டு மற்றவர்களின் காணி களைத் தனதாக்குவார். வயலில் அனாதராவாகத் திரியும் பிறரின் பசுக் கன்றுகளைப் பிடித்துத் தனது பெயரில் குறி சுட்டுத் தனதாக்கிவிடுவார்.

கட்டாக்காலிமாடுகளைப் பிடித்துக் கொழும்பு இறைச்சிக் கடைகளுக்கு அனுப்பிவிடுவார். மது போதையில் கட்டுண்டு கிடப்பார். இவை இங்கேயுள்ள மனச் சாட்சியற்ற ஒருசிலரால் அரங்கேற்றப்படும் காட்சிகள்தான்.

கடைசியாக "இப்படியும்மனிதர்கள்" சிறுகதையைக் குறிப்பிட விரும்புகின்றேன். செட்டிகுளம் அகதி முகாமில் வாழ்ந்த சீதா அக்காவுக்கு லண்டனில் இருந்து தம்பி சுகுமார் அண்ணன் ஆனந்தன் மூலம் காசு அனுப்புகின்றான். ஆனால் ஆனந்தனோ அக்காசில் அரைவாசியைத் தனது தேவைக்கு எடுத்துவிட்டு மிகுதி அரைவாசியை மட்டுமே சீதாவிடம் கொடுக்கின்றான்.

சீதா அகதி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் சுகுமாருடன் போனில் பேசிய போதுதான் இவ்விடயம் அம்பலத்திற்கு வருகின்றது. செட்டிகுளம் முகாமில் வாழ்ந்த மக்கள் இவ்வாறு பல வழிகளில் ஏமாற்றப்பட்டார்கள் என்பதை நாமும் அறிந்து சினமடைந்தோம்.

இப்படி எத்தனையோ சிறுகதைகளைத் தவபாலன் இந்தப் புத்தகத்தில் தந்துள்ளார். வாசியுங்கள்! வன்னிக்குக் கிடைத்த இவர் வன்னியின் வரப்பிரசாதம். இவரது இலக்கிய சேவையைப்பாராட்டி இலங்கை அரசு **2015**ம் ஆண்டில் இவருக்குக் "கலாபூஷணம்" விருதை அளித்துக் கௌரவித்தது.

நானும் கலாபூஷணம் கா.தவபாலன் அவர்களை வாழ்த்து வதையிட்டுப் பெருமை அடைகின்றேன். இவர் மென்மேலும் வானுயர வளர்ந்து எழுத்துப் பணியைத் தொடர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சாகித்திய ரத்னா கலாநிதி முல்லைமணி,**
**நாவலர் வீதி,**
**முள்ளியவளை.**
**14.11.2016**

ஆசிரியர் குறிப்பு

13.12.2016ம் திகதி கலாநிதி முல்லைமணி அவர்கள் காலமானார் என்ற செய்தியை மிகுந்த கவலையுடன் பதிவு செய்கின்றேன்.

## அணிந்துரை

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்கள் அடங்கிய பெருநிலப் பரப்பே இன்று வன்னி என்று அழைக்கப்படுகின்றது. "அடங்காப் பற்று" என்ற பெயரும் இப் பகுதிக்கே உரியது.

முற்காலத்தில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, உட்பட்ட பிரதேசங்களும் அம்பாறை மாவட்டம், புத்தளம் மாவட்டம், அனுராதபுர மாவட்டத்தின் சில பகுதிகள் என்பவையும் அடங்காப்பற்றினுள் அடங்கி யிருந்ததாக ஆய்வறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த இடங் களிலெல்லாம் வன்னிமைகள் இருந்ததற்கான சான்றுகள் பல வற்றைஅவர்கள்வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கிழக்கு மாகாண நாட்டார் பாடல்களில் வன்னியனார் என்ற சொற்பிரயோகத்தை நான் படித்திருக்கிறேன். வன்னிய சிங்கம் என்ற பெயர் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பலருக்கு இருந்தது. இருக்கிறது.

வன்னியின் கடைசித் தமிழ் மன்னன் தன்னிகரில்லாத் தலைவன் பண்டாரவன்னியன் 1803ம் ஆண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கற்சிலைமடுக் கிராமத்தில் வெள்ளையருடன் நடைபெற்ற போரில் தோற்கடிக்கப்பட்டான். 1815ம் ஆண்டில் கண்ணுச்சாமி என்ற இயற் பெயரையுடைய கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனையும் தோற்கடித்ததன் மூலம் வெள்ளை யர்கள் இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் கொண்டு

வந்தார்கள்.

அந்நிய ஆட்சியாளர்களினால் பல்வேறு தொல்லைகளுக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுத்தும் அண்மைக் காலம் வரை வீர சுதந்திர உணர்வோடு வாழ்ந்தவர்கள் வன்னியர்கள் என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

இந்தப் பழம் பெருமைகள் எல்லாம் குன்றி "எங்கள் தாத்தாவுக்கு ஒரு கொம்பன் யானை இருந்தது" என்று பேசிக் கொண்டிருக்கிற நிலைமைக்கு நாங்கள் வந்துவிட்டோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கின்றது.

இன்று வன்னிக்குள்ளும் வவுனியா, மன்னார், முல்லைத் தீவு ஆகிய மூன்று மாவட்டங்கள் மட்டுமே வன்னித் தேர்தற் தொகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. இம் மூன்று மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக முல்லை மாவட்டமே இருக்கின்றது.

வன்னி மாவட்டங்களில் முன்பு முல்லைத்தீவு மாவட்டமே கல்வியிலும், கலைகளிலும், பொருளாதார வளத்திலும் என எல்லா வகையிலும் முன்னேறியும் முன்னோடியாகவும் திகழ்ந்தது என்பதை இப்போது எண்ணிப் பார்த்து வேதனை கொள்ளத்தான் முடிகிறது. காலம் எல்லாவற்றையும் புரட்டிப் போட்டுவிட்டது.

சாகித்திய ரத்னா கலாநிதி முல்லைமணி, நிலக்கிளி அ. பாலமனோகரன், முல்லையூரான் முதலான புகழ் பெற்ற இலக்கியவாதிகளையும், தொடர்பியல் வித்தகர் அருணா செல்லத்துரை, தமிழ்மணி அரியான் பொய்கை, மக்கள் கலைமணி எஸ். கணபதிப்பிள்ளை, முல்லைச் சகோதரிகள் எனப் பெரும் கலைஞர் பட்டியலையும் கொண்டிருந்த முல்லை மாவட்டம் வன்னி மாவட்டங்களுக்கு முன்னோடியாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

முல்லை முஸ்ரிபா, முல்லைத்தீபன், முல்லைதாசன் முதலான இளம் எழுத்தாளர்கள் அடுத்த தலைமுறை

எழுத்தாளர்களாக வலம் வரத் தொடங்கியிருக்கும் இந் நேரத்திலே கலாபூஷணம் கா. தவபாலன் அவர்களும் சிறுகதை, கவிதை, கட்டுரை நேர்காணல் ஆகியதுறைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

காசிப்பிள்ளை தவபாலச்சந்திரன் எனும் முழுப் பெயர் கொண்ட கா. தவபாலன் அவர்களை 2011ம் ஆண்டில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற "சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்" சந்தித்தேன். எழுத்துத் துறையில் மிகவும் ஆர்வமுள்ளவராகக் காணப்பட்டார். அவரது ஆர்வம் இன்று கதைகளாகவும், கவிதைகளாகவும், கட்டுரைகளாகவும் மலர்வதைப் பார்த்து மகிழ்கின்றேன்.

முல்லை மாவட்டத்து முள்ளியவளைப் பகுதி, கணுக் கேணி கிழக்கில் நா. காசிப்பிள்ளை சுபத்திரை தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்து தண்ணீரூற்று சைவத் தமிழ்ப் பாட சாலை, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, யாழ் தொழில் நுட்பக்கல்லூரி, கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றிற் கல்வி பயின்று இந்தியத் தமிழ்நாட்டு மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறை யில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரிமதிப்பாளராகக் கடமை புரிந்து ஓய்வு நிலையில் இருப்பவர்.

மும் மொழிகளும் படித்து கொழும்பு, பதுளை, கண்டி, கேகாலை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களிற் பணியாற்றி, மூவின மக்களுடனும் பழகிப் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக்கொண்டவர்.

பதின்ம வயதுக் காலங்களிலேயே பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் வாசிக்கத் தொடங்கிவிட்டார். நல்ல தமிழ் ஆசிரியர்களிடம் தமிழ் மொழியை விருப்பத்தோடும், ஆர்வத் தோடும் கற்றவர். இவரது எழுத்து நடை அதற்குச் சான்றாக இருக்கின்றது.

தேசியப் பத்திரிகைகளான வீரகேசரி, தினக்குரல்

ஆகியவற்றின் வார இதழ்களிலும், நாளிதழ்களிலும் பல கட்டுரைகளை எழுதியவர். ஞானம், ஜீவநதி, மல்லிகை, செங்கதிர், பூங்காவனம், தாயக ஒலி, நீங்களும் எழுதலாம், சுவைத்திரள் முதலான சஞ்சிகைகளில் கவிதைகளையும், சிறுகதைகளையும் எழுதியவர். ஞானம் சஞ்சிகையிலும் ஞாயிறு தினக்குரல் வாரஇதழிலும் இவரது நேர்காணல்கள் பிரசுரமாகி யுள்ளன. "தசரதன்" என்ற புனைபெயரிலும் ஆக்கங்களைப் படைத்துள்ளார். கலாசார அமைச்சினால் இலக்கியத்துக்கான "கலாபூஷணம் விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

இவரது இந்தச் சிறுகதைத் தொகுப்பு நூல் அவ்வப் போது இவர் இலக்கிய சஞ்சிகைகளில் எழுதிய சிறுகதைகள் பல வற்றை உள்ளடக்கியுள்ளது. இவரது பிறந்தகமான முல்லைத் தீவு, புகுந்த வீடான யாழ்ப்பாணம், வசித்த இடமான மலை யகம், கொழும்பு போன்ற பிரதேசங்கள் சார்ந்தவையாக இவரது சிறுகதைகள் அமையப்பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

இவரது மொழிப்பற்று, இனப்பற்று, மண்பற்று என்ப வையும் சமூக விழுமியங்களில் இவருக்குள்ள அக்கறையும் இவரது ஆக்கங்கள் மூலம் தெளிவாகப் புலப்படுகின்றது. முரண்பாடுகளே புனைகதைகளின் கரு என்பது பொதுவான இலக்கியக் கோட்பாடாகும். இந்தவகையில் இவர் தனது அறிவு, அனுபவம் என்பனவற்றின் ஊடாகக் கண்டுகொண்ட பல்வேறு வகையான சமூக முரண்பாடுகளையும் சிறுகதை களின் வடிவிற் தந்துள்ளார். இவை பெரும்பாலும் உண்மைச் சம்பவங்களாகவே தெரிகின்றன. கற்பனைக்குத் தேவை ஏற்படவில்லை என்றே சொல்லலாம்.

இவரது மொழியாற்றல் விசேஷமாகப் பாராட்டத் தக்கது. அடிப்படைத் தமிழறிவை நல்ல ஆசிரியர்களிடம் பெற்றமையும் தமிழ் ஆர்வமும், நல்ல இடையறாத வாசிப்புப் பழக்கமும் இவரது சிறப்பான தமிழ்மொழிப் பிரயோகத்துக்குக் காரணிகளாக அமைந்துள்ளன எனலாம்.

எமது நாட்டில் பெரும்பான்மை இனத்துடன் திருமண

பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளும் தமிழ் ஆண்களும், பெண் களும் தமிழையும், சைவத்தையும் மறந்து "சிங்கள பௌத்தர்" என்ற முகமூடியைப் போட்டுக்கொள்வதைப் பலரும் அறிந் துள்ளார்கள்.

திருமண உறவுகள் மூலம் ஒரு பக்கம் இனமாற்றம் நடை பெற, மறுவளமாக எம் கண்முன்னே மண்ணும் பறிபோகிறதே என்ற ஆதங்கம் காரணமாகவே இவர் இது தொடர்பான கதைகளை எழுத முனைந்தார் என்று எண்ணத் தோன்றுகிறது.

இன்றைய அரசியல் சூழலில் "இனக்கலப்புத் திருமணங்கள் இனப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்" என்ற பெரும்பான்மை இனத்தவர் சிலரின் கருத்தை இவரது கதைகள் ஆதாரபூர்வமாக நிராகரிக்கின்றன. கலப்புத் திருமணங்கள் இலங்கையைச் சிங்களவர்களை மட்டுமே கொண்ட நாடாக்கப் பயன்படுமே தவிர இனப் பிரச்சனையைத் தீர்க்கப் பயன்படா என்பதுவே நிதர்சனமான உண்மையாகும்.

எழுத்தாளர் கலாபூஷணம் கா. தவபாலன் அவர்கள் இன்னும் காத்திரமான படைப்புக்களை வழங்கி முல்லை மண்ணின் எழுத்தாளர்களில் பெயர் சொல்லக்கூடிய ஒரு இலக்கியவாதியாக மென்மேலும் வளரவேண்டும் என்று வாழ்த்தி இவரின் இம் முயற்சியைப் பாராட்டுகிறேன். வாழ்க. வளர்க. உயர்க.

அன்புடன்
தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன்
90, திருநாவற்குளம்,
வவுனியா.

## அறிமுக உரை

அடங்காப் பற்று மண்ணிலிருந்து கலாநிதி முல்லை மணி, கலாநிதி அகளங்கன், நிலக்கிளி அ.பாலமனோகரன், மண லாறு விஜயன், முல்லைக்கோணேஸ், அலெக்ஸ் பரந்தாமன், முல்லைத்தீபன், வன்னியூர் செந்தூரன், முல்லைத்திவ்யன் யோ.புரட்சி, முல்லைதாசன் போன்ற இலக்கியவாதிகளுடன் எனது உறவினரானகலாபூஷணம் கா.தவபாலனும் சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதி வருகின்றார்.

நீர் வளமும், நில வளமும் நிறைந்த கரைதுறைப் பற்றின் கணுக்கேணி மண்ணில் காலம் சென்ற நாகமணி காசிப்பிள்ளை சுபத்திரை தம்பதியினரின் மகனாகவும், காலம் சென்ற கல்லடிக் குடா இளையதம்பி அவர்களின் பேரனாகவும் 1947ம் ஆண்டிற் பிறந்தவர் கா.தவபாலன். இவர் தண்ணீரூற்று சைவத்தமிழ்ப் பாடசாலை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஆகிய வற்றின் பழைய மாணவரும் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞானப்பட்டதாரியுமாவார். சிங் களத்தையும், ஆங்கி லத்தையும், தமிழையும் நன்கு கற்று ஒரு மும்மொழி வித்தக ராகத் திகழும் இவர்இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரிமதிப்பாளராகப் பணியாற்றி யவர். உள்நாட்டு இறைவரிச்சேவைச் சங்கம், கண்டி சத்திய சாயி கலாலயம், கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் ஆகிய வற்றின் முன்னாள் செயற் குழு உறுப்பினரும் ஆவார். மலையகக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உபதலைவராகவும், பேரா

தனை இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கச்செயலாளராக வும் உள்நாட்டு இறைவரித் திணைக்கள இந்துமன்றப் பொரு ளாளராகவும் கண்டித் தமிழ்ச் சங்கத்தின் மத்தியகுழு உறுப்பின ராகவும் நூலகப் பொறுப்பாளராகவும்பதவிகளை வகித்துள்ளார்.

சமஷ்டி ஆட்சி முறை பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரையை வீரகேசரியின் "சமகால அரசியல்" பகுதியில் எழுதியதன் மூலம் எழுத்துலகிற் பிரவேசித்தார். அதைத் தொடர்ந்து ஞாயிறு தினக் குரல், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும் "தசரதன்" என்ற புனைபெயரில் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இவரது இந் நூலிற் காணப்படும் சிறுகதைகளின் மூலம் வன்னி மண் யுத்த அரக்கனின் கையிற் சிக்கி, எவ்வாறு குரங்கின் கைப் பூமாலையாகச் சிதைக்கப்பட்டது? என்று மறைமுகமாக விளக்கியுள்ளார். மீள் குடியேற்றம் என்பது கிராமங்களின் வாழ்வு முறையையே மாற்றியுள்ளதையும், உள்ளவன் இல்லாதவனாக வும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மாற்றப்பட்டுள்ளதைச் சிறுகதைகள் மூலம் சித்தரித்துள்ளார். மக்களின் மனமாற்றங் களையும், கலாசாரப் பிறழ்வுகளையும், கலப்புத்திருமணத்தின் அவலத்தையும், புலம் பெயர் வாழ்வில் ஏற்படும் புதிய பிரச்சினை களையும்,வழிப்பறிக் கலாச்சாரத்தையும், ஒருவரையொருவர் ஏமாற்றி வாழ முற்படுவதையும் சிறுகதைகளின் மூலம் கலா பூர்வமாகச் சித்தரித்துள்ளார்.

இவரது சிறுகதைகள் இலகுவானநடையில் எழுதப் பட்டுள்ளதால் அனைத்துத் தரப்பினராலும் விரும்பி வாசிக்கப் படும் என்பதில் ஐயமில்லை. இவரது இலக்கிய சேவையைப் பாராட்டி இவருக்கு இலக்கியத்துக்கான "கலாபூஷணம் விருது" **2015**ம் ஆண்டில் கலாசார அமைச்சினால் வழங்கிக் கௌரவிக் கப்பட்டதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

கலாபூஷணம் கா.தவபாலன் இன்னும் பல காத்திரமான சிறுகதை நூல்களையும், கவிதை நூல்களையும் எழுதி வெளி யிட வேண்டுமென்று அன்புரிமையுடன் வேண்டுகின்றேன்.

**க.மார்க்கண்டு**
**ஓய்வு பெற்ற அதிபரும் கல்வி அதிகாரியும்**
**பிரதானவீதி, முள்ளியவளை.**

## ஆசிரியர் பேசுகின்றார்

நான் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கண்டிப் பிராந்தியப் பணிமனைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அதே காலப் பகுதியில் (2000) கண்டியில் திருமதி உமா சிறீதரன் அவர்களின் தலைமையில் "சத்திய சாயி கலாலயம்" எனும் நடனப்பள்ளி உருவாக்கம் பெற்றது.

இதன் அமைப்பாளர்களில் ஒருவராகவும், பத்திரிகைத் தொடர்பாளர் ஆகவும், செயற்குழு உறுப்பினராகவும் செயற் படுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஏறக்குறைய இதே காலப் பகுதியில் கண்டியில் இருந்து ஞானம் இலக்கியச் சஞ்சிகையும் வெளிவரத் தொடங்கியது.

சத்திய சாயி கலாலயம் நடத்தும் ஆண்டிறுதிக் கலை நிகழ்வுகள் தொடர்பான அறிக்கைகளை ஞானம் சஞ்சிகையின் "சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்" பகுதிக்கு அனுப்பி வந்தேன்.

நாளடைவில் கண்டியில் என்ன "கலை இலக்கிய நிகழ்வு" நடந்தாலும் அவை பற்றிய அறிக்கைகளையும் ஞானத் திற்கு அனுப்பி வந்தேன். வாசகர் கடிதங்களையும் ஞானம் சஞ்சிகைக்கு அவ்வப்போது எழுதுவது வழக்கம்.

இவ்வாறு நீண்ட காலம் ஞானம் சஞ்சிகையுடன் தொடர்பைப் பேணி வந்தேன். சத்தியசாயி கலாலயத்திற்கும் முன் சொன்ன வகையில் தொடர்ந்தும் உதவிகளைச் செய்து

வந்தேன். கண்டி இசைக் கலாமன்றத்திலும் சிலகாலம் மத்தியகுழு உறுப்பினராகப் பணியாற்றினேன்.

இவ்வாறு கலை இலக்கிய நிறுவனங்களுடன் தொடர்பைப் பேணி வந்தமையாலும், "ரீன் ஏஜ்" பருவத்திலிருந்தே தொடர்ந்தும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி வந்தமையாலும் நான் ஒரு எழுத்தாளராகவும், இலக்கிய வாதியாகவும் உருவாக வழி ஏற்பட்டது என்று நம்புகின்றேன்.

வீரகேசரி வார வெளியீட்டின் "சமகால அரசியல்" பகுதியில் சமஷ்டி ஆட்சி முறை பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதியதன் மூலம் நான் ஒரு பத்திரிகை எழுத்தாளராக அறியப்பட்டேன்.

பின்னர் சிறுகதையும், கவிதையும் ஞானம் சஞ்சிகையில் எழுதியதன் மூலம் இலக்கியவாதியாகவும் உருவாகத் தொடங்கினேன். அதைத் தொடர்ந்து மல்லிகை, ஜீவநதி, செங்கதிர், பூங்காவனம், தாயக ஒலி, நீங்களும் எழுதலாம், சுவைத்திரள் போன்ற சஞ்சிகைகளிலும் எனது கவிதைகளும், சிறு கதைகளும் பிரசுரமாகத் தொடங்கின. தினக்குரல், ஞாயிறு தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் அதிகமான கட்டுரைகளை எழுதி வந்தேன்.

தாயக பூமி என்ற தலைப்பிலான இச்சிறுகதை நூலில் திருமணப் பேச்சுக்களின்போது செய்யப்படும் மோசடிகள் கணவன்மார் சிலர் மதுவருந்திவிட்டு மனைவிமாருக்குச் செய்யும் கொடுமைகள், கலப்புத்திருமணங்களின் மூலமாகவும், கலப்புக்குடியேற்றங்களின் மூலமாகவும், தமிழரின் இன அடையாளங்கள் வேகமாக அழிந்துகொண்டுபோதல், தமிழ் மக்களிற் சிலர் மண்ணாசை காரணமாகத் தமக்குள்ளேயே சண்டை சச்சரவுகளை உருவாக்கிக் கொள்ளுதல், சகோதரர்களுக்கிடையிலுங்கூட போட்டி பொறாமையும் சுயநலக் குணங்களும் உருவாதல்.

வன்னி வாழ் மக்கள் எவ்வாறு அகதிகளாக மாறினார்கள்? அவர்கள் முள்ளிவாய்க்காலில் எவ்வளவு கஷ்டங்களை

அனுபவித்தார்கள்? இனக்கலவரங்களால் தமிழர்கள் அவ்வப் போது கடுமையாகப் பாதிக்கப்பட்டதால் பேரினத்துடன் வாழ முடியாது என்று தீர்மானித்து தாயக மண்ணுக்கு வந்து குடி யேறினாலும் இங்கும் இருக்கவிடாமல்எவ்வாறு யுத்தத்தை ஏவி விட்டார்கள்? ஆகிய விடயங்களை இந்நூலின் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டுவர முயன்றுள்ளேன்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்க்கல்விமான் திரு கந்தையா சரவணபவன் அவர்களைச் சிறிது காலம் தண்ணீ ரூற்று முள்ளியவளைப் பிரதேசத்தில் கல்விச் சேவை செய்ய வருமாறு நான் அழைத்தபோது அவரும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். ஆயினும் துரதிர்ஷ்ட வசமாக இம்முயற்சி கைகூடாமற் போனது. அதன் பின்னரே அவர் செம்மலைக்கு அதிபராகச் சென்றார். இதனால் தண்ணீரூற்று முள்ளியவளைப் பிரதேசம் அவரது சேவையை இழந்தது. திரு சரவணபவன் அவர்கள் தண்ணீரூற்று முள்ளியவளைப் பகுதியிற் சேவை யாற்றியிருந்தால் மேலும் பல தமிழறிஞர்களையும் இலக்கிய வாதிகளையும் இப் பகுதியில் உருவாக்கியிருப்பார் என்பது திண்ணம். எல்லாம் அளந்த அளவு.

இவருடைய ஊரவராகிய திரு சிவபாலன் குணபாலன் அவர்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராக வந்தபின்பு இப்பகுதியின் இலக்கியத் துறையில் ஒரு பேரெழுச்சி உருவாகி யுள்ளது. இந்த வகையில் ஏனைய அறிஞர் பெருமக்களும், எழுத் தாளர்களும் இலக்கியவாதிகளும், கவிஞர்களும் எதிர்காலத்தில் எழுத்தாளர்களாக உருவாகவிருக்கும் இளைஞர்களும் ஒன்றிணைந்து அடிமைவிலங்கொடிக்கப் பாடுவோம், எழுது வோம் வாருங்கள்! என்று அறைகூவல் விடுத்து இத்துடன் என்னுரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

**கா.தவபாலச்சந்திரன்**
**பீ.ஏ. அரசியல் விஞ்ஞானம்**
**காமராஜர் பல்கலைக்கழகம்**
**மதுரை**

## உள்ளே...

1. தண்ணிமுறிப்புக் குளம்
2. திருமணப் பேச்சு
3 மெல்லத் திறந்தது கதவு
4. தேமாவடி
5. குடிக்காதேங்கோ
6. சின்ன வயசு ஆசைகள்
7. கலப்புத் திருமணம்
8. காதல் திருமணம்
9. டொனேஷன்
10. தனிக் குடித்தனம்
11. குடி குடியைக் கெடுக்கும்
12. இரவல் சங்கிலி
13. அகதியாய் ஓடமாட்டேன்
14. சூனியப் பிரதேசம்
15. நிலவே நீ சாட்சி
16. மீள் குடியேற்றம்
17. சம்பளக்காசு
18. கொண்டு வந்த சீதனம்
19. பட்டம்
20. தாய் மண்
21. இப்படியும் மனிதர்கள்
22. காரில் வந்த காரிகை
23. உண்மைக் காதல்
24. காணவில்லை
25. தாயக பூமி

# தண்ணிமுறிப்புக் குளம்

பல நாட்களாக அடைமழை பெய்த பின்னர் அன்று மழை வெளித்து வெயில் பிரகாசமாக எறித்துக் கொண்டிருந்தது.

செல்லத்துரையும் சின்னையாவும் ஊர்ப் புதினங்கள் பற்றிக் கதைத்தபடியே சாராயம் குடித்துக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. மதியம் ஒருமணி போலத் தனது மனைவி தங்கம்மாவை அழைத்த செல்லத்துரை "என்னப்பா சமையல் முடிஞ்சுதா?" என்று கேட்டார்.

"நீங்கள் குளிச்சிட்டு வாருங்கோவன், அதுக்கிடையிலை சமையல் முடிஞ்சிடும்" என்றா தங்கம்மா.

மதுவருந்திவிட்டு இருக்கும் நேரங்களில் செல்லத்துரை மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார். மனைவியின் கருத்துக்கு மாற்றுக் கருத்துச் சொல்லமாட்டார். குளித்துவிட்டு வருமாறு மனைவி சொன்ன சொல்லை ஏற்று நண்பர்கள் இருவரும் குளித்துவிட்டு வந்த போது வெறி கொஞ்சம் குறைந்தது போல இருந்தது.

சுடச்சுடச்சாப்பாடு தயாராக இருந்தது. நன்றாகத் தீட்டிய பச்சையரிசிச்சோறு, கோழி இறைச்சிக்கறி, மீன் பொரியல், இறால் சொதி, கத்தரிக்காய் வெள்ளைக்கறி, முளைக் கீரை மசியல், அவித்த முட்டை என்பனவே தங்கம்மா செய்த சமையல். "சாப்பாடுநல்லாயிருக்கு" என்று தங்கம்மாவைப் பாராட்டியபடி நண்பர்கள் இருவரும் நன்றாகச் சாப் பிட்டார்கள்.

"உண்ட களை தொண்டருக்குமுண்டு" என்ற பழமொழிக் கிணங்க இருவரும் சிறிது நேரத்தில் படுத்து

நித்திரையாகி விட்டார்கள்.

செல்லத்துரை தண்ணிமுறிப்புக் கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட நிலவுடைமையாளர். இவர் தனதுவயல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒழுங்காகக் கூலி கொடுக்கமாட்டார். எல்லைகளை மாற்றிப் போட்டு அயலவர் காணிகளைக் கைப்பற்றுவார். வயல்களில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளைக் களவாகப் பிடித்துக் கொழும்பிலுள்ள இறைச்சிக் கடைகளுக்கு அனுப்புவதற்கு ஆட்களைக் கைவசம் வைத்திருந்தார்.

குறி இல்லாமல் திரியும் பசுக்கன்றுகளைப் பிடித்துத் தன் பெயரில் குறி சுட்டுவிடுவார்.

வாக்காளர்களுக்குப் பணமும் சாராயமும் லஞ்சமாக வழங்கித் தேர்தலில் வென்று கிராமசபை உறுப்பினராக வந்து விடுவார். கிராமசபை ஒப்பந்தங்களைப் பினாமி மூலம் எடுத்து அரைகுறையாக வேலைசெய்துவிட்டு மக்களின் பணத்தைச் சுருட்டிக்கொள்வார். இவ்வாறு தவறான கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டவர் தான் செல்லத்துரை என்ற இந்த மனிதர்.

"இஞ்சேருங்கோ வயலுக்குப் போகவேணும்எண்டு சொன்னியள் எழும்புங்கோ" என்று கூறிச் செல்லத்துரையை நித்திரையால் எழுப்பிவிட்டா தங்கம்மா. செல்லத்துரையும், சின்னையாவும் கால்முகம் கழுவியபின் தங்கம்மா சுடச் சுடத் தயாரித்த தேநீரை அருந்தினார்கள். தேநீர் வேளை முடிந்ததும் "சின்னையா ஒருக்கால் வயற்பக்கம் போய் வருவோமா?" என்றார் செல்லத்துரை. அவரும் சம்மதிக்கவே செல்லத்துரை வேட்டைத் துவக்கையும், சின்னையா மண்வெட்டியையும் எடுத்துக்கொண்டு கால் மைல் தூரத்தில் உள்ள வயலை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

வயலை அடைந்த இருவரும் நடை வரம்பின்மீது நடந்தபடி வயலை நோட்டம் விட்டார்கள். வயல்களில் தண்ணீர் நிறைவாக நின்றது. செழிப்பாக வளர்ந்திருந்த பயிர்கள் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தமையானது அழகான

காட்சியாக இருந்தது. மிகவும் திருப்தியடைந்த செல்லத்துரை "குளப்பக்கம் போய் வருவோம்" என்று சொல்ல சின்னையா விருப்பத்துடன் தலையாட்டவே இருவருமாக அரைப்பனை யளவு உயரமாகக் காணப்பட்ட தண்ணிமுறிப்புக் குளக்கட்டின் மீது ஏறத் தொடங்கினார்கள்.

மாரி காலமாதலால் குளத்தில் நீர் நிரம்பி வான் பாய்ந்து கொண்டிருந்தது. இது நீர்வீழ்ச்சிபோல அழகான காட்சியாக இருந்தது. பொது மக்கள் பலரும் நீர்வீழ்ச்சியைக் கண்டு களிக்க வந்திருந்தார்கள்.

சின்னையா மெதுவாகப் பின்னால் திரும்பிப் பார்த் தார். குளக் கட்டுக்குக் கீழ்ப்பக்கமாக மாடுகள் புல் மேய்ந்து கொண்டு நின்றன. இளங்கன்றுகள் வாலைக் கிளப்பியபடி அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தன. அவற்றின் பாது காப்புக் கருதித் தாய்ப்பசுக்கள்கன்றுகளின் பின்னால் ஓடிக் கொண்டிருந்தன. பசுக்களின் பிள்ளைப்பாசத்தைச் சின்னையா வியப்புடன் அவதானித்துக்கொண்டிருந்தார்.

ஆனால் செல்லத்துரைக்கோ இவற்றையெல்லாம் பார்க்க நேரம் இருக்கவில்லை. அவருடைய கவனம் முழுவதும் குளத்தின் நடுவே நின்ற பட்ட மரங்களின்மீது அமர்ந்திருந்த கொக்குகளின் மீதே இருந்தது. அவர் துவக்கை லோட் பண்ணிக் கொக்குகளைக்குறிவைத்தார். இவர் வைத்த குறி ஒருபோதும் தப்பியதில்லை. டுமீல். கொக்கொன்று சூடுபட்டுச் சுருண்டு விழுந்தது.

இந்தப் பயங்கரத்தைக் காண விரும்பாமலோ என்னவோ செங்கதிரோன் மெல்ல மேற்கில் மறைய ஆரம்பித் தான். அந்தி வானத்தின் சிவப்பு நிறம் குளத்தில் பிரதிபலித்த போது தண்ணீர் பொன்னீராக ஜொலித்துக்கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

"சின்னையா நீந்திப் போய்க் கொக்கை எடுத்து வாறியா?" என்று செல்லத்துரை கேட்க "எனக்கு வடிவாய் நீந்தத் தெரியாதண்ணை! இருட்டுற நேரம் ஏன் குளத்துக்கை இறங்கி அவலப்படுவான்? பேசாமல் வீட்டை போவம்" என்றார்

சின்னையா.

"நீ ஒரு பயந்தாங்கொள்ளி! இந்தா துவக்கை வைச்சிரு நான் போய்க் கொக்கை எடுத்துக்கொண்டு வாறன்பார்" என்று கூறிய செல்லத்துரை சின்னையாவின் பதிலை எதிர்பார்க் காமலே குளத்திற் குதித்து நீந்தத் தொடங்கினார்.

அப்போது பென்னம்பெரிய மரக்கட்டைஒன்று நீரில் மிதப்பது போல இருந்தது. செல்லத்துரை அதனை உற்றுப் பார்த்தார். ஆம்! அது மரக்கட்டை அல்ல முதலை. அது இவரை நோக்கியே வந்துகொண்டிருந்தது. செல்லத்துரை செய்வதறி யாது "ஐயோ முதலை" என்று அவலக்குரல் எழுப்பினார். சின்னையாவும் "ஐயோ ஐயோ" என்று கத்தினார். அதைத் தவிர அவரால் வேறென்னதான் செய்ய முடியும்? அவர்ஏற்கனவே சொன்னார் "கொக்கு வேண்டாம் வீட்டை போவம்" என்று. "கெடு குடி சொற்கேளாது" என்ற பழமொழி செல்லத்துரையின் விடயத்தில் நன்றாகப் பொருந்திவிட்டது.

கண்ணிமைக்கும் நேரத்தில் முதலை செல்லத்துரையைக் கவ்விப் பிடித்து அவர் கதறக் கதற நீருக்குள் இழுத்துச் சென்று விட்டது.

ஊரில் செல்வாக்குள்ள பெரிய பணக்கார முதலை செல்லத்துரை. அவரையும்விடப் பெரிய முதலை தண்ணி முறிப்புக் குளத்துக்குள் இருக்கிறது என்ற உண்மையை நேரில் கண்டுகொண்ட சின்னையா அதிர்ச்சியால் உறைந்து செய்வதறி யாது திகைத்துப் போய் நின்றார்

நன்றி – மல்லிகை

**குறிப்பு: குமுழமுனையிலிருந்து நெடுங்கேணிக்குச் செல்லும் பாதை யில் வரலாற்றுப் புகழ் பெற்ற குருந்தூர் மலைக்கு அண்மையில் தண்ணி முறிப்புக் குளம் அமைந்துள்ளது. நாகர்களின் காலத்தில் இப்பிரதேசத்தில் இருந்த "குருந்தன் குளத்தின்" மறுபெயர் தான் தண்ணி முறிப்பா? என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். இது முல்லை மாவட்டத்திலுள்ள இரண்டாவது பெரிய குளமாகும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒதியமலை இந்தக் குளத்தில் இருந்து 2 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.**

# திருமணப் பேச்சு

கணுக்கேணிக் கணபதிப் பிள்ளை யரும் அவரது மனைவி கமலாம்பிகையும் மகள் சாந்தியின் திருமண விடய மாகப் பேசு வதற்காகக் குமுழமுனைக் கிராமத்தை நோக்கி ஆட்டோவில் சென்று கொண்டிருந்தார்கள்.

கணுக்கேணியிலிருந்து மூன்று மைல் களுக்கு அப்பால் இருக்கும் முறிப்புக் குளக் கட்டுச் சந்தியை அடைந்தவுடன் கமலா கேட்டா "இஞ்சேருங்கோ ஒருக்கால் முறிப்புக் குளத்தைப் பாத்துக்கொண்டு போவமா" என்று.

கணபதிப்பிள்ளையரும் அதற்குச் சம்மதிக்கவே சந்தியில் இருந்து கண்ணுக் கெட்டிய தூரத்திலிருக்கும் குளத்தைநோக்கி ஆட்டோ ஓடத் தொடங்கியது.

குளத்தைக் கண்டவுடன் கமலா ஆச் சரியம் அடைந்து உதென்ன முல்லைத்தீவுச் சமுத்திரம் போலையெல்லோ இருக்குது என்றா. நாலூறு படுத்தாதையப்பா கரை துறைப் பற்று விவசாயிகள் அரிசித் தேவைக்காக நம்பியிருப்பது இந்தக் குளத்தைத்தான் என்றார் கணபதிப்பிள்ளையர்.

குளத்தில் ஒரு விதமான கறுப்பு நிறப் பறவைகள் நீருக்குள் அமிழ்வதும் வெளியே வருவதுமாக இருந்தன. "உதென்ன தண்ணிக்குள்ளை பறவை சுழியோடுகிறதே ஆச்சரிய மாய் இருக்கு" என்றா கமலா.

உந்தப் பறவையின் பெயர் நீர்க்காகம். உது தண்ணிக்

குள்ளை சுழியோடித்தான் தனக்கு வேண்டிய மீனைப் பிடித்துக் கொள்வது வழக்கம்" என்றார் கணபதிப்பிள்ளையர்.

குளக்கரையில் மருதமரக்கிளைகளில் கொக்குகள் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருப்பதைப் பார்த்தபோது மரங்களில் வெள்ளைப் பூக்கள் பூத்திருப்பதைப் போல அழகாக இருந்தது.

விதம் விதமான பறவைகள் தம் விருப்பம் போல எதை எதையோ பாடிக்கொண்டு அங்குமிங்குமாகப் பறந்து திரிந்தன. மாடுகளும், குரங்குகளும் குளத்தில் விருப்பம்போல நீர் குடித்து மகிழ்கின்றன.

சிறுவர்களும் சிறுமியர்களும் குளத்தில் நீராடி மகிழ் கின்றனர். மாரிகாலமாதலால் குளம் வான் பாய்ந்து கொண்டி ருந்தது. அதை மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற் கின்றனர்.

குளக் காட்சிகளைக் கண்டு ரசித்த கணபதிப்பிள்ளை தம்பதியினர் மீண்டும் ஆட்டோவில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். மேலும் 3 மைல்தூரம் பிரயாணம் செய்த பின்னர் குமுழமுனைக் கிராமத்தைச் சென்றடைந்து செல்லை யாவின் வீட்டை விசாரித்து அவர்களின் வீட்டடியில் போய் ஆட்டோவை நிற்பாட்டினார்கள்.

ஆட்டோ வந்து நின்ற சத்தம் கேட்டு செல்லையரும் மனைவி தங்கம்மாவும் முற்றத்துக்கு வந்தார்கள். ஆட்டோவில் வந்தது யாரென்று இனம் கண்டுகொண்டு "ஆ... வாருங்கோ" என்று வரவேற்றார்கள்.

கதிரைகளில் இருக்கச்சொல்லி சிற்றுண்டி தேநீர் கொடுத்து உபசரித்தபின் சிறிது நேரம் பலதும் பத்தும் கதைத்தார்கள். அதைத் தொடர்ந்து செல்லையர் சொன்னார் "சாதகம் நல்ல பொருத்தமாயிருக்குது. பெண் பார்க்கும் வைபவத்தையும் முடித்துக் கொண்டு ஏனைய விபரங்களைக் கதைக்கலாம்" என்று.

"ஓமோம் கணுக்கேணி கற்பகப் பிள்ளையார் கோயி லிலை பெண் பார்க்கும் வைபவத்தை ஒழுங்கு செய்யலா

மென்று கணபதிப்பிள்ளையர் சொன்னார்.

அதற்குரிய நாளையும் கதைத்து ஒழுங்கு செய்தபின்னர் “அப்ப நாங்கள் போட்டு வாறம்” என்று சொல்லி கணபதிப் பிள்ளை தம்பதியினர் விடைபெற்றுச் சென்றுவிட்டார்கள்.

வீடு போய்ச் சேர்ந்தபின்னர் கமலா கேட்டா “பொடி யனைப்பற்றி நல்லாய் விசாரிச்சனீங்களோ” என்று.

“இனி என்ன விசாரிக்க இருக்குது. செல்லையர் பகுதி குமுழமுனையிலை சுண்டியெடுத்த வெள்ளாளர். ட்றாக்ரரும் காரும்மோட்டார் சைக்கிளும் வைச்சிருக்கினம். ஏராளமான வயல்காணியள் இருக்காம். பொடியன் வயல் தோட்ட வேலை யிலை நல்ல கெட்டிக்காரனாம். குடும்பத்திலை இவர்தான் ஒரே யொரு பிள்ளையாம். எல்லாச் சொத்துகளும் சாந்தியின் கைக்கு வந்து சேரப்போகுது. சாந்திக்கு குருசந்திரயோகம் இருக்கெண்டு எல்லாச் சாத்திரிமாரும் சொல்றது. அது தான் நல்ல இடம் வந்து அம்பிட்டிருக்குது” என்று கூறி முடித்தார் கணபதிப்பிள்ளையர்.

கணவன் கூறியதைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த கமலா “நீங்கள் ஒருக்கால் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்குப் போய் இன்ன நாள் மோதகபூசை செய்யவேணுமெண்டு சொல்லிப்போட்டு வாருங்கோ” என்று கூறினா.

மனைவியின் கட்டளைப்படி கோவிலுக்கு விரைந்தார் கணபதிப்பிள்ளையர். ஐயர் கோவிலுக்கு முன்னால் உள்ள அரச மரத்தின்கீழ் இருந்து யாருக்கோ சாதகப் பொருத்தம் பார்த்துக் கொண்டிருந்தார்.

கணபதிப்பிள்ளையர் தன்னை நோக்கி வருவதைக் கண்ட ஐயர் “ஆ... என்ன இந்தப் பக்கம் என்ன விசேஷம்” என்று கேட்டார்.

“எங்களின்ரை மகளுக்குமெல்லோ கலியாணம் முற் றாய்ப் போச்சுது” என்றார் கணபதிப்பிள்ளையர். “ஆ... சொல்லவேயில்லையே! ஆர் மாப்பிளை?”

“குமுழமுனைச் செல்லையற்றை ஒரேமகன் சிவநேசன்” என்றார் கணபதிப்பிள்ளையர்.

ஐயர்சிறிதுநேரம்யோசித்தார்.

"சொல்லுறனெண்டு குறை நினைக்கவேண்டாம் திருமணமென்பது ஆயிரம் காலத்துப் பயிர். பொம்பிளைப் பிள்ளைகளைக் கண்ட இடத்திலை தள்ளி விடப்படாது. உந்த இடம் சரியில்லை வேறை இடம் பாருங்கோ" என்றார் ஐயர்.

"நீங்கள் சொல்றது ஒண்டுமாய் விளங்கவில்லை. சற்று விளக்கமாய்ச் சொல்லுங்கோ" என்றார் கணபதிப்பிள்ளையர்.

செல்லையர் குடும்பம் ஒறிச்சினல் வெள்ளாளர்தான் அதிலை ஒரு பிரச்சனையும் இல்லை. சொத்துப் பத்தும் நிறைய இருக்குது தான்.

ஆனால் அந்தப் பொடியன்ரை குணம் சரியில்லை. கூட்டாளிமாரோடை சேர்ந்து எந்தநாளும் சாராயம் குடிக்கிற தும் சண்டித்தனம் பண்றதும்தான் அவன்ரை வேலை.

அதுமட்டுமல்ல ஒரு திருமணமான பெண்ணோடை கள்ளத் தொடர்பும் இருக்குது எண்டு கதை அடிபடுகுது.

நான் சொல்லவேண்டியதைச் சொல்லிப்போட்டன். நீங்கள் எதுக்கும் வேறை ஆக்களிட்டையும் விசாரிச்சுப் பாருங்கோ. அவசரப்பட்டு முடிவுஎடுக்கவேண்டாம்.

நான்தான் செல்லையர் வீட்டுப் புதினம் சொன்ன தெண்டு ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் என்று கூறி முடித்தார் ஐயர்.

கணபதிப்பிள்ளைக்குத் தலை சுற்றியது. "ஐயா! நீங்கள் கடவுள் மாதிரித் தக்க தருணத்திலை என் மகளைக் காப்பாற்றி விட்டீயள். உங்களுக்கு எப்பிடி நன்றி சொல்றது என்றே தெரிய வில்லை" என்று கூறி இருகரம்கூப்பி விடைபெற்றார் கணபதிப் பிள்ளையர்.

# மெல்லத்திறந்தது கதவு

தண்ணீரூற்றைச் சேர்ந்த முத்தையா-மீனாட்சி தம்பதி யின் மூத்த புதல்வன் வசந்தன் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றுகின் றான். இவனுக்கும் கணுக்கேணிச் சின்னத் தம்பியின் மகள் கலைவாணிக்கும் திருமணம் பேசப்பட்டது.

சாதகப் பொருத்தம் பார்த்த மகா லிங்கம் சாத்திரியார் "80 வீதம் பொருத்தம் இருப்பதால் திருமணம் தாராளமாகச் செய்யலாம்" என்று பொருத்த அறிக்கையை எழுதிக் கொடுத்தார்.

ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற திருவிழாவின் போது மாப்பிளையும், பொம்பிளையும் ஒருவரையொரு வர் பார்த்துத் தத்தமது சம்மதத்தைப் பெற் றோரிடம் தெரிவித்து விட்டார்கள்.

மீனாட்சியின் தம்பி வேலாயுதம் யாழ்ப் பாணத்தில் வசித்து வந்தார். இவரின் மகள் புஷ்பா யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்று கின்றாள். இவளுக்கு இவளது முறை மச்சானாகிய வசந் தனையே திருமணம் செய்ய வேண்டுமென்பது வேலாயுதம் தம்பதியின் விருப்பமாக இருந்தது.

ஒரு நாள் தமக்கையாரின் வீட்டுக்கு விஜயம் செய்த வேலாயுதம் தமது விருப்பத்தைத் தமக்கையாரிடம் தெரிவித்

தார். "வீடுவளவு, நகைநட்டு, காணிபூமி, காசுகளஞ்சு எல்லாம் வேண்டிய அளவு தரலாம்," என்று தமக்கையிடம் ஆசை வார்த்தை கூறினார்.

மீனாட்சி யோசித்துப் பார்த்தா. சின்னத்தம்பியிடம் காசு பெரிதாக இல்லை. ஆனால் வேலாயுதத்திடம் எக்கச்சக்கமான காசு இருக்கிறது. கலைவாணிக்கு உத்தியோகம் எதுவும் இல்லை, ஆனால் புஷ்பா ஆசிரியையாக வேலை பார்த்து உழைக்கின் றாள். சின்னத்தம்பியாக்கள் சொந்தக்காரர் அல்லர். ஆனால் புஷ்பா வசந்தனுக்கு முறைப் பெண். ஒண்டுக்குள்ளை ஒண்டு.

இவ்வாறு இரண்டு இடங்களையும் சீர் தூக்கிப் பார்த்து ஒப்பீட்டளவில் சிறந்ததாகக் காணப்படும் வேலாயுதம் குடும் பத்தில் சம்பந்தம் வைப்பதே நல்லது என்ற முடிவிற்கு வந்த மீனாட்சி, தம்பியிடம் கூறினா.

"தம்பி நீங்கள் முதலே எம்முடன் தொடர்பு கொண்டி ருக்கலாம் அவ்வாறு செய்யவில்லை நாங்கள் வேறை இடத் திலை பேசி ஒழுங்கு செய்திட்டம் எதுக்கும் நான் இவரோடை யும், மகனோடையும் கதைச்சுப்போட்டு உனக்கு விபரம் சொல்லு வேன்." என்று கூறித் தம்பியாரை வழியனுப்பி வைத்தா.

அன்றிரவு கணவனிடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்தா. "இஞ்சேருங்கோ தம்பி வேலாயுதம் தன்ரை மகள் புஷ்பாவை வசந்தனுக்குச் செய்யட்டாம் புறத்தியாருக்குள்ளை சம்பந்தம் வைக்க வேண்டாமாம் தான் போதிய சீதனம் தாற தாம் வசந்தன்ரை முறைப்பெண் தானே செய்து வைப்ப முங்கோ" என்றா மீனாட்சி.

கலைவாணிக்குச் செய்யிறதாய் முடிவு செய்து, அவர்கள் பூரணமாக நம்பிக்கொண்டு இருக்கத் தக்கதாக எப்பிடி அதைக் குழப்புறது? சனம் என்ன சொல்லும்? என்றார் முத்தையர்.

"கலியாணம் பல இடங்களிலையும் பேசிக் குழம்புறது வழக்கம் தானே, உதை ஒரு பெரிய விஷயமாய் எடுக்கத் தேவை யில்லையுங்கோ", காலாகாலமாய்க் காதலிச்சுப்போட்டுப் பிறகு அதைக் கைவிட்டு வேறை இடத்திலை கலியாணம் செய்யினம். கலியாணப்பேச்சைக் கைவிடுறது பெரிய வேலையா? என்றா

மீனாட்சி.

"மகன் பொம்பிளையைப் பாத்துச் சம்மதம் சொன்ன பிறகு நீர் ஏன் சும்மா குழப்பிக்கொண்டு நிற்கிறீர்? உது சரியில் லாத வேலை. எதுக்கும் வசந்தனோடை கதைச்சுப் பாரும் அவன்ரை முடிவு என்னவென்று கேட்டு அதன்படி இறுதி முடிவை எடுக்கலாம்" என்றார் முத்தையா.

மீனாட்சி மகன் வசந்தனுடன் கதைத்தா. "தம்பி! உன்ரை மாமா வேலாயுதம் தன்ரை மகள் புஷ்பாவை உனக்குச் செய்வ மெண்டு கேக்கிறான், நிறையச் சீதனம் தருவான், முறை மச்சாளை விட்டிட்டு வெளியிலை செய்யிறதும் சரியில்லைத் தானே! பேசிய இடத்தை வேண்டாமெண்டு சொல்லிப் போட்டுப் புஷ்பாவைச் செய்வமா தம்பி?" என்றா மீனாட்சி.

"அம்மா! வேலாயுதம் மாமா தன் மகளுக்கு டாக்டர், எஞ்சினியர் எண்டு பெரிய இடங்களாய்ப் பாத்துத் திரிஞ்சவர் சரிவராதபடியாற் தான் முறை மச்சானைப் பற்றி ஞாபகம் வந்திருக்குது, உவையளின்ரை மாய்மாலத்துக்கு ஏமாற நான் தயாரில்லை, நான் கட்டினால் கலைவாணியைத் தான் கட்டுவன், வேறை இடங்களிலை பேசி மினைக்கட வேண் டாம்" என்று கூறிய வசந்தன், வேகமாகத் தனது அறைக்குச் சென்று கதவை உட்புறமாகப் பூட்டிக் கொண்டான்.

நேரம் இரவு **12** மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. "சாப்பிட வா தம்பி" என்று தாய் பலமுறை கதவில் தட்டிய போதும் கதவு திறக்கப்படவில்லை. "சரி சரி கனுக்கேணிக் கலியாணத்தையே செய்வம் கதவைத் திற" என்று கூறிக் கதவைத் தட்டிய போது கதவு மெல்லத் திறந்து கொண்டது.

நன்றி – ஜீவநதி

# தேமாவடி

அப்போது எனக்கு ஒரு பத்து வயது இருக்கும். அன்று நானும் எனது நண்பனும் அவனது அப்பாவுமாக யாழ்ப்பாணம் போன பயணம் திரும்பி வரத் தாமதமாகிவிட்டது. யாழ்ப் பாணம் - முல்லைத்தீவு பஸ்சில் பிர யாணம் செய்து தண்ணீரூற்று ஆலடியில் வந்திறங்கிய போது இரவு பத்து மணி ஆகி விட்டது.

ஆலடிக்கு அண்மையில்தான் அவர் களின் வீடு இருந்தது. என் வீடு வரை எனக்குத் துணையாக வருவதாக நண்பனின் அப்பா கூறினார். "பிரச்சினையில்லை அங்கிள் நான் சமாளித்துக் கொள்வேன்." என்று கூறி அவர் களை வழியனுப்பி வைத்துவிட்டு முருகேசு ஒழுங்கையில் இறங்கிய போது மழை இலே சாகத் தூற ஆரம்பித்தது. தேமாவடிப் பாலத்தை அண்மித்த போது எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

காரணம் சிறு வயதில் தம்பியும் தங்கையும் சாப் பிடாமல் அடம்பிடிக்கும் தருணங்களில் "தேமாவடிப் பேய் வரப்போகுது கெதியாய் சாப்பிடுங்கோ" என்று சொல்லித்தான் அம்மா அவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பது வழக்கம்.

அந்த வகையில் தேமாவடிப் பேய் என்றால் எனக்கும் சரியான பயம். ஆனால் நான் பயந்தபடி தேமாவடிப் பாலத் தடியில் வித்தியாசமாக ஒன்றையும் காணாதபடியால் நிம்மதிப் பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டு குமாரபுரம் வீதியில்

காலடி வைத்தேன்.

"அப்போது பென்னம் பெரிய கறுப்பு மிருகமொன்று வழியைப் பூரணமாக அடைத்துக் கொண்டு நின்றது. அமாவாசை இருட்டுக்குள் ஒன்றையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. மழையும் தன் பங்கிற்கு சோவென்று பெய்ய ஆரம்பித்தது.

"பேய் வழியை மறித்துக் கொண்டு நிற்கின்றது. நான் இன்று வசமாக மாட்டிக் கொண்டுள்ளேன். இன்றுடன் என் ஆயுள் சரி" என்று பயந்து எனது குல தெய்வத்தை நினைத்துக் கண்களை மூடிக் கொண்டேன். சிறிது நேரத்தால் கண்ணைத் திறந்து பார்த்தேன். பேயால் எனக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட்டிருக்கவில்லை. கடவுள் காப்பாற்றிவிட்டார் என்று எண்ணிக்கொண்டேன்.

நான் மெதுவாகப் பின்னால் நகர்ந்து வேறு பாதையால் வீட்டுக்குச் சென்றுவிட்டேன். அம்மா என்னைக் கண்டு மகிழ்ந்தாலும் மறுகணம் நான் மழையில் நனைந்திருப்பதைக் கண்டு கவலைப்பட்டு ஓடிச் சென்று துவாயை எடுத்து வந்து தலையை நன்றாகத் துடைத்துவிட்டா. "கை, காலைக் கழுவிக் கொண்டு வா தம்பி சாப்பிட" என்றா.

நான் நடந்த ஒன்றையும் அம்மாவிடம் கூறவில்லை. "எனக்குப் பசிக்கவில்லையம்மா" என்று கூறினேன். "தேமா வடிப் பேய் வரப்போகுது கெதியாய் சாப்பிடுங்கோ" என்று அம்மா தம்பியையும் தங்கையையும் மிரட்டியது ஞாபகத்திற்கு வருகின்றது. காய்ச்சல் மாதிரி இருக்கவே இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்துவிட்டேன்.

அப்போது தேமாவடிப் பேய் இராட்சத உருவில் வந்து என்னைப் பயமுறுத்தியது. பேயின் பற்கள் வெளியே நீண்டி ருந்தன. தலையில் எருமை மாட்டுக் கொம்புகள் போல இரண்டு கொம்புகள் இருந்தன. கொம்பால் இடிக்கும் பாவனையில் பேய் என்னை நோக்கி ஓடி வந்தது. நான் திடுக்கிட்டுக் கண் விழித்தேன்.

சிறிது நேரத்தால் சேவல்களும், குயில்களும் மாறி மாறிக் கூவத் தொடங்கின. விடிந்ததை உணர்ந்து கொண்ட நான் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன். நேரம் அதி காலை ஆறு மணி இருக்கும். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அம்மா தந்த சூடான தேநீரைக் குடித்துவிட்டு அம்மாவுக்குச் சொன்னேன்.

"அம்மா நான் நேற்று இரவு தேமாவடியில் பேயைக் கண்டேன்" என்று. அம்மா சிரித்துவிட்டுச் சொன்னா,

"அது முந்தின காலத்திலைதான் பேய் பிசாசு உலாவுறது. இந்தக் காலத்திலை பேயும் இல்லை பிசாசுமில்லை" என்று.

"ராத்திரி நான் கண்ணாலை கண்டனானம்மா பேயை. தேமாவடியிலையிருந்து குமாரபுரம் பாதைப் பக்கம் கறுப்பு நிறத்திலை வழியை அடைச்சுக்கொண்டு பேய் நிண்டது. நான் பிறகு ராமலிங்கச் சாத்திரியார் வளவடியாலை வந்துதான் வீட்டை வந்தனான்"

"தேமாவடிப் பாலத்தடியிலை பேய் நிக்கும் எண்டு பயந்து பயந்து வந்திருப்பாய் அதுதான் அமாவாசை இருட்டைக் கண்டு பேய் எண்டு பயந்திருப்பாய்" என்றா அம்மா.

"நான் எதற்கும் தேமாவடிக்குப் போய் பார்த்துக் கொண்டு வாறன் அம்மா" என்று கூறிவிட்டு "விறுவிறு" என்று நடந்தேன். தேமாவடிப் பாலத்தருகில் நான் கண்ட காட்சி யாவது, சடைத்து வளர்ந்திருந்த வேப்ப மரம் குமாரபுரம் வீதிக்குக் குறுக்காக விழுந்து கிடந்தது. அதன் கிளைகளும் திரள்திரளான இலைகளும் நிலத்திலிருந்து ஏறக்குறையப் பத்து அடி உயரம் வரை வியாபித்திருந்தன.

நன்றி - தாயக ஒலி

# குடிக்காதேங்கோ

"குடிக்காதேங்கோ எண்டு உங்களுக்கு எத்தின தரம் சொல்றது குடியை நிப்பாட்டி னால் எவ்வளவு நல்லதெண்டு ஒருக்கா யோசிச்சுப் பாருங்கோ" என்றாள் குமாரி.

"உன்ரை சீதனக் காசிலையா நான் குடிக்கிறன் என்ரை சம்பளக் காசில தானே குடிக்கிறன் சும்மா வசனம் பேசிக் கொண்டிருக்க வேண்டாம்" என்று காட்டமாகப் பதிலளித் தான் கணவன் மூர்த்தி.

"சீதனம் தரவில்லையென்று எந்த நாளும் குத்திக் காட்டுறியள். ஏன்? கொழுத்த சீதனத்தோட வேறு இடம் பார்த்திருக்கலாம் தானே. ஏன் என்னைக் காதலிச்சனீங்கள்."

"அது தானே நான்விட்ட பிழை"

"உந்த அடுப்பை ஒருக்கால் பார்த்துக் கொள்ளுங்கோ நான் உடுப்பை அயண் பண்ணிப்போட்டு டக்கெண்டு குளிச்சிட்டு வாறன் கந்தோருக்கு லேற் ஆகுது அந்த மனுசன் றெட் லைன்அடிக்கப்போகுது"

"எங்களின்ர கந்தோரிலையுந் தான் றெட் லைன் அடிக்கிறது. அடுப்பை நீயே பாரப்பா. நான் போகப்போறன்"

"அடுப்படி வேலை முடிஞ்சால் தானே சாப்பிட்டு விட்டுப் போகலாம்"

"எனக்குச் சாப்பாடு வேண்டாம் நான் அங்கின கன்ரீனிலை எதையாவது சாப்பிட்டுத் துலைக்கிறன். அப்ப

நான் போறன்"

பின்னேரம் இருவரும் கந்தோரால் வந்த பின்னர் மீண்டும் வாக்குவாதம் தொடங்கியது.

"வெள்ளிக் கிழமைகளிலை கோயிலுக்குப் போகலாம் எண்டால் உங்களுக்கு விருப்பம் இல்லை வெள்ளிக்கிழமை பின் நேரம் கந்தோராலை அப்பிடியே உங்கடை அம்மா வீட்டை போறியள் திங்கட்கிழமை காலமை அவை வீட்டில இருந்து கந்தோருக்குப் போய் திங்கள் பின்நேரம் தான் வீட்டை வாறியள் ஒரு கிழமையிலை நாலு நாள் அம்மா வீடு. மூண்டு நாள் மட்டுமே மனைவி வீடு இப்பிடி நடக்கிறது உங்களுக்கே நல்லா இருக்கா?"

"அம்மா, அப்பா எங்கட வீடு தேடி வந்தால் நீ முகம் குடுத்துக் கதைக்கிறதில்லை. மூஞ்சையை நீட்டுறது. அதனாலை தான்அவையள் இஞ்சை வாறதை விட நானே அங்கை போய் அம்மா, அப்பாவைப் பார்த்திட்டு வாறது நல்ல தெண்டு முடிவு எடுத்தனான்"

"என்ரை அம்மா அப்பா வந்தால் மட்டும் மாமா மாமி எண்டு தேனொழுகக் கதைக்கிறியளாக்கும் அவையின்ரை தலைக் கறுப்பைக் கண்டதும் ஷேர்ட்டைக் கொழுவிக் கொண்டு எங்கையாவது ஊர் சுத்தப் போறது"

"சீதனம் ஒண்டும் தராமல் உன்னை மட்டும் என்ரை தலையிலை கட்டிவிட்டவை. உவையோடை நான் என்னத் தைக் கதைக்கிறது"

"சீதனம் தராவிட்டாலும் தம்பிமார் வெளி நாடு களுக்குப் போன பிறகு எந்த நாளும் காசு அனுப்புறாங்கள் வீடு கட்ட உதவி செய்தவங்கள் வெளிநாட்டுக் காசிலை அப்பா, கடை போட்டு அவரும் எவ்வளவோ காசுகள் எங்களுக்குத் தாறார். காசுகளை வாங்கிப் போட்டு நன்றி இல்லாமால் கதைக்கிறது நல்லதில்லை.

"அப்பனும் தம்பிமாரும் காசு தாறதாய் எந்த நாளும் குத்திக் காட்டுறாய் அவையின்ரை பிச்சைக் காசு எனக்குத்

தேவையில்லை இனிமேல் காசு தரவேண்டாம் எண்டு அவையளுக்குச் சொல்லிவிடு"

"இரண்டு பொம்பிளைப் பிள்ளையளைப் பெத்து வைச்சுக் கொண்டு அப்பாவும் தம்பி மாரும் விரும்பித் தாற காசை ஏன் வேண்டாமெண்டு சொல்லுவான்? நீங்களும் பொறுப்பில்லாத ஆளாய் இருக்கிறியள் பிள்ளையளின்ரை எதிர்காலத்துக்குக் காசு தேவை தானே. குடியை நிப்பாட்டச் சொன்னால் விதண்டாவாதம் பேசிக் கொண்டு நிக்கிறியள்".

"நான் குடிக்கிறதை நிப்பாட்ட உனக்கும் ஏலாது, ஏன் உன்னைப் பெத்த அப்பனுக்கும் ஏலாது"

"குடியை நிப்பாட்டியே ஆகவேணும். இல்லாட்டி விபரீதமான விளைவுகள் ஏற்படும்"

மூர்த்தி பதிலேதும் சொல்லவில்லை. மாறாகக் குமாரி யின் கன்னத்தில் பளாரென அறைந்தான். கணவன் தன்னை அடிக்கத் துணிவான் என்று குமாரி ஒருபோதும் நினைத்துக் கூடப்பார்த்ததில்லை. அழுது கொண்டு அறைக்கு ஓடிப் போய்க் கதவை உட்புறமாகத் தாளிட்டுக் கொண்டாள்...

அடுத்த பொழுதும் விடிந்தது. மூர்த்தி ஒன்றும் பேசாமல் அவசர அவசரமாக வெளிக்கிட்டு ஆபீசுக்குப் போய் விட்டான்.

பக்கத்து வீட்டு வழக்கறிஞரிடம் சென்ற குமாரி குடி காரக் கணவனிடமிருந்து விவகாரத்துப் பெற உதவுமாறு அவரிடம் கேட்டுக் கொண்டாள். விவாகரத்துக் கோருவதற் கான சகல காரணங்களையும் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொண்டார் வழக்கறிஞர்.

சமூக சேவகரும் உளவியலாளருமான வழக்கறிஞர் வாமதேவன் நேர்மையாகத் தொழில் செய்பவர் என்று பெயரெடுத்தவர். தான் மூர்த்தியைச் சந்தித்துக் கதைப்பதாகக் கூறிக் குமாரியை அனுப்பி வைத்தார்.

மாலை நேரம் மூர்த்தியைத் தெருவில் சந்தித்த வழக் கறிஞர் "என்ன தம்பி, எப்படிச் சுகம்" என்று பீடிகை போட்டார்.

"ஒரு மாதிரி இருக்கிறம் ஐயா"

"என்ன? கொஞ்சம் கூடக் குறையக் குடிக்கிற மாதிரி விளங்குது"

"ஓம் ஐயா, தெரியாதா? கந்தோரிலை பார்ட்டியளிலை சிநேகிதற்றை வற்புறுத்தலாலை முஸ்பாத்திக்குத் தான் குடிக்கத் தொடங்கினது. இப்ப குடிப்பழக்கத்தை விட ஏலாமல் கிடக்குது"

"பெரும்பாலான ஆண்களின் பிரச்சினையே இதுதான். குடிக்கிறதாலை உடல் நலம் கெட்டுப் போகும். குடிச்சுட்டுக் கந்தோருக்குப் போனால் வேலை நீக்கத்திற்கு ஆளாக நேரிடும். வீட்டில வெறியோடை நிண்டால் மனைவியோடை சண்டை, சச்சரவு ஏற்படும். மரியாதை கெட்டுப் போகும். தாய் தகப்பன் எந்த நேரமும் சண்டை பிடிச்சுக் கொண்டிருந்தால் பிள்ளை களுக்கும் உளப் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமல் போகும்."

எந்த நேரமும் குடி போதையில் நிண்டால் பிரச்சினை களைப் பேசித் தீர்க்க முடியாது. இருக்கிற பிரச்சினை மேலும் மேலும் சிக்கலாகும். ஆகவே நான் சொல்லுறனெண்டு குறை நினைக்காமல் இண்டையோடை இந்தக்குடியை விட்டிடும்தம்பி"

"எனக்கு நிறையச் சிநேகிதன்மார் இருக்கினம் ஐயா ஆனால் எவரும் எனக்கு உந்த மாதிரிப் புத்திமதி இதுவரை சொன்னது கிடையாது. இண்டைக்கு நீங்கள் கடவுள் மாதிரி வந்து புத்திமதி சொல்லி என்னைத் திருத்திப் போட்டியள். உங்களுக்கு எப்பிடி நன்றி சொல்றது எண்டே தெரியவில்லை. இன்று முதல் நான் மதுபானம் குடிக்கமாட்டேன் ஐயா, இது சத்தியம்" என்று கூறி வழக்கறிஞரிடம் இருந்து விடைபெற்ற மூர்த்தி தெளிந்த மனதுடன் வீட்டை நோக்கி நடக்கலானான்.

நன்றி - ஜீவநதி

# சின்ன வயசு ஆசைகள்

ஆதிகாலத்தில் வன்னிப் பிரதேசத்தில் சிவ வழிபாடு முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்ட போதிலும் பிற்காலத்தில் பெண் தெய்வ வழிபாடும் முக்கியத்துவம் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு மாங்குளம் பிரதான சாலையில் 3ம்கட்டைச் சந்தியிலிருந்து மேற்குப் பக்கமாக ஒருமைல் தூரம் சென்றால் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவிலை அடையலாம். இது சைவத்தமிழர் எல்லோரும் அறிந்த பிரசித்த மான ஒரு அம்மன் கோவிலாகும்.

அன்று ராஜனும் பெற்றோருமாக வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் இரவுப் பொங்கல் உற்சவத்தைத் தரிசிப்பதற் காகச் சென்ற போது நேரம் பிற்பகல் 6 மணி ஆகியிருந்தது. அம்மனை மனமுருகி வழி பட்ட பின் நேராகப் பாய்க் கடைக்குச் சென்றார்கள்.

நல்ல வடிவான மட்டக்களப்புப் பன்பாய்கள் ரெண்டை வாங்கிப் புற்தரையில் விரித்து அதில் அமர்ந்து கொண்டு போவோர் வருவோரை வேடிக்கை பார்த்தபடியும், கச்சான் கடலையைக் கொறித்த படியும் இருந்தார்கள்.

கடலை சாப்பிட்டு முடிய அந்தமாதிரித் தண்ணீர் விடாய்க்கத் தொடங்கியது. நேராகக் குளிர்பானக் கடைக்குச் சென்று சோடா வாங்கிக் குடித்ததும் வயிறு ஜில் என்று

குளிர்ந்தது.

அதன் பின் வரிசையாகப் போடப்பட்டிருந்த கடைகளைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார்கள். பொம்மைக் கடைகளில் இருந்த பொம்மைகள் தன்னையே பார்த்துச் சிரிப்பது போல ராஜன் உணர்ந்தான். அழகான பொம்மை யொன்றைக் காட்டி அதனை வாங்கித் தருமாறு அப்பாவைக் கேட்டான். அவரும் மறுக்காமல் அதனை வாங்கிக் கொடுத்தார்.

அடுத்த கடைக்குச் சென்ற போது விளையாட்டுக் கார்கள் நிறைய அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட ராஜன், சாம்பல் நிறக் காரொன்றை வாங்கித் தருமாறு அப்பாவைக் கேட்பதற்காகத் திரும்பிய போது அப்பாவைக் காணவில்லை. அம்மாவையும் காணவில்லை.

ராஜன் கார்க் கடைக்கு முன்னால் நின்றபடி அழத் தொடங்கினான்.

அப்போது அவ் வழியாக வந்த பலூன் வியாபாரி, "ஏன் பாப்பா அழுகிறாய்? இந்தா இந்த பலூனை வைத்துக் கொள்" என்று பச்சை நிற பலூனொன்றை நீட்டினார். "எனக்கு பலூன் வேண்டாம், அம்மா அப்பா தான் வேணும்" என்று கூறிய ராஜன் மீண்டும் அழத் தொடங்கினான்.

அப்போது அம்மாவும் அப்பாவும் தன்னைத் தேடிக் கொண்டு அவ் வழியாக வருவதைக் கண்ட ராஜன் ஓடிப் போய்த் தகப்பனின் கரங்களைப் பற்றிக் கொண்டு சாம்பல் நிறக் காரொன்றை வாங்கித் தருமாறு தனது கோரிக்கையை முன் வைத்தான். "உது இரண்டு நாட்களில் உடைந்துவிடும் வேண்டாமென்றார்" அப்பா...

ராஜன் வளர்ந்து படித்து உத்தியோகம் தேடிக் கொண்ட பின் புத்தம்புதிய சாம்பல் நிற மாருதி அல்ட்டோக் காரொன்றைச் சொந்தமாக வாங்கிக் கொண்டானாயினும் "சிறு பராயத்தில் பொம்மைக் காரொன்றை வாங்கி விளையாட வில்லையே" என்ற கவலை இப்போதும் ராஜனின் மனதை விட்டு அகல மறுக்கின்றது.

# கலப்புத் திருமணம்

மைதிலி யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வள். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல்பீட முதலாம் வருட மாணவி. றொஷான் பண்டாரவளையைச் சேர்ந்தவன். அதே பல்கலைக் கழகத்தில் பொறியியல் இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருந்த சிங்கள இளைஞன். றாக்கிங் மூலம் இவர் களுக்கிடையே ஏற்பட்ட தொடர்பு நாளடை வில் காதலாக மலர்ந்தது.

"ஏன் உனக்குத் தமிழ்ப் பையன் எவனும் கிடைக்க வில்லையா? ஏன் சிங்களப் பொடியனுடன் சுத்துகிறாய்?" என்று கேட் டாள் இவளின் உயிர் நண்பியான மாதவி.

"மாதவி! உனக்கு விளங்காது. காதலுக்கு மொழியும் இல்லை. மதமும் இல்லை. இனமும் இல்லை.எல்லாவற்றையும் கடந்த ஒரு சக்திதான் காதல்"

"றொஷானின் ஊர் பண்டாரவளை. நீங்கள் இருவரும் திருமணம் செய்து பண் டாரவளையில் வாழும் போது உங்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் சிங்களப் பிள்ளை களாகவே வளர்வார்கள் நீயும் நாளடைவில் "ஒசறி" உடுத்து மலைநாட்டுச் சிங்களப் பெண்ணாக மாறிவிடுவாய் எல்லா வற்றையும் தீர்க்கமாக யோசித்து முடிவு செய்"

"பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் வைத்து, தமிழில் படிப்பித்து, அவர்களைத் தமிழராகவே வளர்ப்பேன்"

"கலப்புத் திருமணம் மூலம் நல்லிணக்கம் ஏற்படுமென்று நீ நம்புகிறாயா?

"ஆம் நிச்சயமாக"

"எனது கருத்துப்படி கலப்புத் திருமணம் மூலம் தமிழர்கள் சிங்களவர்களாக மாறுகின்றார்களே தவிர சிங்களவர்கள் யாரும் தமிழர்களாக மாறுவதில்லை"

"நாம் போன பிறவியில் சிங்களவராகப் பிறந்து வாழ்ந்தோமா என்று எவருக்கும் தெரியாது அடுத்த பிறவியில் ஆங்கிலேயராகப் பிறப்போமா அதுவும் தெரியாது. சும்மா இனவாதம் பேசி என்னத்தைக் கண்டது" என்றாள் மைதிலி.

"சிங்களவராகப் பிறந்தால் சிங்கள இனத்துக்குச் சார்பாகப் பேசுவது இயல்புதான். ஆனால் தமிழராகப் பிறந்தவர்கள் ஏன் இனம் மாறிச் சிங்களவராக மாற வேண்டும்? என்பதுதான் எனது கேள்வி." என்று சூடாகக் கேட்டாள் மாதவி.

"எது எப்படியிருந்தாலும் நான் றொஷானை உண்மையாகக் காதலிக்கிறேன் காதலைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை" என்று உறுதியாகக் கூறினாள் மைதிலி.

இவளுடன் பேசிப் புண்ணியமில்லை என்பதை நன்குணர்ந்து கொண்ட மாதவி மைதிலிக்குப் புத்திமதி கூறுவதை அன்றுடன் நிறுத்திக் கொண்டாள்...!

காலச்சக்கரம் வேகமாய்ச் சுழன்றது. மைதிலியும் றொஷானும் படிப்பு முடிந்து வேலை தேடிக்கொண்டபின் இருவரின் பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்து, றொஷான் கண்ணொறுவையில் கட்டிய வீட்டில் வசிக்கத் தொடங்கினார்கள்.

ஒரு வருடத்தின் பின் ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு ரமேஷ் என்று பெயர் வைத்தார்கள். இரண்டு ஆண்டுகளின் பின் பிறந்த இன்னொரு ஆண் குழந்தைக்கு சுரேஷ் என்று பெயர் வைத்தார்கள்.

அக்கம் பக்கத்தில் சிங்களப் பிள்ளைகளே வசித்த காரணத்தினால் அவர்களுடன் விளையாடும் போது ரமேஷ், சுரேஷ் ஆகியோரும் சிங்களத்தையே பேசிப் பழகினார்கள்.

முன் பள்ளியிலும் இப் பிள்ளைகள் சிங்களமொழி மூலமே கல்வி கற்றார்கள்.

மைதிலி எவ்வளவுதான் தமிழ் சொல்லிக் கொடுத்த போதிலும் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பதில் நாட்டம் ஏற்பட வில்லை. இனக் கலவரங்களும், உள்நாட்டு யுத்தமும் மாறி மாறி நடைபெற்ற படியால் மைதிலி யாழ்ப்பாணம் செல்வதும் வெகு வாகக் குறைந்து விட்டது. தமிழர்கள் தமது எதிரிகள் என்ற இனவாதிகளின் பிரசாரமும் பிள்ளைகளின் மனதில் குழப் பத்தை ஏற்படுத்தியது.

பிள்ளைகள் சிங்களவர்களாக வளர்ந்து பல்கலைக் கழகத்தில் சிங்கள மொழி மூலம் படித்துப் பட்டதாரிகளாக வந்து விட்டார்கள். இருவரதும் பெண் சிநேகிதிமார் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

"கலப்புத் திருமணம் மூலம் பெருமளவு தமிழர்கள் சிங்களவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால் சிங்கள வர் யாரும் தமிழர்களாக மாறுவதில்லை" என்ற உண்மையை மிகவும் தாமதமாகவே புரிந்து கொண்டாள் மைதிலி.

பண்டாரவளைச் சிங்களமக்கள் மிகவும் நல்லவர்கள் தான். மைதிலியுடன் நன்றாகவே பழகினார்கள். ஆனால் தனது சொந்த இன அடையாளத்தையும் சொந்த இனசனங்களையும் இழந்துவிட்ட யதார்த்த நிலையை மிகவும் தாமதமாகவே உணர்ந்து கொண்டாள் மைதிலி.

குறிப்பு:

"கலப்புத் திருமணங்களின் மூலம் நல்லிணக்கம் ஏற்படும் இனப் பிரச்சனை தீரும்" என்ற வாதம் தவறானது. ஓசறி என்பது மலைநாட்டுச் சிங்களப் பெண்கள் சாறி அணியும் விதம்.

# காதல் திருமணம்

பழனிச்சாமி விசாலாட்சி தம்பதியினர் மலையகத் தின் இரத்தினபுரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்கள். இவர்களின் மகனாகிய ரஞ்சன் படிப்பதற்குத் தரமான பொருத்தமான தமிழ்ப்பாடசாலையெதுவும் அண்மை யில் இல்லாத காரணத்தினால் இவனை முன்னணிப் பாட சாலையான சிங்களப் பாடசாலையொன்றில் சேர்த்து விட்டார்கள்.

இவன் இரத்தினபுரியில் பிறந்து வளர்ந் தமையால் சிங்களம் நன்றாகக் கதைப்பான். சிங்கள மொழி மூலம் படித்து வந்த றஞ்சன் பௌத்த சமயம் உட்பட எல்லாப் பாடங் களிலும் அதிக புள்ளிகளைப் பெற்று வந்தான்.

க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்து க.பொ.த உயர் தர வகுப்பிற் படிக்கும் போது சக சிங்கள மாணவியொருத்தி யுடன் காதல் வயப்பட்டான். இதையறிந்த றஞ்சனின் பெற்றோர் படிப்பில் முழுக்கவனம் செலுத்து மாறும் காதல் விவகாரங் களில் ஈடுபட வேண்டாமென்றும் மகனைக் கண்டித் தார்கள்.

றஞ்சனின் காதலி சம்பிகா சிவப்பாகவும், அழகாகவும் இருந்தாள். படிப்பிலும் அந்தமாதிரிக் கெட்டிக் காரி. அவளது நட்பை உதறித் தள்ள ரஞ்சன் எவ்விதத்திலும் விரும்பவில்லை. இவர்களுடைய காதல் மென்மேலும் வேர் விட்டு வளரத் தொடங்கியது.

சம்பிகாவின் ஆட்கள் “கொவிகம” உயர் சாதியினர்.

சிங்கள பௌத்த பழைமை வாதிகள். தமது மகள் ஒரு தமிழனைக் காதலிக்கும் விடயம் தெரிய வந்ததும் மகளைக் கடுமையாகக் கண்டித்துக் காதலைக் கைவிடுமாறு வலியுறுத் தினார்கள்.

சம்பிகா எதுவும் பேசாமல் அமைதி காத்தாள். ஆயினும் ரஞ்சன் - சம்பிகா காதல் தொடர்ந்தும் வளர்ந்து கொண்டி ருந்தது...

க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதிய இருவருக்கும் "பிசிக்கல் சயன்ஸ்" கிடைத்து பேராதனைப் பல்கலைக் கழகத் தில் ஒரே "பச்" சில் படிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. அங்கும் இவர்களது காதல் மென்மேலும் வளர்ந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர்களும் இவர் களுடன் நட்புப் பாராட்டினார்கள். படிப்பு முடிந்து சில காலங் களுக்குப் பின்னர் இருவருக்கும் பட்டதாரி ஆசிரியர் வேலை கிடைத்தது.

இவர்களின் காதலைத் தொடர்ந்தும் அலட்சியம் செய்ய முடியாத நிலையில் இருவரதும் பெற்றோர் இவர்களின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைக்கத் தீர்மானித்தார்கள். ரஞ்சனின் பெயரை சமரஜீவ என்று மாற்றுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டபோது பழனிச்சாமியும் அரைமனதுடன் அதற்குச் சம்மதிக்கவேண்டி ஏற்பட்டது.

திருமணம் சிங்களக் கலாச்சாரத்தின் படி நடைபெற்றது. பாடசாலையில் பௌத்த சமயத்தை ஒரு பாடமாகப் படித்த படியால் பௌத்த விகாரைக்குச் சென்று பௌத்த மத அனுட் டானங்களைப் பின்பற்றுவதில் சமரஜீவவுக்குச் சிரமமேதும் இருக்கவில்லை.

சமரஜீவவும் மனைவியும் இந்துக் கோவில்களுக்குச் செல்லும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். இவர் களுடன் சம்பிகாவின் பெற்றோரும் இந்துக் கோவில்களுக்குச் சென்றார்கள்.

அவர்கள் சிவனைச் சிவ தெய்யோ என்றும், முருகனைக் கத்தறகம தெய்யோ என்றும், பிள்ளையாரை கண தெய்யோ

என்றும், அம்மனைப் பத்தினி தெய்யோ என்றும், விஷ்ணுவை விஷ்ணு தெய்யோ என்றும் கூறிக் கும்பிடுவது வழக்கம்.

"தமிழர்கள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றார்கள் இந்தியாவில் மட்டும் 7 கோடிக்கு மேல் தமிழர்கள் வாழ்கிறார்கள் முஸ்லிம்களுக்கென்று ஏராளமான இஸ்லாமிய நாடுகள் உலகம் பூராவும் உள்ளன, ஆனால் சிங்கள பௌத்தர் களுக்கென்று இருப்பது இலங்கை மட்டுமே ஆகவே என்ன விலை கொடுத்தேனும் பிரிவினை எண்ணங்களை இந்நாட்டில் இல்லாதொழிக்க வேண்டும்" என்று சம்பிகாவின் உறவினர்கள் அவ்வப்போது பேசிக்கொள்வதை சமரஜீவ கேட்டிருக்கிறான்.

ஆனால், சமரஜீவ ஒன்றும் பதில் கூறாமல் மௌனமாக இருந்து விடுவான் "மூவினங்களையும் சம நீதியுடன் நடத்தி னால் மட்டுமே இந்நாட்டில் ஐக்கியம் ஏற்படும்" என்று மனைவி யிடம் மட்டும் தனது கருத்தைக் கூறுவான்.

1983ம் ஆண்டில் இனக்கலவரம் வெடித்தது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு எல்லாம் நடைபெற்றது. சமரஜீவ தனது பெற்றோரின் பாதுகாப்புக் கருதி அவர்களைத் தனது வீட்டில் வைத்திருக்கத் தீர்மானித்த போதிலும் சம்பிகாவின் பெற் றோரும் உறவினர்களும் "அது ஆபத்தான விடயம்" எனக் கூறி அவ்வாறு செய்ய விடாமற் தடுத்துவிட்டார்கள்.

இதனிடையே காடையர்கள் துரிதமாகச் செயற்பட்டுச் சமரஜீவவின் பெற்றோரின் வீட்டை உடைத்துக் கொள்ளை யடிக்கத் தொடங்கினார்கள். பழனிச்சாமியும் மனைவியும் பின் கதவால் தப்பியோடி குறுக்கு வழியால் மகன்வீட்டுக்குச் சென்று விட்டார்கள். காடையர்கள் பழனிச்சாமியின் வீட்டைக் கொள்ளையடித்தபின் மீதியாக இருந்தவற்றை நெருப்பு வைத்து எரித்துவிட்டுப் போய்விட்டார்கள். சமரஜீவ மேலும் தாமதிக் காமல் பெற்றோரை அகதி முகாமில் கொண்டு போய் விட்டு விட்டான்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து வவுனியாவுக்குச் சென்று அங்கேயே நிரந்தரமாக வாழத் தொடங்கி விட்டார்கள். இரண்டுங் கெட்டான் நிலையில் இரத்தினபுரியில் சமரஜீவ...

**நன்றி – தாயக ஒலி**

# டொனேஷன்

ஆறு மாத காலம் முட்கம்பி முகாமில் வாழ்ந்து கஷ்டப்பட்டபின் மீள் குடியேற்றத் துக்காகத் தமது சொந்த ஊரான மாமூலைக்கு வந்து சேர்ந்தனர் மாணிக்கவாசகம் குடும்பத்தினர்.

இவர்கள் குடியிருந்த காணியில் வீடு வாசலைக் காண வில்லை. வேலிக் கட்டை களையும், முட்கம்பிகளையும் கள்வர் அகற்றி யிருந்தார்கள். காணியையும் காணிக்குப் போகும் ஒழுங்கையையும் முட் பற்றைகள் முற்றாக மூடியிருந்தன.

மாணிக்கவாசகமும் மகன் ராகவனும் தமது காணியிற் காணப்பட்ட முட்பற்றைகளை வெட்டி வெளியாக்கத் தொடங்கினர்.

இவ்வாறு முழுக்காணியும் துப்பரவாக்கி முடிய இரண்டு கிழமை எடுத்தது. வெட்டிய மரங்களை எரித்து முடித்ததும் காணிக்குட் சுதந்திரமாகப் போய் வரும் நிலைமை ஏற்பட்டது.

காணிக்குச் செல்லும் பாதை பொதுப் பாதையாக இருந்த போதிலும் அதில் வளர்ந்திருந்த முட் பற்றைகளை வெட்டி வெளியாக்க எவரும் முன்வரவில்லை.

மாணிக்கவாசகம் தனியாகவே பற்றைகளை வெட்டி வெளியாக்கி வேர் பிடுங்கிப் பாதையைப் போக்குவரத்துக்கு ஏற்ற மாதிரிச் சீராக்கினார். அதன்பின்னர் இப்பாதையால் ஆட்டோக்கள் உறுமிக் கொண்டோடியதைப் பார்க்க முடிந்தது.

மீள்குடியேற்ற அலவன்சாக அரசாங்கத்திடமிருந்து மாணிக்கவாசகம் 25000/- ரூபாவைப் பெற்றுக் கொண்டார். அரசாங்கம் கொடுத்த கூடார உபகரணங்களைக்கொண்டு கூடாரம் அமைக்கப்பட்டது. வீடமைப்புக்கான நிதியை இந்திய அரசிடம் பெற்று வீடு கட்டும் வேலையும் ஆரம்பிக்கப் பட்டது.

மாணிக்கவாசகத்தின் மகன் ராகவன் ஏற்கனவே இடை யில் விட்டிருந்த கம்பஸ் படிப்பைத் தொடர்வதற்காக யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டான்.

அத்திவாரம் கட்டிச் சுவர் எழுப்பிக் கோப்பிசம் போட்டு முடிந்ததும் "இந்த அளவுக்காவது தமக்கென்று வீடொன்று கிடைத்து விட்டதே" என்று எண்ணிச் சந்தோஷத்தில் மிதந்தனர் மாணிக்கவாசகம் குடும்பத்தினர். சுவர்களுக்குப் பூச்சுப் பூசி நிலத்துக்குக் கல்லும் சாந்தும் போட்டு மொங்கான் அடித்து அறைக் கதவுகளும் யன்னல் கதவு களும் போட்டு முடிந்தது. "இனியும் நாங்கள் அகதிகள் அல்லர்" என்ற ஒரு நிம்மதியான உணர்வு இவர்களிடம் ஏற்பட்டது.

கிணற்றை இறைத்துக் குளோரின் போட்டுத் தண்ணீரை அள்ளிப் புளங்கத் தொடங்கினார்கள். கிணற்றடியில் ஐந்தாறு வாழையும், கமுகுகளும் நட்டு நீர் ஊற்றி வளர்த்தார்கள்.

வாழைகள் நன்றாக வளர்ந்து நிழல் பரப்பிக் காற்றில் அசைந்தாடிக் கொண்டு நின்ற போது அந்தமாதிரி மகிழ்ச்சி ஏற்பட்டது மாணிக்கவாசகம் குடும்பத்திற்கு...

ராகவன் படிப்பு முடிந்து திரும்பி ஊருக்கு வந்து தண்ணீரூற்றில் ஒரு ரியூட்டறியில் இணைந்து படிப்பிக்கத் தொடங்கினான். பட்டதாரி என்ற தகுதியை வைத்துக்கொண்டு ஊரில் உள்ள உறவினர் பலரும் ராகவனுக்குத் திருமணம் பேசத் தொடங்கினார்கள். ஆட்கள் திருமணம்பேசுகிறார்கள் என்ற தகவலை மகனிடம் சொன்ன ஜெயலஷ்மி நிரந்தர வேலை கிடைத்த பின்னர்பெரிய இடமாகப் பார்த்து அதிக சீதனம் டொனேஷன் வாங்கினாற் தான் தங்கை விஜயலஷ்மிக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்யலாம் என்று அம்மா மகனுக்கு

உபதேசம் செய்தா.

ராகவனுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. "அம்மா என்னுடன் கம்பசில் படித்த பிரியா என்ற பிள்ளையை நான் விரும்புகிறேன். திருமணம் செய்வதாக வாக்குறுதி கொடுத்தபின் எவ்வாறு வேறிடத்தில் திருமணம் செய்வது?" என்றான் ராகவன்.

யாரைக் கேட்டு வாக்குறுதி கொடுத்தாய்? யாழ்ப் பாணத்துக்கு உன்னைப் படிக்கத்தானே அனுப்பியது. திருமண வயதில் தங்கையொருத்தி இருப்பது தெரிந்துகொண்டும் உன் பாட்டில் காதல் விவகாரங்களில் இறங்குவாய்என்று நான் எதிர் பார்க்கவேயில்லை. நான் அப்பாவிட்டைச் சொல்லிவிடுறன் அவரோடை கதைச்சுக்கொள்" என்று அம்மா சொல்லி முடித்த போது அவவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொல என்று வழிந்தோடியது.

அப்பாவுக்கு விடயம் தெரியவந்தபோது அவர் சொன் னார். "அவையள் எங்கடை சாதிக்காறராகவும் சீதனம் டொனேஷன் தரக்கூடிய ஆக்களாகவும் இருந்தால் கதைச்சுப் பாக்கலாம்" என்று.

"அப்பா! அவையள் எங்களைப் போலவே நடுத்தர வர்க்கம்தான். டொனேஷன் எதிர் பாக்க ஏலாது. நான் கம்ப சிலை விவாத மேடையிலை ஏறி "நாங்கள் சீதன வழக்கத்தை முற்றாக ஒழிக்கவேணுமெண்டு வீராவேசமாய்ப்பேசினனான். என்ரை கலியாணமெண்டு வரேக்குள்ளைசீதனம் வேணு மெண்டு பிரட்டிப் பேசினால் அது சரியில்லாத வேலை" என்றான் ராகவன்.

"வீடு வளவு வாங்காமல் திருமணம் செய்துபோட்டு எங்கை சீவிக்கிறது? உனக்கெண்டு ஒரு இல்லிடம் வேணும் தானே! மற்றது எங்கடை ஆக்கள் பொம்பிளை போட்டிருக்கிற நகைகளைப் பாத்துத்தான் ஆக்களை எடைபோடுறது. அது மட்டுமல்ல தாலிக்கொடி எத்தனை பவுணிலை செய்தது எண்டும் ஆக்கள் கூர்ந்து கவனிப்பினை. அதோடை காசு களஞ்சு கையிலை இல்லாவிட்டாலும் சனம் மதிக்காதுகள்.

நான் கம்பசிலை படிக்கவில்லை ஆனால் நடைமுறை அனுபவத்தை வைச்சு உனக்குப் புத்திமதி சொல்லியிருக்கிறன். மற்றது டொனேஷன் வாங்காமல் தங்கச்சிக்கு எப்பிடித் திருமணம் செய்யுறது என்பது அடுத்த பிரச்சனை. என்னவோ யோசிச்சுச் செய்" என்று கூறித் தனது உரையை முடித்துக்கொண்டார் அப்பா.

ராகவன் பதில் ஒன்றும் கூறவில்லை. தம்பாட்டில் எவரையாவது காதலிப்போர் பெற்றோர்முன்னால் குற்றவாளி போலத் தலை குனிந்து நிற்பது வழமையான விடயம்தானே.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் தண்ணீரூற்று ஆலடியில் நடந்த அக்சிடென்ரில் அகப்பட்டு காலில் படுகாயம் அடைந்த ராகவன் கால் மைல் தூரத்திலுள்ள மாஞ்சோலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான் விடயமறிந்து மாணிக்கவாசகமும் மனைவியும் மகளும் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள். அங்கிருந்து அம்புலன்சில் ராகவனை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். மாணிக்கவாசகமும் மகனுடன் கூடச் சென்று மகனுக்கு உதவியாக வாட்டில் நின்றுகொண்டார்.

பிரியாவும் அவளது பெற்றோரும் விடயம்அறிந்து பதறிப்போய் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து இருவருக்கும் உதவிகள் செய்ததோடு சாப்பாட்டு விடயத்திலும் குறைவில்லாமல் பார்த்துக்கொண்டார்கள்.

ராகவனின் பெற்றோரும் பிரியாவின் பெற்றோரும் ஆஸ்பத்திரியில் அடிக்கடி சந்தித்தமையால் விரும்பியோ விரும்பாமலோ அவர்களுக்கிடையே ஒரு புதிய உறவு உருவாகி வளர ஆரம்பித்தது. அதுமட்டுமல்ல ராகவனின்தங்கைக்கும் தனது எதிர்கால அண்ணியைப் பிடித்துக்கொண்டது.

இன்னும் இரண்டு கிழமையால் டீஸ்சார்ஜ் செய்யலாம் என்று டொக்டர் கூறியபோது பிரியாவும் ராகவனும் ஒருவரையொருவர் அர்த்தபுஷ்டியுடன் பார்த்துப் புன்னகைத்தார்கள். இவர்களின் மகிழ்ச்சியைக் கண்ணுற்று அனைவரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

# தனிக் குடித்தனம்

மணமகன் தரப்பார் 15 லட்சம் காசும், 20பவுண் நகையும், 3 ஏக்கர் நெல்வயலும், 1 ஏக்கர் தோட்டக் காணியும், வீடும் சீதனமாகக் கேட்டார்கள். மணமகள் மல்லிகா புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் பட்டதாரி ஆசிரியை.

மல்லிகாவின் தகப்பன் சுப்பிரமணியம் மனைவி செல்லம்மாவிடம் சொன்னார் "எமக்கு உள்ளது ஒரேவீடு. அதை மூத்த வளுக்குச் சீதனமாகக் கொடுத்தால் மற்ற மூவரும் எங்கே குடியிருப்பது? அதுமட்டு மல்ல வங்கியிலை பத்து லட்சம் ரூபா மட்டும் தானே இருக்குது! மிச்சம் 5 லட்சம் ரூபாவுக்கு எங்கே போவது?

"எக்கவுண்டன் வேலை நல்ல வேலை. சாதகமும்நல்ல பொருத்தமெண்டு சொன்ன னீங்கள். சாதிசனம்எல்லாம் நல்லது. உந்த இடத்தைக் குழம்ப விடக்கூடாது என்பது தான் எனது அபிப்பிராயம்" என்றா செல்லம்மா.

மல்லிகாவின் தங்கை மஞ்சுளாவும் தாயின் கருத்தையே ஆமோதித்தாள். இவள் முல்லைத்தீவுக் கச்சேரியில் முகாமைத் துவ உதவியாளர்.

"சரி உங்களுக்கு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கிறபடியால் நீங்கள் சொல்றதப் போலை செய்வம். மஞ்சுளா கலியாணம் செய்யேக்குள்ளை மல்லிகா ஏதும் உதவி செய்வாள்தானே பாப்பம்" என்றார் மணியம்...

மணியம் நிறையக் கடன்பட்டு மல்லிகாவின் திரு

மணத்தைச் சிறப்பாக நடத்தி முடித்தார். புதுமணத் தம்பதிகள் மணமகனின் முள்ளியவளை வீட்டில் வசித்து வந்தார்கள். மணியம் செல்லம்மா, மஞ்சுளா ஆகியோர் மல்லிகாவுக்குச் சீதனமாகக் கொடுத்த வீட்டிலேயே தொடர்ந்தும் வசித்து வந்தார்கள்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் சுகமில்லாமல் படுத் திருந்த அம்மாவைப் பார்க்க மல்லிகா பிறந்தகம் வந்தாள். தாயை நலம் விசாரித்த பின்னர் பேச்சுவாக்கில் "நாங்கள் இந்த வீட்டிலை இருக்க வரப்போறம் அம்மா! நீங்கள் வேறை ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ளுங்கோவன்" என்றாள். பாலூட்டி வளத்தது முந்தநாள் போலை இருக்குது. நாக்கூசாமல் வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு போங்கோ என்கிறாளே "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு தானே" என்று மனதில் எண்ணிக்கொண்ட செல்லம்மா,

"உன்ரை கலியாணவீடு கடன்பட்டுச்செய்தது தெரியும் தானே! இப்ப வீடு கட்ட எங்களிட்டைக் காசு எங்கை இருக்குது? உன்ரை அவர் குடும்பத்திலை ஒரே பிள்ளைதானே. அவற்றை தாய் தகப்பனையும் பார்த்துக்கொண்டு அதே வீட்டிலை நீங்கள் இருக்கலாம்தானே! ஏன் அவசரப்படுறியள்? என்றா.

"அது வந்து... அவையோடை இருந்தால் மாமி மருமகள் பிரச்சனை வரக்கூடுமல்லவா அதுதான் நாங்கள் தனிக் குடித்தனம்போக விரும்புறம்" என்றாள் புத்திசாலியான மல்லிகா.

"நான் அப்பாவிட்டைச் சொல்லிவிடுறன் அப்பாவும் நீங்களும் பட்டது பாடு" என்றா செல்லம்மா.

"வீட்டை விடாமல் வைச்சிருக்கினமெண்டு இவரும் குறை சொன்னவர். அது மட்டுமல்ல மஞ்சுளாவுக்கும் வீடொண்டு வேணும்தானே! நீங்கள் உடனடியாக வீடொண் டைக் கட்டுறதுதான் நல்லது. நான் அப்ப போயிற்று வாறன்" என்று கூறி விடைபெற்றாள் மல்லிகா.

"அவர்கள் வீட்டை விடச்சொல்லிச் சொன்னபிறகு

நாங்கள் இந்த வீட்டிலை தொடர்ந்தும் இருக்கிறது மரியாதை இல்லை" என்று அப்பா சொன்னார்.

"புது வீடு கட்டக் காசுக்கு எங்கே போவது" என்று அம்மா கேட்டா.

"நான்ஒண்டு சொல்லட்டா நான் டீப்பாட்மென்ற் ஊடாக ஒரு வங்கிக் கடன் எடுத்துத் தாறன் தனியூற்றில் உள்ள எனது காணிக்குள்ளை ஒரு அறையைக் கட்டுங்கோ அப்பா! அதுக்குள்ளை நாங்கள் போய் இருப்பம் எலிவளை ஆனாலும் தனிவளை வேண்டும்" என்றாள் மஞ்சுளா.

"உது நல்ல யோசனை. என்ரை நகைகள் எல்லாவற்றை யும் மக்கள் வங்கியிலை அடைவு வைச்சுக் கிணறும்வெட்டிக் கழிப்பறையும் கட்டுங்கோ" என்றா செல்லம்மா.

புதுக்காணி முற்றம் போலச் செருக்கி ஒரு அறை, ஒரு தற்காலிகக் குசினி, கிணறு, கழிப்பறை இவ்வளவும் அமைத்து முடிய 3 மாதம் எடுத்தது. புதுவீடு குடிபோகும் வைபவம் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

மல்லிகாவும், கணவரும் அவருடைய அம்மா, அப்பா வும் ஊரில் உள்ள இனசனங்களும் கொண்டாட்டத்திற் கலந்து சிறப்பித்தார்கள். காலச்சக்கரம் வேகமாகச் சுழன்று ஒரு வருடம் கடந்து போனது...

மணியத்தின் தங்கை பொன்னம்மாவின் மகன் மோகன் ஏ.எல் படித்தவன். முள்ளியவளை கொமர்ஷல் வங்கியில் பியோன் ஆக வேலை செய்து வந்தான். இவனுக்கு மஞ்சுளா வைத் திருமணம் செய்து வைக்குமாறு பொன்னம்மாவால் பிரேரணை முன்மொழியப்பட்டது.

முகாமைத்துவ உதவியாளரான மகளுக்கு ஒரு பியோனைக் கட்டிவைக்க மணியத்தின் மனம்ஒப்பவில்லை. "எங்களுக்கு நிறையக் கடன் நிக்குது. ஆகவே உடனும் மகளுக்குக் கலியாணம்பேசும் உத்தேசமில்லை" என்று சாட்டுச் சொல்லித்தட்டிக் கழித்துவிட்டார் மணியம்.

"அண்ணை! நீங்கள் சீதனம் ஒண்டும் தரத் தேவை யில்லை. மஞ்சுளாவை மட்டும் தந்தால் போதும் மோகனுக்கு

கொமர்ஷல் வங்கியிலை நிறையச் சம்பளமும் ஓவர் ரைமும் கிடைக்குது. அவன் எல்லாம் சமாளித்துக்கொள்வான்" என்று பொன்னம்மா சொன்னா.

"நான் வீட்டாருடன் கதைத்துவிட்டு முடிவு சொல் கிறேன்" என்று கூறித்தங்கையிடம் விடைபெற்றார் மணியம்.

செல்லம்மாவிடம் மணியம் விடயத்தைச் சொன்ன போது "மூத்தவளை ஒரு எக்கவுண்டனுக்குக் கட்டிக் கொடுத்தது. இளையவளைப் பியோனுக்குக் கட்டி வைக்கிறது மரியாதையாய் இருக்காது" என்று செல்லம்மா சொன்னா.

"அம்மா! அக்காவின்ரை கலியாணத்துக்காக நாங்கள் நிறையக் கடன்பட்டுவிட்டோம். இனி அக்கடன்களைத் தீர்க்கும்வரை எனது கலியாணத்தைப் பின்போட்டால் நான் கிழவியாகிவிடுவேன். அப்போது நீங்கள் மென்மேலும் கவலைப்படவேண்டி வரும். பியோன் என்றால்அவர்கள் மனிதர்களில்லையா?"

"வரட்டுக் கௌரவம் பார்ப்பதில் எனக்கு நம்பிக்கை யில்லை. மோகன் எனது முறை மைத்துனன். சிறுவயதில் நாங்கள் ஒன்றாக விளையாடியிருக்கிறோம்."

"மோகன் மிகவும் நல்லவர் என்பது உங்களுக்குத் தெரியும்தானே! குடிப்பதும் இல்லை. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக் காமல் திருமணத்துக்குச் சம்மதம் என்று சொல்லுங்கோ.

"ஆனால் ஒரேயொரு நிபந்தனை அம்மாவும் அப்பாவும் இறுதிக் காலம்வரை எமது வீட்டில் எம்மோடுதான் வாழவேண்டும்." என்றாள் மஞ்சுளா.

அம்மாவினதும் அப்பாவினதும் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது.

# குடி குடியைக் கெடுக்கும்

கொழும்பிலுள்ள ஒரு அரச திணைக்களத்தில் பூபாலனுக்கு முகாமைத்துவ உதவியாளராக நியமனம் கிடைத்தது. அறுபது வயதைப் பூர்த்தி செய்த மூன்று உத்தி யோகத்தர்கள் அன்று சேவையில் இருந்து ஓய்வு பெறுவதை முன்னிட்டு ஒரு பெரிய Hotel இல் விருந்துபசாரம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பூபாலன் உட்பட எல்லா உத்தி யோகத்தர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்கள். பெரிய Hall ஒன்றில் மேசை களும், கதிரைகளும் வரிசையாகப் போடப் பட்டிருந்தன. பூபாலனும் வேறு மூன்று சிங்கள உத்தியோகத்தர்களும் ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள்.

பியர் போத்தல்களும், மாட்டிறைச்சி உட்பட ஏனைய உணவு வகைகளும் மேசை கள் மீது வைக்கப்பட்டிருந்தன. மற்றவர்கள் பியரைக் குடித்து Taste க்காக மாட்டி றைச்சிப் பொரியலைக் கடித்தார்கள்.

பூபாலன் ஒரு சைவத் தமிழன். மது குடிப்பதும் இல்லை, மாட்டிறைச்சி சாப்பிடுவதும் இல்லை. அதனால் அவன் பேசாமல் தன்பாட்டில் அமர்ந்திருந்தான். மற்ற மூன்று பேரும் சொன்னார்கள், "பியர் குடிக்கலாம் மல்லி, ஒன்றும் செய்யாது" என்று.

பூபாலன் முதலில் மறுத்த போதிலும் சிங்கள நண்பர்

களின் வற்புறுத்தலின் பேரில் சிறிது பியர் அருந்தினான்.

சிங்கள நண்பர்கள், "செல்வநாயகம் இனவாதத்தின் தந்தை. இவருடைய தமிழரசுக்கட்சி சத்தியாக்கிரகம், அஹிம்சைப் போராட்டம் அது இது என்று கூறி நிலைமை களைக் குழப்பிவிட்ட படியால்தான் 58 இனக்கலவரம் உருவானது இலங்கை ஒரு சிறிய நாடு, இந் நாட்டுக்குச் சமஷ்டி ஆட்சி முறை பொருத்தமானது அல்ல் ஒற்றையாட்சியின் கீழ்த் தான் இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியும்" அது இது என்று நீட்டி முழக்கிக் கொண்டு போனார்கள்.

"மது குடிக்கும் நேரம் அரசியல் கதைத்தால் வீண் பிரச்சனை வரும்" என்று நினைத்த பூபாலன் அவர்கள் சொன்னதை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தான். ஆனால் அபிப்பிராயம் ஒன்றும் கூறவில்லை.

பின்னர் சாராயப் போத்தல்கள் எல்லோருடைய மேசை களின்மீதும் வைக்கப்பட்டன. "இது நல்ல சரக்கு, கொஞ்சம் குடித்துப் பார் மல்லி நன்றாக இருக்கும்" என்று நண்பர்கள் பூபாலனிடம் சிபார்சு செய்தார்கள்.

பியர் குடித்து வெறி ஏறிவிட்ட படியாலும் நண்பர்கள் சாராயம் குடிக்குமாறு வற்புறுத்தியதாலும் கொஞ்சமாகக் குடித்துப் பார்ப்போம் என்ற ஆசை மனதில் துளிர்விடத் தொடங்கியது. ஒரு கிளாஸ் சாராயத்துடன் சோடாவும் கலந்து சிறிது சிறிதாகக் குடித்தான். மாட்டிறைச்சியும் சாப்பிட்டான்.

வெறி உச்சத்துக்கு ஏறியது. சொர்க்கத்தில் உலாவுவது போன்ற இன்பமான உணர்வு ஏற்பட்டது. இன்னும் இன்னும் ஊற்றிக் குடித்தான். வாந்தி வருவது போல இருந்தது. சாப்பிட முடியவில்லை. தலை தூக்கவோ, நடக்கவோ முடியவில்லை.

இறுதியில் நண்பர்கள் இவனை ஒரு ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு போய் இவனது வீட்டில் விட்டுவிட்டார்கள். பூபாலனின் தாய் "மகனுக்கு என்ன நடந்தது" என்று கேட்டு அழுது குளற ஆரம்பித்தா. "பாட்டியில் குடிச்சது ஜாஸ்தி" என்று நண்பர்கள் அரைகுறைத் தமிழில் கூறிவிட்டுத்

தப்பினோம் பிழைத்தோம் என்று ஆட்டோவில் ஏறிச் சென்று விட்டார்கள்.....!

ஆயினும் பூபாலன் அன்றுடன் குடியை நிறுத்த வில்லை. தொடர்ந்தும் நண்பர்களுடன் சேர்ந்து குடிக்க ஆரம்பித்தான். "எடுக்கும் சம்பளம் சாராயம் குடிக்கவே போதாது" என்ற நிலை ஏற்பட்டு விட்டது. பூபாலனின் எதிர் காலம் கேள்விக் குறியாக மாறியது. குடிகாரன் ஆகிய பூபாலனை இனி எவள்தான் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிப்பாள்?

பிரச்சனை இது மட்டுமல்ல பூபாலனை மலை போல் நம்பியிருந்த அவனது தங்கைமாரின் எதிர்காலமும் கேள்விக் குறியாக மாறிவிட்டது.

# இரவல் சங்கிலி

கண்டி கொட்டுகொடல்ல வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கியில் இருந்த நிலை யான வைப்பு முதிர்ச்சி பெற்றதால் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளவும் கண்டி தலதா வீதி யில் உள்ள மக்கள் வங்கியில் அடகு வைத்த மனைவியின் சங்கிலியை மீளப் பெற்றுக் கொள்ளவும் ராசேந்திரனும் மனைவி பிரதீபா வுமாக பேராதனையில் இருந்து கண்டிக்குப் புறப்பட ஆயத்தமாயினர்.

வெறுங்கழுத்துடன் கண்டி ரவுணுக்குப் போக என்னவோ போல இருந்தது தீபாவுக்கு. அதனால் அவளின் உயிர் நண்பியான மாலாவிடம் சங்கிலி இரவல் கேட்பதற்காக அவளின் வீட்டுக்குச் சென்றாள் தீபா. தீபாவைக் கண்ட மாலா ஆ... என்ன தீபா இண்டைக்கு இந்தப் பக்கம் என்றாள்.

சங்கிலி வங்கியிலை அடைவு வைச் சாப்போலை. அதுதான் அடைவு எடுக்கப் போகப்போறம். உங்கடை சங்கிலியை ஒருக் கால் இரவல் தாறியளே போட்டுக் கொண்டு போக என்றாள் தீபா. மாலா எங்கோ போக வெளிக்கிட்ட படியால் சங்கிலியை அவசர அவசரமாக தீபாவின் கையில் கொடுத்து விட்டு விடைபெற்றுக் கொண்டாள். தீபா மாலாவுக்கு நன்றி கூறிவிட்டுத் தன் வீடு நோக்கி விரைந்தாள்.

ராசேந்திரனும் மனைவியும் கண்டிக்கு பஸ்சில் போய் மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் இறங்கி கொட்டுகொடல்ல வீதியை நோக்கி நடந்துகொண்டிருக்கையில் திடீரென்று

பின்னால் வந்த வழிப்பறித் திருடன் தீபாவின் கழுத்தில் மின்னிய சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டான்.

ராசேந்திரன் திருடனைத் துரத்திச் சென்றபோதும் அவன் சந்து பொந்துக்குள் நுழைந்து மாயமான் போல ஓடி மறைந்துவிட்டான். இரவல்சங்கிலி அல்லவா? அதனால் இரட்டிப்புக் கவலை ஏற்பட்டதுதீபாவுக்கும் கணவனுக்கும்.

இருவரும் நேராகச் சென்று பொலிசில் முறைப்பாடு செய்துவிட்டுத் தேசிய சேமிப்பு வங்கிக்குச் சென்றார்கள். நிலையான வைப்பில் இருந்த காசையும் வட்டியையும் எடுத்துக் கொண்டு மக்கள் வங்கிக்குச் சென்று சங்கிலியையும் அடகு மீட்டுக்கொண்டு பேராதனைக்குத் திரும்பிச் சென்றார்கள். மாலையானதும் தீபா மக்கள் வங்கியில் அடகு மீட்ட சங்கிலியைத்தனது கைப்பையில் போட்டுக்கொண்டு மாலா வீட்டுக்குச் சென்றாள். மாலா தனது வீட்டு முற்றத்தில் நிற் பதைக் கண்ணுற்ற தீபா கைப்பையைத் திறந்து தனது சங்கிலியை வெளியே எடுத்து "மாலா இது எனது 2 பவுண் சங்கிலி. இதை இப்போதைக்கு வைத்துக்கொள்ளுங்க. உங்கள் சங்கிலியைத்திருடர் பறித்துச் சென்றுவிட்டார்கள் ஐ ஆம் சோ சொறி என்றாள் அழாக்குறையாக.

ஐயையோ தீபா ஒரு தவறு நடந்துவிட்டது எனது தங்கச் சங்கிலி போலவே இன்னொரு இமிற்றேஷன் சங்கிலியும் என்னிடம் இருந்தது. நான் காலையில் எங்கோ போகும் அவசரத்தில்நின்றதால் தவறுதலாக இமிற்றேஷன் சங்கிலியை உங்களிடம் தந்துவிட்டேன். என்றாலும் அது நன்மையில் முடிந்துவிட்டது பார்த்தீர்களா? என்றாள் மாலா.

சந்தோஷ மிகுதியால் தீபாவுக்குப் பேச வார்த்தைகள் வர வில்லை. மாலாவை ஆர்வ மிகுதியால் கட்டித் தழுவித் தனது அன்பையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திக் கொண்டாள்.

## அகதியாய் ஓட மாட்டேன்

"இரத்தமும் வியர்வையும் சிந்திக் கட்டிய இந்த வீட்டையும், தாய் தந்தையர் தந்த காணி பூமிகளையும், வயல் வாய்க்கால் வரு மானங்களையும் விட்டிட்டு அகதியாய் அங்கை யும், இஞ்சையும் அலைஞ்சு திரிய நான் விரும் பேல்லை. செத்தாலும் எனது மண்ணில் சாவேனே தவிர எனது மண்ணை விட்டு அகதி யாய் எங்கும் ஓடமாட்டேன்" என்று கூறி இடம் பெயர மறுத்துவிட்டார் தர்மலிங்கம்.

"அப்பா வராட்டி நாங்களும் அவரை விட்டிட்டு எங்கும் போக மாட்டம்" என்று மகள் சாந்தியும் கூறிவிட்டாள். ஊர் மக்கள் எல்லோரும் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு இடம்பெயர்ந்து சென்று விட்டார் கள். வெகு தூரத்தில் ஷெல் விழும் சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

சாந்தியின் கணவன் தியாகு சொன்னான் "முழுச் சனமும் இடம் பெயர்ந்து போட்டுதுகள், நாங்கள் மட்டும் போகாமல் இருந்து என்னத்தைச் சாதிக்கிறது, சுத்தி வர ஷெல் விழத் தொடங்கீற்றுது, வாருங்கோ மாமா எங்காவது போவம்" என்று.

"அதுதானை தம்பி பாருங்கோவன் உந்தாள் சொல்வழி கேக்குதில்லை" என்று திருமதி தர்மலிங்கமாகிய தங்கம்மாவும் அலுத்துக் கொண்டா.

சாந்தியும் கணவனுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கத் தவறவில்லை. மகளின் குடும்ப நன்மையைக் கருத்தில்

கொண்டவராக தர்மலிங்கம் ஒருவாறு பிடிவாதத்தைக் கைவிட்டு இடம் பெயரச் சம்மதித்தார்.

தர்மலிங்கம் தியாகு ஆகிய இருவரின் துவிச்சக்கர வண்டிகளையும், நெல்மூட்டைகளையும் ஏனைய முக்கிய பொருட்களையும் மட்டும் தியாகுவின் டிராக்டரில் ஏற்றினர். சாரதி ராசு டிராக்டரை ஸ்ராட் செய்ய அவனருகில் தர்ம லிங்கமும் அமர்ந்து கொண்டார்.

டிராக்டரில் ஏறுவதற்குப் பிள்ளைகளும் அடம் பிடித் தார்கள். "பிள்ளைகள் டிராக்டரில் இருக்க முடியாது" என்று கூறி சாந்தி பிள்ளைகளைத் தடுத்து விட்டாள். ஆட்டோக்கள் எல்லாம் இடம் பெயர்ந்து சென்று விட்டதால் தங்கம்மா, சாந்தி, பிள்ளைகள் ஆகியோரின் பிரயாணத்திற்குக் கை கொடுத்தது மாட்டு வண்டியாகும்.

பொருட்கள் ஏற்றும் தட்டின் மீது எருதுகளின் உணவான வைக்கோலைப் பரப்பி அதன்மேல் பன்பாய்களை விரித்து அனைவரும் ஏறி அமர தியாகு வண்டிச் சாரதியாகக் கடமை ஏற்றான்.

தண்ணீரூற்றில் இருந்து மணல் பாதை வழியாக வந்து, தார் றோட்டில் ஏறி, ஆலடி வளைவில் திரும்பி, முல்லைத்தீவு வீதியால் நேராகச் சென்று குமுழமுனை றோட் சந்தி, மாஞ் சோலை ஆஸ்பத்திரி, ஆகியவற்றைக் கடந்து வற்றாப்பளைச் சந்தியைச் சென்றடைந்தனர். வற்றாப்பளைக் கண்ணகி அம் மனை மானசீகமாக வழிபட்டபின் தொடர்ந்து செல்கின்றனர்.

வற்றாப்பளை தாண்டித் தென்னந் தோப்புக்களைக் கடந்து, கேப்பாபுலவுக் கிராமத்தைச் சென்றடைந்தனர். புதுக்குடி யிருப்பு எல்லைப் பகுதியில் ஷெல் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தமையால் தம்பி சுப்பிரமணியத்தின் வீட்டில் தங்கிச் சிறிது தாமதித்துச் செல்ல முடிவு செய்தார் தர்மலிங்கத்தார்.

டிராக்டரைத் தெரு ஓரமாக நிறுத்திவிட்டுப் பார்த்த போது வீடு பூட்டி இருந்தது. தம்பி குடும்பத்தினர் இடம் பெயர்ந்து சென்று விட்டார்கள் போல் இருக்கிறது. வளவு முழுவதும் தென்னை, மா, பலா, வாழை என்று ஒரே பசுமையாக

இருக்கிறது. இக் கிராமத்தில் இன்னும் ஷெல் விழத் தொடங்க வில்லை என்பது புலனாகியது.

இருவரும் மாமர நிழலில் சிறிது நேரம் இளைப்பாறிய பின்னர் கிணற்றடிக்குச் சென்று முகம், கை, கால் கழுவிவிட்டு வந்து சாப்பிட்டுப் பசியாறினர். மாலை நேரம் ஆகிவிட்டது.

மாட்டுவண்டி அப்போதுதான் வந்து சேர்கின்றது. வற்றாப்பளையில் தங்கிச் சாப்பிட்டு விட்டு வருவதாகக் கூறினார்கள். ஷெல் சத்தம் முற்றாக ஓய்ந்து விட்டது. அகதிகள் அவசரம் அவசரமாக மூட்டைமுடிச்சுக்களுடன் அடுத்த ஊரை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

தர்மலிங்கத்தார் சொன்னார், "சரி கதைச்சுக் கொண்டு நிற்க நேரமில்லை, நாங்கள் போறம் நீங்கள் பின்னாலை வாங்கோ" என்று. பிள்ளைகளைக் கட்டித் தழுவி முத்தமிட்ட பின் தர்மலிங்கத்தார் டிராக்டரில் ஏறி அமர்ந்தார். தங்கம்மா சொன்னா "பார்த்துக் கவனமாய் போங்கோ" என்று.

டிராக்டர் ஒரு கால் மைல் தூரம் கூடப் போயிருக்காது. காதைச் செவிடாக்கும் படு பயங்கரமான சத்தமொன்று அப் பக்கமாகக் கேட்டது. அது நிச்சயமாக ஒரு ஆட்டிலறி ஷெல் ஆகத்தான் இருக்கவேண்டும். தங்கம்மாவும், சாந்தியும், பிள்ளைகளும் பயத்தால் குளறத் தொடங்கிவிட்டார்கள்.

"தூரத்திலைதான் சத்தம் கேட்டது பயப்படாதேங்கோ" என்று ஆறுதல் கூறிய தியாகு "ஷெல் மீண்டும் விழுமோ" என்று உள்ளூரப் பயந்தபடி மெல்ல மெல்லச் சென்று பார்த்த போது தர்மலிங்கத்தாரும், ராசுவும் ஷெல்லுக்கு இரையாகி, இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து, செய்வதறியாது திகைத்து நின்றான்.

நன்றி - ஞானம்

# சூனியப் பிரதேசம்

கண்டியில் இருந்து அதிகாலை ஐந்து மணிக்கு பஸ்சில் புறப்பட்டு வவுனியா வந்து சேர்கின்றேன். அங்கிருந்து புறப்பட்டு, ஓமந்தை பஸ் எடுத்து ஓமந்தை ராணுவச் சோதனைச் சாவடியில் இறங்குகின்றேன். பரிசோதனை எல்லாம் முடித்த பின் ராணுவ சூனியப் பிரதேசத்தைக் கடந்து, புளியங் குளத்திற்கு வந்து சேர்கின்றேன்.

அங்கு "பாஸ்" எடுத்தபின் தண்ணீ ரூற்று ஊடாக முல்லைத்தீவு செல்லும் பஸ்ஸில் ஏறி வசதியாக அமர்ந்து கொள் கின்றேன்.

பஸ் மெதுவாக வெளிக்கிட்டுப் புளி யங்குளம் சந்தியால் திரும்பி, முல்லைத்தீவு றோட்டில் ஓடிக் கொண்டிருக்கின்றது. கிரவல் பாதையாதலால் எங்கும் ஒரே தூசிப் படலம். மூக்கை மூடிக் கைக்குட்டையால் கட்டிக்கொள்கின்றேன்.

கரடு முரடான பாதையில் பஸ் குலுங் கிக் குலுங்கி ஓடிக்கொண்டிருக்கின்றது. அக்கம் பக்கம் பார்க்கின்றேன். காட்டு மரங்களிலும் ஒரே தூசிப்படலம் படர்ந்திருக்கின்றது. ஆங்காங்கே நீர் நிலைகளும், அவற்றைச் சுற்றி வயல் வெளி களும், கால் நடைகளும் தென்படுகின்றன.

நயினாமடு, தண்டுவான், நெடுங்கேணி என்று இடை யிடையே ஊர்கள் வந்தாலும் எந்த ஊரிலும் மக்களைக் காண வில்லை. ஏன்? என்று என்னை நானே கேட்டுக் கொள்கின்றேன்.

காட்டு வினாயகர் கோவில் வீதியால் திரும்பி பஸ் முள்ளியவளைக்குள் நுழைகின்றது. ஆங்காங்கே வீடுகள் உடைந்து காணப்படுகின்றன. ஆளரவத்தைக் காணவில்லை.

வித்தியானந்தாக் கல்லூரி, நெடுங்கேணி றோட் சந்தி ஆகியவற்றை கடந்து தண்ணீரூற்று ஆலடி வந்ததும் பெல் அடித்து இறங்கிக் கொள்கின்றேன்.

எவ்வளவு கலகலப்பாக இருக்கும் ஆலடியில் அன்று ஒருவரையும் காணவில்லை. ஆலடி அருணாசலம் கடை, பொன்னம்பலம் கடை யாவும் பூட்டிக் கிடக்கின்றன.

நான் நேராக முருகேசு ஒழுங்கையில் இறங்கி நடக் கின்றேன். தேமாவடிப் பாலத்தருகில் குமுழமுனை றோட்டில் ஏறி நடக்கின்றேன். டிரைவர் ஆறுமுகம் வீட்டிலும் எவரும் இல்லை. வலது பக்கமாகத் திரும்பி நடக்கின்றேன். கனகையர் வீடு, மாலா வீடு, ஐயர் வீடு எல்லாமே வெறிச்சோடிக் கிடக் கின்றன.

நேராகத் தங்கையின் வீட்டுக்குச் சென்ற போது படலை திறந்தே கிடக்கின்றது. உள்ளே போனதும் அதிர்ச்சி அடை கின்றேன். வீட்டின் கதவு, யன்னல் ஒன்றையும் காணவில்லை. வீட்டுக்குள் பொருட்கள் எதுவுமே இல்லை. அண்ணார்ந்து பார்க்கின்றேன் ஓடுகளையும் காணவில்லை.

"மக்கள் இடம்பெயர்ந்து சென்றால் திருடர்கள் கதவு, நிலை, யன்னல் எதையுமே மிச்சம் விடமாட்டார்கள்" என்று கேள்விப்பட்டுள்ளேன். இன்றுதான் அதை நேரில் பார்க் கின்றேன். தங்கையும் குடும்பத்தினரும் எங்கே சென்றார்களோ? என்ன ஆனார்களோ? என்று எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டு வீட்டின் பின் பக்கம் செல்கின்றேன்.

கிணற்றில் வாளி, கயிறு ஒன்றையும் காணோம். ஒரு சிறு பிளாஸ்ரிக் வாளி மட்டும் ஓர் ஓரத்தில் அனாதரவாகக் கிடந்தது. எனது பிரயாணப் பையினை ஓர் ஓரமாக வைத்து விட்டு, உடை மாற்றிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்க்கின்றேன். துணி காயப் போடும் கொடி ஒன்று கண்ணில் படுகின்றது. அதை அவிழ்த்து

வாளியில் கட்டி மளமள வென்று கிணற்றில் நீரை அள்ளிக் குளிக்கத் தொடங்கினேன்.

குளிர்ந்த நீர் சில் என்று உடலில் பட்டதும் சுகமாக இருந்தது. பிரயாணக் களைப்பு நீங்கி விட்டது. ஆனால் பசிக் களை நீங்கவில்லை. சமையல் வசதி எதையும் காண வில்லை. அக்கம் பக்கத்து வீடுகளிலும் யாரும் இல்லை.

வளவைச் சுற்றி வந்தபோது மூலையில் நின்ற வாழையில் குலை யொன்று நன்றாகப் பழுத்தபடி இருந்தது. நல்ல காலம் திருடர் கண்ணில் படவில்லை. பழங்கள் சிலவற்றைக் குருவிகள் தின்றுவிட்டன.

எஞ்சியிருந்த பழங்களிற் சிலவற்றைப் பிடுங்கி மளமள வென்று சாப்பிட்டுப் பசியாறிக் கொள்கின்றேன். கிணற்று நீரை அள்ளிக் குடிக்கின்றேன். கொதிக்க வைக்காத குளிர் நீரைப் பருகியதும் வயிறெல்லாம் குளிர்கின்றது. மெல்ல மெல்ல இருள் படரத் தொடங்கியது.

வானமே கூரையாக இருந்த வீட்டுக்குள் சென்று, ஓர் அறை மூலையைச் சுத்தப்படுத்திவிட்டுப் பயணப் பையில் இருந்த சாரங்களைப் பாய் போல் விரித்துப் பயணப் பையைத் தலையணையாகப் பாவித்துப் படுத்துக் கொண்டேன். நுளம்புக் கடி தாங்க முடியவில்லை. தூரத்தே வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருக்கின்றன. நாய்கள் ஊளையிடுகின்றன. நித்திரை வரவில்லை தனிமை வேறு வாட்டியது.

கண்ணை இறுக மூடிக்கொண்டு நீண்ட நேரம் முயற்சி செய்து ஒருவாறு நித்திரையாகி விட்டேன். ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது வெளியே ஏதோ சத்தம் கேட்டுத் திடீரென விழித்துக் கொண்டேன்.

தேங்காய் விழுந்த சத்தமாக இருக்க வேண்டும். சேவல் கூவும் சத்தம் கேட்கின்றது. காகங்கள் கரைகின்றன. காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலை நோக்கி நடக்கின்றேன். கோவில் பூட்டப்பட்டு இருக்கின்றது.

கடவுளும் இடம் பெயர்ந்து எங்கோ சென்றுவிட்டார் போல் இருக்கின்றது. ஐயரையும் காணவில்லை. பக்தர்களும் எவரும் இல்லை. கேணிப்பக்கம் சென்று நீராடினேன். கிணற்றைப் பார்க்கின்றேன். கட்டுக்கு மேலால் நீர் வழிந்து ஓடிக் கொண்டிருக்கின்றது.

கேணிக்கு வடக்கே உள்ள வயல் வெளியைப் பார்க் கின்றேன். நெல் விளைந்திருக்கின்றது. ஆயினும் கவனிப்பார் இன்மையால் கட்டாக்காலி மாடுகள் அவற்றைத் தின்று அழித்துக் கொண்டிருக்கின்றன.

குருவிகள் கூட்டம் கூட்டமாக இறங்கி நெற் கதிர்களைக் கொறிக்கின்றன. வயற்கரையில் உள்ள நாவல் மரங்களில் குரங்குகள் தாவித் திரிகின்றன. கிழக்கே பார்க்கின்றேன் செங்கதிரோன் மெல்ல மெல்லத் தன் பொற்கதிர்களைப் பரப்பியபடி மேலெழுந்து வருகின்றான்.

நீராடி முடிந்து பூட்டிய கோவிலை வலம் வந்து வணங்கிவிட்டு நண்பர் ஒருவரின் வீடு நோக்கி நடக்கின்றேன். தேமாவடிப் பாலம் கடந்து குமாரபுரம் நோக்கிப் போகின் றேன். இதோ சித்திர வேலாயுத சுவாமி கோவில் வந்து விட்டது.

அதனருகில் தான் நண்பரின் வீடு. அருகில் சென்று பார்க்கின்றேன். யாரும் இல்லை. தங்கையின் வீடு போலவே இந்த வீட்டுக்கும் கதவு, யன்னல், ஓடுகள் எல்லாம் காணாமற் போயிருந்தன. இன்னும் சிறிது தூரம் நடந்தால் தங்கையின் சீனட்டிவயல் (நெல் வயல்) வந்து விடும். பஞ்சியைப் பாராமல் போய் வருவோம் என எண்ணி முன்னால் நடக்கின்றேன்.

முறிப்புக் குளத்து வாய்க்கால் நீரின்றி வெறிச்சோடிக் கிடக்கின்றது. இதே வாய்க்காலில் கழுத்தளவு தண்ணீரில் சிறு வயதில் தங்கையும், நானும், தம்பியும் நீந்தி விளையாடியது ஞாபகத்துக்கு வருகின்றது.

இதோ வயலும் வந்துவிட்டது. ஆனால் அங்கே பயிர் எதுவும் நாட்டியிருக்கவில்லை. மாடுகள் ஆங்காங்கே இறந்து கிடக்கின்றன. அவற்றை நாய்கள் பிய்த்துத் தின்கின்றன.

துர்நாற்றம் தாங்க முடியவில்லை.

மூக்கைப் பிடித்தபடி பின்னே நகர்கின்றேன். செல் வந்தப் பூமி இன்று ஷெல் வந்த பூமி ஆக மாறி விட்டதே! மக்கள் எத்தனை பேர் மரணித்திருப்பார்களோ? என்று கவலையுடன் எண்ணியபடி திரும்பிய போது அருகில் ஆயிரம் இடிகள் ஒரே நேரத்தில் விழுந்தது போல ஷெல் ஒன்று பயங்கர ஓசையுடன் விழுந்து வெடித்தது.

"ஐயோ" என நான் அலறி விட்டேன். "என்னப்பா கத்துறியள். கனவேதும் கண்டனீங்களே? எழும்புங்கோ கந்தோருக்கு லேட் ஆகுது." என்ற மனைவியின் குரல் கேட்டு எழுந்து உட்கார்ந்தேன்.

நன்றி – ஞானம்

# நிலவே நீ சாட்சி

அதிகாலை ஐந்து மணி இருக்கும். பௌர்ணமி நிலவு பிரகாசமாக எறித்துக் கொண்டிருந்தது. வெளியே ஏதோ சத்தம் கேட்டுத் திடீரெனக் கண்விழித்தார் இரத்தின சிங்கம். பேச்சுக்குரல்கள் கேட்கின்றன.

ஆம்! யாரோ சிங்களத்தில் கதைக் கின்றார்கள். பூட்ஸ் சத்தங்களும் தெளிவாய் கேட்கின்றன. இராணுவம் வந்து விட்டதை உணர இரத்தினசிங்கத்திற்கு அதிக நேரம் பிடிக்க வில்லை. அவர் மெதுவாக மனைவி யைத் தட்டியெழுப்பினார்.

அதேநேரம் "பங்கருக்குள் யார் இருக்கிறது, எல்லோரும் வெளியே வாங்க" என்று இராணுவத்தினர் சிங்களத்தில் கட்டளையிடவே எல்லோரும் அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தனர்.

"இராணுவம் வந்திட்டுது, நான் போய் அவங்களோடை கதைக்கிறன் சத்தம் போடாமல் இருங்கோ" என்று மற்றவர் களுக்குக் கூறிய இரத்தினசிங்கம் கைகளைத் தூக்கிய படி பங்கரை விட்டு வெளியே வந்தார்.

"பங்கருக்குள் யார் யார் இருக்கிறது?" என்று இராணுவத் தினர் சிங்களத்தில் கேட்டார்கள். இரத்தினசிங்கம் முன்பு கொழும்பில் கடை வைத்து இருந்தவர். சிங்களம் நன்றாகத் தெரியும். எண்பத்து மூன்றுக் கலவரத்துடன் வந்து முள்ளி வாய்க்காலில் குடியேறியவர்.

"எனது மனைவி ராசம்மா, மகள் பிரதீபா அவவின்

பிள்ளைகள் இரண்டு பேர் பங்கரில் இருக்கிறோம்" என்று இரத்தினசிங்கம் சிங்களத்தில் பதிலளித்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தோ என்னவோ இராணுவத்தினர் "சரி நாங்கள் உங்களை ஒன்றும் செய்யமாட்டோம், எல்லோரையும் வெளியே வரச்சொல்லுங்க" என்றார்கள்.

இரத்தினசிங்கம் மீண்டும் பதுங்கு குழிக்குள் இறங்கி "பிரச்சனை இல்லை எல்லோரும் வெளியாலை வாங்கோ" என்று கூறியதும் எல்லோரும் தயங்கித் தயங்கி ஒவ்வொருவராக வெளியே வந்தார்கள்.

இவ்வாறே இராணுவத்தினர் பல பதுங்கு குழிகளிலும் இருந்து ஆட்களை வெளியே அழைத்து எல்லோரையும் இடைத்தங்கல் முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். மூன்று நாட்களின் பின்பு மீண்டும் எல்லோரையும் வாகனங்களில் ஏற்றினார்கள்.

புதுக்குடியிருப்பு சந்திக்குச்சென்று, அங்கிருந்து கற்சிலைமடு றோட்டால் திரும்பி, ஒட்டுசுட்டான் ஊடாக மாங்குளத்தை அடைந்து, கனகராயன் குளம், புளியங்குளம், ஓமந்தை வழியாக வாகனங்கள் ஓடிக்கொண்டே இருந்தன. எல்லா ஊர்களுமே கட்டிடங்கள் தரைமட்டமாகி அழிந்து போயிருக்கக் காணப்பட்டன.

தாண்டிக்குளம் விவசாய ஆராய்ச்சி நிலையத்தைக் கடந்து சென்றதும் பட்டணப் பக்கம் செல்லாமல் மேற்காகத் திரும்பி, மன்னார் றோட்டால் வாகனங்கள் ஓடுகின்றன. "மன்னாருக்குத்தான் கொண்டு போகிறார்கள்" என்று எல் லோரும் எண்ணினார்கள். திடீரென்று ஓரிடத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டன.

எட்டிப் பார்த்தால் எல்லா இடமும் நீல நிறமாகத் தெரி கின்றது. மன்னார்க் கடலோ என அனைவரும் மயங்கினர். பின்பு நன்றாகப் பார்த்தபோது அலை கடல் அல்ல அவை அகதி களுக்கான நீல நிறத்திலான கூடாரங்கள் என்பதை அறிய முடிந்தது.

யாரோ சொன்னார்கள் இது "செட்டிகுளப் பிரதேசம்

காடுகளை வெளியாக்கிக் கூடாரம் அமைத்துள்ளார்கள்" என்று. "எல்லோரும் வாகனங்களை விட்டுக் கீழே இறங்குங்கள்" என்று இராணுவத்தினர் கட்டளையிட்டார்கள்

"இதோ இந்தக் கூடாரங்கள்தான் இனி உங்களுக்கான இருப்பிடங்கள் ஒவ்வொரு கூடாரத்திலும் ஐந்தாறு பேர் வீதம் தங்கலாம். எல்லாக் கூடாரங்களுக்கும் இலக்கங்கள் வழங்கப் பட்டுள்ளன. எந்தெந்தக் கூடாரத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்று நாளை தொடக்கம் பதிவேடுகளில் பதிவு செய்வோம்" என்று இராணுவத்தினரும், சிவில் அதிகாரிகளும் சிங்களத்தி லும் தமிழிலுமாக விளக்க மளித்தார்கள்.

மக்கள் தமது தலைவிதியை நன்கு புரிந்து கொண்ட வர்களாக "யாழ்தேவிப் புகை வண்டியில் கோணர் சீற் பிடிப்பது போல" மும்முரமாக இயங்கித் தத்தமக்குரிய கூடாரங்களைத் தெரிவு செய்வதில் ஈடுபட்டார்கள்.

"எல்லோரும் தத்தமது கூடாரங்களிலே தங்கி இருக்க வேண்டும், முட்கம்பி வேலிகளைத் தாண்டி எங்கும் போக முயற்சிக்கக்கூடாது, மக்களுடன் மக்களாகப் போராளிகள் யாராவது இருந்தால் அவர்கள் உண்மையைக் கூறி எம்மிடம் சரணடைய வேண்டும்" என்று இராணுவத்தினரும் அவர் களுடன் நின்ற தமிழ் மொழி பெயர்ப்பாளர்களும் மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துக் கொண்டிருந்தார்கள்.

எல்லோருக்கும் சாப்பாடு கொடுக்கப் போவதாகக் கூறப் பட்டது. ஆயினும் இரவு ஒன்பது மணியாகியும் சாப்பாடு வந்து சேரவில்லை.

கூடாரங்கள் நன்கு திட்டமிட்டு வரிசையாக அமைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத் (சுமார் 100 கூடாரம்) தொகுதிகளையும் சுற்றி முட்கம்பி வேலிகள் அமைக்கப் பட்டிருந்தன. நிலத்திற்குக் கொங்கிறீற் போடாமல் வெறும் தரையாக விடப்பட்டிருந்தது.

"மழை பெய்தால் கூடாரத்துள் வெள்ளம் வரும்" என்று மக்கள் பேசிக் கொண்டார்கள். "வைகாசி மாதம் சோளகக் காற்று அடிக்கத் தொடங்கி விட்டது, அதனால் இப்

போதைக்கு மழை பெய்யாது" என்று வேறு சிலர் சமாதானம் சொன்னார்கள்.

கையிலிருந்த துண்டுகள் துணிகளைப் பாய் போல விரித்துப்போட்டு நித்திரை கொள்ளத் தலைப்பட்டனர் பலர். குண்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் இல்லாத படியால் அவர்கள் நிம்மதியாக நித்திரை செய்தார்கள். மனைவி பிள்ளை கள் உறங்கிவிட்ட போதிலும் இரத்தினசிங்கத்திற்கு நித்திரை வரவில்லை.

அவர் மெதுவாகக் கூடாரத்திலிருந்து வெளியே வந்து, தரையில் உட்கார்ந்து, வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். "அகதிகள் தானே" என்று வித்தியாசம் காட்டாமல் வழமை போலவே நிலவு பிரகாசமாக எறித்துக் கொண்டிருந்தது.

இராணுவத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாளர் ஒருவர் வைத்திருந்த வானொலியில் "நிலவே நீ சாட்சி" என்ற சினிமாப் பாட்டுப் போய்க் கொண்டிருந்தது.

நிலத்தில் துவாயை விரித்து அதில் மெதுவாகச் சரிந்து கொண்டார் இரத்தினசிங்கம். சிறிது நேரத்தில் கண்ணயர்ந்து தூங்கிப்போனார்.

அடுத்த பொழுதும் விடிந்தது. காகங்களின் கா, கா சத்தமும் குயில்களின் கூ, கூ குரல்களும் எங்கோ தூரத்தில் கேட்டவண்ணம் இருந்தது. "தேநீரும், பணிசும் கொடுக்கப் படும், எல்லோரும் கியூ வரிசையில் நின்று வாங்கிக் கொள்ளுங்கள்" என்று இராணுவம் அறிவித்தல் விட்டது.

நித்திரை விட்டெழுந்த ராசம்மா "நேற்றிரவு கணவர் எங்கே யென்று பார்க்காமல் நித்திரையாகிப் போனேனே" என்று கவலைப்பட்டபடி முற்றத்தில் படுத்திருந்த கணவரை "இஞ்சேருங்கோ இஞ்சேருங்கோ" என்று தட்டி எழுப்பினாள். இரத்தினசிங்கம் எழும்பவில்லை. உயிர் இல்லாத வெறும் உடம்பு எவ்வாறு எழும்புவது?

"ஐயோ எங்களை விட்டிட்டுப் போட்டியளே" என்று ராசம்மா நெஞ்சில் அடித்துக் குளறத் தொடங்கினாள்.

நன்றி – ஜீவநதி

# மீள் குடியேற்றம்

என்னைப்போல் மீளக்குடியேறக் காத்திருக்கும் மற்றவர் களுடன் முகாம் அனுப வங்களைப் பற்றிப் பேசிக் கொண்டு கியூ வரிசையில் நின்றபோது இ.போ.ச பஸ் ஒன்று வேகமாக வந்து பிரேக் அடித்து நின்றது.

ஆள் அடையாள அட்டையையும், மீள்குடியேற்ற அனுமதிப் பத்திரத்தையும் பார்த்து ஒவ்வொருவராக பஸ்ஸில் ஏற அனுமதித்தார்கள். குழந்தை குட்டிகளுடன் வந்தோரையும், வயது போனவர்களையும் ஆசனங்களில் இருக்கச் சொல்லியும், ஏனையோரை நிற்கச் சொல்லியும் சொல்லிவிட்டு பஸ்சை எடுத்தார்கள்.

ஓமந்தை வரையுமே வீடுகள் காணப் படுகின்றன. அதற்கப்பால் தரைமட்டமான வீடுகளும், காடுகளும், கால் நடைகளும், நீர் நிலைகளும், செடிகள் வளர்ந்த வயல் நிலங் களும் காணப்படுகின்றன.

புளியங்குளம், நயினாமடு, மதியாமடு ஆகிய ஊர் களைக் கடந்து பஸ் நெடுங் கேணியை அடைந்தது. பலர் அங்கு இறங்கிக் கொள்கின்றனர்.

வழமையாக நாம் தமிழ்ப் பாட்டுக்களைக் கேட்டுக் கொண்டே தேநீர் குடிக்கும் சைவக் கடையைக் காணவில்லை. மாறாக அதில் ஒரு மண்மேடு மட்டும் இருந்தது. நாகதம்பிரான் கோவில் முன்பாக இருந்த உண்டியலையும் திருநீற்றுத் தட்டையும் காணவில்லை. பஸ் பயணத்தைத் தொடர்ந்தது.

காதலியார் சம்மளங்குளத்தைத் தாண்டி ஓட்டு சுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயச் சந்தியில் பஸ் நிற்பாட்டப்பட்டது. அதிலும் பலர் இறங்கிக் கொண்டனர்.

ஒருக்கால் கோயிலுக்குப் போய்ச் சாமி கும்பிட்டு விட்டுத் தேநீரும் குடித்து விட்டு வரப் பயணிகள் அனுமதி கேட்டும் கண்டக்டர் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. ராணுவத்தினர் அனுமதிக்கமாட்டார்களென்று கண்டக்டர் காரணம் சொன்னார்.

பஸ் புதுக்குடியிருப்பு றோட் சந்தியை அடைந்ததும், கிழக்குப் பக்கம் திரும்பி முல்லைத்தீவு றோட் வழியாக ஓடத் தொடங்கியது. கூழாமுறிப்பு ஓட்டுத் தொழிற்சாலை உடைந்து பாழாகிக் கிடந்தது. அருகில் இருந்த தொழிலாளர் குடியிருப் புக்களைக் காணவில்லை.

கூழாமுறிப்புக் குளத்தைக் கடந்து, முள்ளியவளை காட்டு விநாயகர் கோவில் சந்தியை அடைந்தோம். முள்ளிய வளை ஆட்கள் பலர் அதில் இறங்கிக் கொள்ள, பஸ் பயணத்தைத் தொடர்ந்தது.

வித்தியானந்தாக் கல்லூரி, தபால் நிலையம், சந்தை, நெடுங்கேணி றோட் சந்தி ஆகியவற்றை பஸ் கடந்து சென்ற தும், தண்ணீரூற்று ஆலடியில் பெல் அடித்து இறங்கிக் கொள் கின்றேன். வித்தியானந்தாக் கல்லூரியில் என்னுடன் ஒரே வகுப்பிற் படித்த ஜெகதீஸ்வரன், அப்துல் லதீப் ஆகியோரின் வீடுகளைக் கடந்து எனது வீட்டை அடைகின்றேன்.

வீட்டைச் சுற்றிப் புதர் மண்டியிருந்தது. கதவு, யன்னல் களைக் காணவில்லை. ஓடுகளையும் காணவில்லை. அப்போது அவ்விடத்திற்கு வந்த ராணுவத்தினர் "ஏன் இவ்விடத்தில் நிற்கிறீர்கள்?" என்று சிங்களத்தில் கேட்டார்கள்.

"இதோ இது எனது வீடு இதில் மீளக்குடியேற வந்துள்ளேன்" என்றேன் நான். தமது "மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு" வரச்சொன்னார்கள்.

"இவர்கள் அரசாங்க ஊழியர்கள் நானும் அரசாங்க உத்தியோகத்தில் இருந்தவன்தானே் ஏன் உவங்களுக்குப்

பயப்படுவான்" என்று எண்ணியவனாக அவர்களைப் பின் தொடர்ந்தேன்.

எனது அடையாள அட்டையையும் மீள் குடியேற்ற அனுமதிப் பத்திரத்தையும் பரிசோதித்துவிட்டு உலருணவுகள் தந்து சமைத்துச் சாப்பிடும்படி கூறினார்கள்.

இரண்டு சிறிய பானைகள், இரண்டு சட்டிகள், பிளாஸ்ரிக் வாளி, சிறிய கயிறு, சிறிய கத்தி, மண்வெட்டி, தீப் பெட்டி, அலவாங்கு, திருவலகு போன்றவற்றையும் புத்தகத்தில் பதிந்து, எனது கையெழுத்தை வாங்கிக் கொண்டு, அனைத்துப் பொருட்களையும் என்னிடம் ஒப்படைத்தார்கள்.

எனது வளவுக்குச் சென்ற நான் வாளியையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் செல்கின்றேன். கிணற்றில் கையால் தொடும் அளவிற்கு நீர் நிற்கின்றது. இவ்விடத்தில் தண்ணீர் ஊற்று அதிகமாக இருப்பதால் தான் தண்ணீரூற்று என்ற காரணப் பெயர் வந்ததாகத் தகப்பனார் சொல்லக் கேட்டுள்ளேன்.

தண்ணீரை வாளியால் அள்ளிக் களைப்புத் தீருமட்டும் குளிக்கின்றேன். நீரை அள்ளி வீட்டையும் கழுவிக் கொள் கின்றேன். முற்றத்தில் செடி கொடிகளை வெட்டி அகற்றிவிட்டு மூன்று கற்களை வைத்து அடுப்பை மூட்டிக் கொள்கின்றேன்.

பானையைக் கழுவி அரிசியையும் கழுவி அதற்குள் போட்டு நீரையும் விட்டு அடுப்பில் வைத்தேன். பருப்பைக் கழுவி ஒரு சட்டிக்குள் இட்டேன்.

காணிக்குள் காணப்பட்ட தேங்காய்களில் ஒன்றை உரித்துக் கத்தியால் உடைத்து திருவலகால் துருவிப் பாலைப் பிழிந்து சட்டிக்குள் விட்டேன். கிணற்றடியில் காணப்பட்ட கொச்சிச் செடிகளில் காய்களைப் பிடுங்கி அளவாக வெட்டி அதற்குள் போட்டேன்.

சோறு ஆக்கி முடிந்ததும் பருப்புச் சட்டி அடுப்பில் ஏறிக் கொண்டது. பருப்பு அவிந்தபின் உப்பு நீரை அளவாக விட்டுக் கறியை அடுப்பிலிருந்து இறக்கிக் கொண்டேன்.

ஒரு வாழை இலையை வெட்டிக் கழுவி அதில் சோற்றையும் பருப்புக் கறியையும் இட்டுச் சாப்பிடத்

தயாரானேன்.

அப்போது மனைவி, பிள்ளைகளின் ஞாபகம் வந்தது. "அவர்களை இப்போது கூட்டி வரக் கூடாது, நிலைமை இன்னும் கொஞ்சம் வழமைக்குத் திரும்பிய பின் கூட்டி வரலாம்" என்று எண்ணியபடி மளமள வென்று சாப்பிடு கிறேன். சாப்பிட்டு முடிந்ததும் மற்றப் பானைக்குள் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து நன்றாக ஆற விட்டுக் குடித்ததும் பெரிய ஆறுதலாக இருந்தது.

வயிற்றுப்பசி தீர்ந்து விட்டது. ஆனால் அறிவுப்பசி மேலோங்கத் தொடங்கியது. எனது மீள் குடியேற்ற அனுபவங் களை ஒரு ஆவணமாக்கி அதனை ஞானம் சஞ்சிகைக்கு அனுப்பி வைக்க வேண்டு மென்ற ஆசை ஏற்பட்டது. சிறிதும் தாமதிக்காமல் பேனாவை எடுப்பதற்காகத் கையை நீட்டினேன்.

அப்போது "டமார்" என்று ஏதோ சத்தம் கேட்கவே திடுக்கிட்டுக் கண் விழித்தேன். அருகில் இருந்த மேசையின் மீது மனைவி வைத்துவிட்டுப் போன தேநீர்க் கோப்பை கையில் தட்டுப்பட்டு நிலத்தில் வீழ்ந்து சுக்குநூறாக உடைந்து போய் இருந்தது. "மனிசி வந்து நெருப்பெடுக்கப்போகுது" என்று நான் எண்ணியபோது...

"என்னப்பா சத்தம்" என்று கேட்டுக் கொண்டு மனைவி ஓடிவர, நான் நடந்ததைக் கூறி "ஒப்புதல் வாக்குமூலம்" அளித்துவிட்டேன்.

"கனடாவுக்கு வந்து செற்றில் பண்ணச் சொல்லி மகன் எத்தனை தரம் கேட்டுப் போட்டான். நீங்கள் என்னடா எண்டால் தாயகம், சுயநிர்ணயம், சமாதான சகவாழ்வு அது இது எண்டு கனவு கண்டு காலத்தை வீணாக்கிக் கொண்டு இருக்கிறியள்" என்று புறு புறுத்தபடி மனைவி குசினிப்பக்கம் போக, "விடியற் காலமை ஏன் வீண் பிரச்சனை" என்று எண்ணிய நான், மனைவியின்மீது எதிர்த் தாக்குதல் தொடுக் காமல் "சொந்த மண்ணில் குடியேறும்" எனது கனவை மீட்டு அசை போட்டபடி பாத்றூமை நோக்கி நடையைக் கட்டினேன்.

நன்றி– ஞானம்

## சம்பளக் காசு

அந்த நேரம் யாழ் குடாநாட்டில் சட்டமும் ஒழுங்கும் மோசமாகச் சீர்குலைந் திருந்தது. அந்த அலுவலகத்துக்குச் சொந்தமான வாகனம் பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப் பாணக் கோட்டையில் ஒப்படைக் கப்பட்டு இருந்தது.

அன்று நிர்வாக உத்தியோகத்தர் பால சுப்பிரமணியம் இரு உதவியாளர்களுடன் உத்தியோகத்தர்களின் சம்பளக் காசோலையை மாற்றுவதற்காக வங்கிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

வங்கியில் பணத்தைப் பெற்றுக் கொண்டு, மூவருமாகத் தமது கந்தோரை நோக்கிச் சைக்கிளில் பயணித்துக் கொண்டி ருந்தார்கள்.

திடீர் என்று இவர்கள் முன் தோன்றிய இனந் தெரியாத நபர்கள் பாலசுப்பிர மணியத் திடம் இருந்த ஆபீஸ் பையை லபக் கென்று பிடுங்கிக் கொண்டு, தமது வாகனத்தில் ஏறி, மின்னல் வேகத்தில் சென்று மறைந்து விட்டார்கள்.

அதிர்ச்சியடைந்த பாலசுப்பிரமணியம் குழுவினர் ஒரு வாறு சுதாகரித்துக் கொண்டு தமது கந்தோரைச் சென்றடைந் தார்கள்.

வாயாடியான ஒரு சிற்றூழியர் கேட்டார் "என்ன சேர் போகும்போது Office bag கொண்டு போனீர்கள், அதைக் காண வில்லையே" என்று "அதைக் கள்ளர் பறித்து விட்டார்கள்"

எரிச்சலுடன் பதில் கூறிய பாலா தனது அறைக்குச் சென்றார். உதவியாளர்களும் அவரது அறைக்குட் சென்றதும் கதவு உட்புறமாகப் பூட்டப்பட்டது.

மூன்று பேரினதும் பொக்கெற்றுக்களில் திணிக்கப் பட்டிருந்த பண நோட்டுக் கட்டுகள் வெளியே எடுக்கப்பட்டு, உத்தியோகத்தர்களின் சம்பளம் கொடுத்துத் தீர்க்கப்பட்டது.

பறிபோன Officebag இற்குள் இருந்தது கத்தரிக்காயும் பயத்தங்காயும், பச்சை மிளகாயும் அன்றைய புதினப் பத்திரிகையும் மட்டுமே.

# கொண்டு வந்த சீதனம்

திலீபன் 28 வயதினனான அழகான வாலிபன். சிவலை. அழகான மீசை வைத்திருந் தான். திலீபன் வீட்டுக்கு முன்வீட்டில் கீதா என்று ஒருபெண்பிள்ளை தாயுடன் வசித்து வந்தாள். வயது சுமார் 22 இருக்கும். வழி தெருவில் திலீபனைக் கண்டால் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே போவாள். திலீபனுக்கும் அவள்மீது உள்ளூர ஒரு விருப்பம் இருக்கவே செய்தது. ஆயினும் கீதா வின் குடும்பம் ஏழைக் குடும்பமாக இருந்த மையால் திலீபனின் பெற்றோர் அவர்களைக் கணக்கில் எடுப்பதில்லை. திலீபனுக்கு அதிக சீதனமும் டொனேஷனும் வாங்கித் திரு மணம் செய்யவேண்டும் என்று திலீபனின் அம்மா கனவு கண்டுகொண்டிருந்தா.

இது இவ்வாறு இருக்கையில் திலீபனுக்கு அயலூரில் இருந்து சுகந்தி என்றொரு பெண்ணைத் திருமணம்பேசி வந்தார்கள். நல்ல பணக்காரர்கள். ஆனால்பெரிய அழகி என்ற கூற முடியாது. நிறமும் பொதுநிறம். திலீபன் சொன்னான். இந்தப் பெண் வேண்டாம் முன்வீட்டு கீதா அழகான பெண். நல்ல சிவப்பி. அதைக் கேட்டுச் செய்யலாம் ஏன் தூரம் துலைக்குப் போவான்? என்று.

அவர்கள் ஒன்றுக்கும் வழி இல்லாதவர்கள். ஆனால் சுகந்தி பணக்காரி போதிய டொனேஷன் வாங்கலாம். சுகந்தியைத்தான்செய்வோம் என்று அம்மா ஒற்றைக் காலில்

நின்றா. திலீபன் தாய் தகப்பனை ஒரேயடியாக வெட்டிக் கொள்ள விரும்பாமல் தாயின் சொல்லை ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தான். திலீபன் சுகந்தி திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

தான் கொண்டுவந்த சீதனம் பற்றியே கதைப்பதும் தான் கொடுத்த டொனேஷன் மூலம்தான் திலீபனின் பிறந்தகம் உருப்பட்டதென்று கூறுவதும் சுகந்தியின் வழக்கமாக அமைந்தது. இவ்வாறெல்லாம் பேசிப் பழகவேண்டாமென்று நீண்ட நாட்களாக மனைவிக்குப் புத்திமதி கூறிவந்தான் திலீபன். ஆனால் நிலைமையில் மாற்றமில்லை. பொறுமை யிழந்த திலீபன் "வாங்கிய எல்லாம் திருப்பித்தரலாம் விவாகரத் துக்குச் சம்மதமா" என்று கேட்டான். அதிர்ச்சியடைந்த சுகந்தி அதன்பின் தான் கொண்டுவந்த சீதனம் பற்றிப் பேசுவதை நிறுத்திக்கொண்டாள்.

இது இவ்வாறிருக்க சுகந்தியின் வயிற்றில் கர்ப்பம் உரு வாகிவிட்டது. இதன் காரணமாக சுகந்திக்கு விசேடமான சாப்பாடுகள் கொடுக்கவேணும். அதன்பின் பிள்ளைப் பேற்றைப் பார்த்துப் பராமரிக்கவேணும். ஆகவே சுகந்தியைத் தன் வீட்டுக்கு அனுப்ப முடியுமா என்று அவளின் தாய் உருக்க மாகக் கேட்டுக்கொண்டா. மாமியாரின் ஆலோசனைப்படி சுகந்தியை கணவன் திலீபன் காரில் கூட்டிச் சென்று தாய் வீட்டில் விட்டுவிட்டான்.

____சுகப் பிரவசம் நடந்து 31ம் நாள் சடங்குசம்பிரதாயங்கள் முடிந்தபின் சுகந்தியும்_பிள்ளையும் காரில் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார்கள். பிள்ளை நாளொரு வண்ணமும்_பொழு தொரு மேனியுமாக வளர்ந்து வந்தான். சுகந்தியும், திலீபனும் மகன் கிடைத்த சந்தோஷத்தில் எல்லாக் கவலைகளையும் மறந்திருந்தார்கள்.

ஒருநாள் சுகந்தி கணவனைப் பார்த்து,"எனக்கொரு சந்தேகம் ஏற்பட்டிருக்குது" என்றாள். "என்ன சந்தேகம்" என்று கணவன் கேட்டான். "இந்த டயறியிலை உங்கடை கைப்பட

எழுதியிருக்கு, கீதா 300/- கீதா, 200/- என்ற மாதிரி முன் வீட்டு கீதாவுக்கு காசு கடனாகக் குடுத்தனீங்களா?

"அட உதுதானா சந்தேகம்" எனக் கேட்டு ஹஹ்ஹ ஹ்ஹா என்று பலமாகச் சிரித்தான் திலீபன்.

"என்ன சிரிக்கிறியள்? என் கேள்விக்கென்ன பதில்? உண்மையைச் சொல்லுங்கோ?"

திலீபன் சிரிப்பை அடக்கிக் கொண்டு "நீர் பிள்ளைப் பேற்றுக்காக அம்மா வீட்டை போன காலத்திலை நான் இரண்டொரு நாள் சமைச்சுப் பாத்தன். சரிவரவில்லை பிறகு பக்கத்திலை உள்ள கீதா Hotel லை தான் சாப்பிட்டது. அப்படிச் சாப்பிட்ட கணக்கைத்தான் டயறியிலை கீதா 300/=, கீதா 200/= என்ற மாதிரிச் சுருக்கமாக எழுதியிருக்குது" என்றான்.

சுகந்தியிடம் இருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப் பட்டது. "நீங்கள் பிழையான வழியிலை போகக்கூடிய ஆளல்ல எண்டு எனக்கு நல்ல வடிவாய்த் தெரியும் நான் சும்மா பகிடிக் குத்தான் கேட்டனான்" என்று சொல்லிச் சிரித்துச் சமாளித்தாள் சுகந்தி.

நன்றி – பூங்காவனம்

# பட்டம்

முத்தையா ஓ.எல் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தான். அணிந்துகொள்ள ஆன சப்பாத்தும் இல்லை. கைச்செலவுக்குப் போதிய பணமுமில்லை. மற்ற மாணவர் களைப் போலத் தாராளமாகச் செலவழிக்க முடியவில்லையே என்ற கவலை முத்தை யாவை வாட்டி வதைத்தது.

விரக்தியின் எல்லைக்கே சென்று விட்ட முத்தையா படிப்பைக் குழப்பி விட்டு ஊர்சுற்றத் தொடங்கினான்.

பாடசாலைக்குப் போகுமாறு தாய் எவ்வளவோ வற்புறுத்தியும் போக மறுத்து விட்டான். அதன் பின் தாய் தனது உறவின ரான ஒருவரின் கடையில் முத்தையாவை வேலைக்குச் சேர்த்து விட்டா. கடையில் ஒழுங்காக வேலை செய்து வந்தான் முத்தையா.

ஒரு மாதம் முடிந்ததும் சம்பளம் கொடுக்கப்பட்டது. சாப்பிட்டுவிட்டு வருவ தாக முதலாளியிடம் கூறிவிட்டுக் கடையை விட்டு வெளியேறிச் சென்றான் முத்தையா.

சிறு வயதில் பட்டம் விட்டு விளையாடவில்லையே என்ற கவலை நீண்ட காலமாக இவன் மனதில் இருந்து வந்தது. வீட்டுக்குப் போகாமல் நண்பன் ஒருவனையும் அழைத்துக் கொண்டு நேராகப் பட்டணத்துக்குப் போய்ப் பட்டம் விற்கும் கடையிற் பட்டமொன்றையும் வாங்கிக் கொண்டு இருவருமாக முல்லைத்தீவுக் கடற்கரைக்குச் சென்றார்கள். பட்டம் விட்டு விளையாடியதில் நேரம் போனதே தெரியவில்லை. பட்டம்

விட்டு முடிந்து கடைக்குப் போய்ச் சேர நேரம் பிற்பகல் 3.45 மணியாகி விட்டது.

முத்தையாவைக் கண்டதும் முதலாளியின் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தது. "இனி உனக்கு இங்கே வேலையில்லை இனி இந்தப்பக்கம் வராதே" என்று கூறி முத்தையாவை வேலை நீக்கம் செய்து விட்டார் முதலாளி.

பின்னர் முத்தையா இளைப்பாறிய ஆசிரியர் ஒருவரின் ஆலோசனையின்பேரில் பிறைவேற் ஆக ஓ.எல் படித்துப் பரீட்சை எழுதிப் பாஸ் பண்ணினான். உத்தியோகமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பல இடங்களுக்கும் விண்ணப் பம் அனுப்பினான்.

அரசாங்க கிளறிக்கல் சோதனை எழுத வருமாறு கடிதம் வந்தது. சோதனை எழுதி பாஸ் பண்ணி, நேர்முகப் பரீட்சையும் நடைபெற்று முடிந்தபின் கொழும்பில் ஒரு முக்கியமான திணைக்களத்தில் நியமனம் வழங்கப்பட்டது.

அம்மா நல்ல சீதனத்துடன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தா. அழகான மனைவி இரண்டு ஆண்பிள்ளை களைப் பெற்றெடுத்தாள்.

இரண்டு பிள்ளைகளும் வளர்ந்து நன்கு படித்து ஒருவன் டாக்டராகவும், மற்றவன் பொறியியலாளராகவும் கொழும்பில் வேலை செய்கின்றார்கள். இருவரும் திருமணம் செய்து மனைவி மார், பிள்ளை குட்டிகளுடன் கொழும்பில் வசிக்கின்றார்கள்.

யுத்த சூழ்நிலை காரணமாக 2009ம் ஆண்டில் முத்தை யாவும் மனைவியும் இடம் பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்குச் சென்றார்கள்.

முள்ளிவாய்க்காலில் ஒருநாள் கடும் யுத்தம் நடைபெற்ற போது பங்கருக்குள்ளிருந்து ஒன்றுக்குப் போவதற்காக வெளியே வந்த முத்தையா ஷெல் விழுந்து ஸ்தலத்திலேயே பலியானார்.

(யாவும் கற்பனை அல்ல)

## தாய் மண்

பூலோகசிங்கம் தெஹிவளையிற் கடை வைத்திருந்தவர். 1977ம் ஆண்டில் இன வன்முறை ஏற்பட்ட போது காடையர்கள் இவரது கடையைக் கொள்ளையடித்து எரித்துவிட்டார்கள்.

பின்னர் கலவரம் அடங்கிய பின்னர் பூலோகசிங்கம் பதுளைக்குச் சென்று அங்கு ஒரு கடையைப் போட்டார். பதுளை அப்போது ஒரு தமிழ்ப் பிரதேசமாகவே இருந்தது. கடை ஒகோ என்று வளர்ந்து நல்ல இலாபத்தை ஈட்டிக் கொடுத்தது. பூலோகசிங்கம் தனது பிள்ளைகளை யாழ்ப் பாணத்துக்கு அனுப்பி, அங்கு கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். பிள்ளைகளுக்கு உதவியாகத் திருமதி பூலோக சிங்கமும் யாழ்ப்பாணம் சென்று வசிக்கலானார்.

இவ்வாறிருக்கையில் 1983ம் ஆண்டு ஆடி மாதம் மீண்டும் இனவன்முறை வெடித்தது. பூலோகசிங்கத்தின் கடை யும் வீடும் கொள்ளையடிக்கப்பட்டது. பூலோகசிங்கம் அகதி முகாமில் வாழ்ந்து பின்னர் தனது சொந்தப் பிரதேசமாகிய முல்லைத்தீவுக்குச் சென்றார்.

சிங்களப் பிரதேசங்களில் முதலீடு செய்வது புத்தியற்ற வேலை என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்த பூலோகசிங்கம் 1984ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் முல்லைத்தீவுப் பட்டணத்தில் ஒரு கடையைத் தொடங்கினார்.

வியாபாரம் நன்றாக நடைபெறத் தொடங்கியது.

கடையில் உள்ளூர் இளைஞர்கள் இரண்டு பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

பூலோகசிங்கம் முல்லைத்தீவுப் பகுதியில் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக ரியூட்டறி யொன்றையும் உருவாக்கி ஆசிரியர்களையும் நியமித்தார். ஏழை மாணவர் களிடம் கட்டணம் அறவிடுவதில்லை.

வற்றாப்பளை அம்மன் கோவில் வேலைகளிலும், சமூக சேவைகளிலும் ஈடுபட்ட பூலோகசிங்கம் முல்லைத்தீவின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக மாறத் தொடங்கினார்.

இனக்கலவரங்களுக்குப் பயந்து சிங்களப் பிரதேசங் களிலிருந்து வெளியேறி முல்லைத்தீவுக்குச் சென்ற பூலோக சிங்கம் முல்லைத்தீவை யுத்தமேகம் சூழ்ந்தபோது செய்வதறி யாமல் திகைத்தார்.

கடையை வாடகைக்குக் கொடுத்துவிட்டு யாழ்ப் பாணம் சென்று மனைவி பிள்ளைகளுடன் இணைந்து கொள்ளலா மென்றால் அதற்கு விடுகின்றார்களில்லை. முக மாலைக்கு அப்பால் செல்ல அனுமதியில்லை. தெற்கே புளியங் குளத்துக்கு அப்பால் செல்ல அனுமதி இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தையும் கிழக்கு மாகாணப் போராளிகளையும் இழந்தபின்னர் இவர்கள் எப்படிப் போராடி வெல்லப்போகிறார்கள்? நான் எப்போது யாழ்ப்பாணம் சென்று மனைவி பிள்ளைகளைக் காண்பேன்? என்று பூலோகசிங்கம் கவலைப்படத் தொடங்கினார்.

நிலைமை வர வர மோசமானது. மக்கள் இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களுக்குச் செல்லத் தொடங்கினார் கள். பூலோசிங்கம் கடையில் இருந்த பொருட்களைப் பாது காப்பாகப் புதுக்குடியிருப்புக்கு அனுப்பத் தொடங்கினார். அதன்பின் வீட்டுப் பொருட்களையும் பாதுகாப்பாக அப்புறப் படுத்திய பின்னர் தானும் புதுக்குடியிருப்புக்கு இடம்பெயர்ந்து சென்றார்.

புதுக்குடியிருப்பிலும் கடுமையான சண்டை வெடித்த

போது உயிரைமட்டும் கையில் பிடித்தபடி பொக்கணை மாத்தளன் ஊடாக முள்ளிவாய்க்காலுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. **2009** மே மாதம் **1**ம் திகதி ராணுவத்திடம் சரணடைந்த பூலோகசிங்கம் அங்கிருந்து செட்டிகுளம் இடம்பெயர் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பில் விட்டுச் சென்ற இவரது மோட்டார் சைக்கில், டிராக்டர், கடைச்சாமான்கள், மற்றும் தளபாடங் களுக்கு என்ன நடந்ததென்று இன்றுவரை தகவல் இல்லை.

குறிப்பு: வன்னியில் உயிர் தப்பியிருக்கும் மூன்று லட்சம் மக்களின் வெவ்வேறான அனுபவங்களில் இதுவும் ஒன்று.

# இப்படியும் மனிதர்கள்

யுத்தம் வர வரத் தீவிரமாகியது. முள்ளியவளையைச் சேர்ந்த கமலனும், மனைவி சீதாவும், இரண்டு பிள்ளைகளுமாக இடம் பெயர்ந்து எங்காவது செல்லத் தீர்மானித்தார்கள். இவர்கள் சொந்தமாக வைத்திருந்த டிராக்டரில் நெல் மூடைகளையும், ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் ஏற்றிக்கொண்டு வற்றாப்பளைக்குச் சென்றார்கள்.

அங்கு வற்றாப்பளை அம்மன் கோவிலுக்கு அருகில் தற்காலிகக் குடிசை அமைத்து அதில் வசித்து வந்தார்கள்.

வற்றாப்பளையிலும் அங்குமிங்குமாக ஷெல் விழத் தொடங்கியபோது மீண்டும் டிராக்டரில் எல்லாப் பொருட் களையும் ஏற்றிக்கொண்டு இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள கேப்பாபுலவுக்குச் சென்றார்கள்.

அது ஒரு அமைதியான கிராமம். சொந்த ஊர் போலச் சிலகாலம் அங்கு நிம்மதியாக வாழ்ந்தார்கள்.

பின்னர் அங்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை தோன்றிய போது, மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள புதுக்குடி யிருப்புக்குச் சென்றார்கள்.

அங்கு வசித்தபோது கடும் நெருக்கடிகளும், நிர்ப்பந்தங் களும் ஏற்பட்டபடியால் டிராக்டர், நெல்மூடைகள் எல்லா வற்றையும் அப்படியே விட்டுவிட்டு உயிர் தப்பினாற் போது மென்று எண்ணி உடுத்த உடைகளுடன் காடுகளூடாக நடந்து

சென்று, பொக்கணை எனும் குக்கிராமத்தை அடைந்தார்கள்.

பின்னர் அங்கிருந்தும் விரட்டப்பட்டு, "வரலாற்று முக்கியத்துவம்" வாய்ந்த முள்ளிவாய்க்காலுக்கு அவர்கள் போய்ச் சேர்ந்தது தனிக் கதை.

*2009* மே மாதம் *15*ம் திகதி யுத்தம் முடிவடையும் தறுவாயில் சீதாவும், அவளது கணவனும், இரண்டு பிள்ளைகளும் ராணுவத்திடம் சரணடைந்து, செட்டிகுளம் முட்கம்பி முகாமிற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு உறவினர்களுடன் பேசிப் பறைந்து, நிம்மதியாக நித்திரையும் செய்யக்கூடியதாக இருந்தது.

வெளிநாட்டு உறவுகளிடமிருந்து பணம் கிடைக்கப் பெற்றவர்கள் அருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கடைகளில் பொருட்களை வாங்கிச் சமைத்துச் சாப்பிட்டார்கள். அல்லது தற்காலிக உணவகங்களுக்குச் சென்று தேவையானவற்றை வாங்கிச் சாப்பிட்டார்கள்.

இவ்விபரங்கள் யாவும் வவுனியா பட்டணத்தில் வசிக்கும் சீதாவின் அண்ணன் ஆனந்தனால் லண்டன் வாசியான தம்பி சுகுமாருக்கு அறிவிக்கப்பட்டது.

சுகுமார் அக்காவின் நிலை அறிந்து மிகவும் கவலைப்பட்டு, அக்கா குடும்பத்தின் செலவுக்காக மாதா மாதம் அண்ணன் ஆனந்தன் மூலமாகக் காசு அனுப்புவதாக உறுதியளித்தான்.

அவ்வாறே காசு அனுப்பப்பட்டு, ஆனந்தன் செட்டிகுளம் முகாமிற்குச் சென்று, மாதா மாதம் தங்கையிடம் பணம் கொடுப்பது வழக்கமாயிற்று.

*2009* செப்ரெம்பர் மாதம் *30*ம் திகதி சீதா குடும்பத்தினர் முட்கம்பி முகாமில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். சீதா வவுனியாப் பட்டணத்தில் இருந்து லண்டனுக்குக் கோல் எடுத்து, தாங்கள் முகாமில் இருந்து வெளியேறிச் சுதந்திரப் பறவைகளாகி விட்டதைத் தம்பிக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்தாள்.

"மிகவும் சந்தோஷம் அக்கா, நான் மாதா மாதம் அனுப்பிய காசு ஒழுங்காகக் கிடைத்தது தானே" என்றான் சுகுமார்.

"ஓம் தம்பி, மாதம் 15000 ரூபாப்படி 5 மாதம் 75000 ரூபா கிடைத்தது" என்ற சீதாவின் பதிலைக் கேட்டுத் திடுக்கிட்டான் சுகுமார். ஏனென்றால் அவன் அனுப்பிய காசு மாதம் 30000 ரூபாப்படி 5 மாதம் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவாகும்.

நன்றி – ஞானம்

# காரில் வந்த காரிகை

கண்டியில் இருந்து பனிதெனிய பஸ்ஸில் புறப்பட்டு, கண்ணொறுவ சந்தியில் இறங்கி, கண்ணொறுவ நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தேன். மகாவலிப் பாலத்தை அடைந்தபோது, குளிர் காற்று வீசி என்னைப் பரவசப் படுத்தியது.

திரும்பிப் பார்த்தேன். மகாவலி ஆறு "சலசல" என்ற சத்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் அழகை ரசிப் பதற்காகவும் குளிர் காற்றின் சுகத்தை அனுபவிப்பதற்காகவும் பாலத்தின்மீது சிறிது நேரம் தரித்து நின்றேன்.

அப்போது கண்ணொறுவ பக்கத்திலிருந்து வேகமாக வந்த வெள்ளை நிற வானொன்று என்னைக் கடந்து சென்றதும் திடீரென்று பிறேக் அடித்து நின்றது. "என்னைக் கடத்தப் போகிறார்களோ" என்று நான் பயந்துவிட்டேன். நல்ல வேளை அப்படியொன்றும் நடக்கவில்லை.

வானில் இருந்து நவநாகரீக நங்கை ஒருத்தி முன்பக்கக் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினாள்.

உதட்டுக்குச் சிவப்புச்சாயம் பூசியிருந்தாள். முன்தலை மயிரை அளவாகவெட்டி அதை முகத்தில் தவழ விட்டிருந்தாள். நல்ல சிவப்பி. மலைநாட்டு ஸ்ரைலில் சிவப்பு நிறசாறி உடுத் திருந்தாள்.

காதுகளில் அழகான தோடுகளும் கழுத்தில் மெல்லிய

சங்கிலியும் அணிந்திருந்தாள். ஒயிலாக நடந்து வானுக்குப் பின்புறமாக வந்தாள்.

டீக்கியைத் திறந்து இரண்டு "பாக்"குகளை வெளியே எடுத்தாள். சுற்று முற்றும் பார்த்த பின்னர் அவற்றை ஆற்றில் வீசி எறிந்துவிட்டு வானில் ஏறிக்கொண்டாள். வான் விர் என்று விரைந்து சென்றுவிட்டது.

பின்னர்தான் எனக்கு விளங்கியது ஆற்றில் எறியப் பட்டது குப்பைப் பொதிகள் என்று.

ஆற்றங் கரைகளிலுள்ள சின்னஞ் சிறு குடிசைகளில் வாழும் ஏழை மக்கள் ஆற்று நீரைத்தான் குடிக்கின்றார்கள் என்ற விபரம் குறித்த காரில் வந்த கும்பலுக்குத் தெரியுமோ என்னவோ தெரியாது.

தெரிந்தாலுந்தான் ஏழைகளின் பிரச்சனைகள் பற்றி யோசிக்க வசதி படைத்த வர்க்கத்தினருக்கு நேரமும் இல்லை. விருப்பமும் இல்லை என்பதே யதார்த்தம் என்று எண்ணிய நான் அவ்விடத்தில் மேலும் தரித்து நிற்க விரும்பாமல் கண்ணொறுவை நோக்கி நடையைக் கட்டினேன்.

(உண்மைச் சம்பவம்)

# உண்மைக் காதல்

தேவன் ஒரு அரசாங்க உத்தியோகத்தன். கல்கிசையில் ஒரு தமிழ் வீட்டீல் அறையொன்றை வாடகைக்கு எடுத்துத் தங்கியிருந்தான்.

இவ்வாறு நீண்டகாலம் அவ்வீட்டில் வசித்து வீட்டுக் காரர்களுடன் இயல்பாகப் பழகி வந்தமையால் வீட்டுக்காரரின் மகளான புஷ்பாவுக்கும் தேவனுக்குமிடையே காதல் அரும்பி வளர்ந்து வந்தது.

இவர்களின் காதலுக்குத் தடையேதும் இல்லாமையால் அது வேகமாக வளர்ந்து வந்தது மட்டுமன்றி, புஷ்பாவின் வயிற்றில் சிசுவும் வேகமாக வளரத் தொடங்கியது. அதனை அழித்துவிடுவோம் என்று தேவன் கூற, புஷ்பா அதற்குச் சம்மதிக்கவில்லை.

"தாமதிக்காமல் திருமணத்தை முடித்துவிடுவோம்" என்று புஷ்பா கூறினாள். "ஊருக்குச் சென்று பெற்றோரின் அனுமதியைப் பெற்று அவர்களின் ஆசீர்வாதத்துடன் திருமணத்தைச் செய்யலாம்" என்று கூறி தேவன் ஊருக்குச் சென்றுவிட்டான்.

தான் கொழும்பில் ஒரு தமிழ் யுவதியைக் காதலிப்பதாக வும், அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும் பெற்றோரிடம் கூறினான் தேவன். மகன் சொன்னதைக் கேட்ட பெற்றோர் அதிர்ச்சியில் உறைந்துபோனார்கள்.

காதலியின் வயிற்றில் தனது பிள்ளை வளரும் விடயத்தைத் தேவன் தன் வீட்டாருக்குக்கூறாமல் மறைத்து விட்டான்.

“முறைப்பெண் உனக்காகக் காத்திருக்க நீ எப்படியடா வேறு பெண்ணைக் காதலிப்பாய்?” என்று திட்டு விழுந்தது. “நீ எனது தம்பியின் மகளையே கட்டவேண்டும். இல்லாவிட்டால் நான் தற்கொலை செய்துவிடுவேன்” என்று தாய் பயமுறுத்தினா.

முறை மச்சாளைத் திருமணம் செய்து தாயைத் திருப்திப் படுத்துவதா? அன்றேல் தனது குழந்தையை வயிற்றிற் சுமக்கும் கொழும்புப் பெண்ணைத் திருமணம் செய்வதா...? இரண்டும் கெட்டான் நிலையில் தேவன்...!

தேவனின் அம்மா துரிதமாகச் செயற்பட்டா. கல்யாண எழுத்து எழுதுவதற்காக அவசர அவசரமாக நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. ஆனால்அடுத்த நாளே யாருக்கும் கூறாமல் கொழும்புக்குச் சென்ற தேவன் புஷ்பாவுக்கும் அவளது பெற்றோருக்கும் நிலைமையை விளக்கிக் கூறி புஷ்பாவையும் பெற்றோரையும் அவளது உறவினர்களையும் தனது நண்பர்கள் பட்டாளத்தையும் கோவிலுக்கு அழைத்துச் சென்று நல்ல சுபமுகூர்த்தத்தில் புஷ்பாவின் கழுத்திற் தாலியைக் கட்டி விட்டான்.

(யாவும் கற்பனை)

# காணவில்லை

போராட்டம் தீவிரமடைந்த காலகட்டங்களில் இளைஞர்களும், யுவதிகளும் சாரி சாரியாகச் சென்று போராட்ட இயக்கங்களுடன் இணைந்து கொண்டிருந்தார்கள். சங்கீதா பதினெட்டு வயதுப் பருவ மங்கை. ஓ.எல் பாஸ் பண்ணியவள்.

வீட்டு விவகாரங்களில் முரண்பாடுகள் உச்சக் கட்டத்தில் ஏற்படும் சந்தர்ப்பங்களில் "இயக்கத்துக்குப் போய் விடுவேன்" என்று சொல்லிப் பெற்றோரைப் பயமுறுத்தத் தொடங்கினாள்.

"ரீன் ஏஜ் பொல்லாத வயது. சரி பிழை பற்றித் தீர ஆராயாமல் தான் சொல்வதே சரி, தான் செய்வதே சரி என்று வாதாடுவதும், செயற்படுவதும் "ரீன் ஏஜ் காரருக்குக் கைவந்த கலை.

இந்த வகையில் "இயக்கத்துக்குப் போவேன்" என்று மிரட்டிக்கொண்டிருக்கும் சங்கீதா உண்மையிலேயே அவ்வாறு செய்துவிட்டால் என்ன செய்வது என்று தீவிரமாகச் சிந்தித்த அவளின் பெற்றோர் அவளைச் சம்சார சாகரத்தில் இறக்கி விட்டால் எல்லாம் சரியாகிவிடுமென்று தீர்மானித்து, படிக் காதவனும் சொந்த மச்சானுமாகிய சூரியகுமாரனுக்குச் சங்கீதாவை அவசர அவசரமாகத் திருமணம் செய்து வைத் தார்கள். சங்கீதாவுக்குப் பதினெட்டு வயது முடியாததால்

திருமண எழுத்து எழுதவில்லை.

வயல் வேலை செய்வதுதான் சூரியகுமாரனின் தொழில். தினமும் மாலையில் நண்பர்களுடன் சேர்ந்து மூக்கு முட்டச் சாராயம் குடித்துவிட்டுத்தான் வீட்டுக்கு வருவான்.

"அடியே! ஏன் அவனை இவனைப் பார்த்துப் பல்லிளிக் கிறாய்" அது இது என்று பொய்க் குற்றச்சாட்டுக்களைக் கூறி மனைவியை ஏசுவதும் அடிப்பதும் தினமும் நடைபெறும் நிகழ்வுகளாகும்..

"விதானைக்குப் பயந்து உடையார் வீட்டில் ஒளித் தானாம் திருடன்." அதுபோலவே ஆகிவிட்டது சங்கீதாவின் நிலையும்.

"முரட்டுக் காடையன் போன்று நடந்துகொள்ளும் சூரியகுமாரனுடன் குடும்பம் நடத்த முடியாது,நரகத்திலிருந்து வெளியே வர மார்க்கமொன்றைச் சொல்லுங்கள், நீங்கள்தானே என் விருப்பத்துக்கு மாறாக இந்த விசரனை எனக்குக் கட்டி வைத்தீர்கள்" என்று தாய் தகப்பனிடம் சொல்லி அழுது புலம்பினாள் சங்கீதா.

சங்கீதாவின் அப்பா சூரியகுமாரனைச் சந்தித்து, அவர் களின் குடும்பப் பிரச்சனை தொடர்பாகக் கதைத்தபோது "சங்கீதா எனது மனைவி, அவளை நான் எப்படி வேண்டுமானா லும் நடத்துவேன், அதில் தலையிட அவளின் அப்பனுக்கும் உரிமையில்லை, பாட்டனுக்கும் உரிமையில்லை" என்று முகத்தில் அடித்தது போன்று பதில் கூறினான் சூரியகுமாரன்.

அப்போது வடமாகாணத்தில் கோடு கச்சேரி இயங்க வில்லை. சங்கீதாவின் அப்பா இணக்க சபையிடம் புகார் செய்தார். இணக்கசபை இரு சாராரையும் அழைத்து விசாரணை செய்து, ஒற்றுமையாக வாழுமாறு இருவருக்கும் ஆலோசனை சொன்னது. "இனிமேல் மனைவிக்கு அடிக்கக் கூடாது" என்று சூரியகுமாரனுக்கு எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

"கெடுகுடி சொற் கேளாது" என்ற பழமொழிக்கிணங்க சூரியகுமாரனின் போக்கில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

குடித்துவிட்டு மனைவியைக் கெட்ட வார்த்தைகளால் ஏசுவதும், அடிப்பதும் தொடர்ந்து நடந்து வந்தது.

"விவாகரத்து வேண்டும்" என்று சங்கீதா இணக்க சபையில் மீண்டும் செய்துகொண்ட புகாரின்பேரில் தம்பதிகள் நிரந்தரமாகப் பிரித்து வைக்கப்பட்டார்கள்.

சங்கீதா கணவனைப் பிரிந்து பெற்றோருடன் வாழ்ந்து வந்த காலத்தில் ஒருநாள் இரவோடிரவாக வீட்டைவிட்டு வெளியேறி இயக்கத்துக்குச் சென்றுவிட்டாள். யுத்தம் முடிந்து ஏழு வருடங்கள் முடிந்துவிட்டபோதிலும் இன்றுவரை சங்கீதாவைப்பற்றி ஒரு தகவலும் வரவில்லை.

எது "நடக்கக்கூடாது" என்று சங்கீதாவின் பெற்றோர் நினைத்தார்களோ அது நடந்துவிட்டது.

# தாயக பூமி

அப்போது நான் உள் நாட்டு இறைவரித் திணைக் களத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பணிமனையிற் பணி யாற்றிக்கொண்டிருந்தேன். 1995 ஐப்பசி மாதம் 30ம் திகதி யென்று ஞாபகம். பிற்பகல் நேரம் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நிற்கின்றேன்.

மக்கள் திடீரென்று பரபரப்பாகி ஒருவரையொருவர் இடறிக்கொண்டு அவசரமாகப் பயணிக்க முற்படுகின்றனர். மக்கள் ஏன் இவ்வாறு அவசர அவசரமாக ஓட்டமும் நடையு மாக அங்குமிங்குமாகச் செல்ல முயற்சிக்கின்றார்கள் என்று விசாரித்தேன்.

போர் உக்கிரமாக வெடிக்கப்போகிறதாம். அதனால் உயிரைக் கொண்டு தப்புவதற்காகவே மக்கள் ஓடுகிறார்கள் என்று அறிந்துகொள்ள முடிந்தது.

நான் உடனும் வீட்டுக்கு விரைந்து சென்று மனைவி யிடம் விபரத்தைக் கூறினேன். எமது அயல் வீட்டில் குடி யிருந்த நண்பருக்கும் நான் அறிந்த விடயத்தைக் கூறி வைத்தேன்.

அவர்சொன்னார் "எல்லாம் வெறும் வதந்தி இந்த மண் நாங்கள் காலாதிகாலமாக வாழ்ந்து வரும் எமது சொந்த மண்.

எமது தாயக பூமியைக் கைவிட்டுக் கால் போன போக்கில் ஓட முடியுமா? நான் அகதியாய் எங்கும் ஓட

மாட்டேன் வருவது வரட்டும்" என்றார் அவர்.

மனைவி சொன்னா "ஊரோடின் ஒத்தோடு" என்பது முதுமொழி. சனம் முழுக்க ஓடுதுகள். விடிய முன்பு கைதடிக்குப் போய்விடவேண்டும்என்பது சனங்களின் இலக்கு. நாமும் மக்களுடன் மக்களாகக் கைதடிக்குப் போவோம் அங்கு போன பின் மேற்கொண்டு என்னசெய்வது என்று தீர்மானிக்கலாம்" என்று.

யுத்தவிமானங்கள் உறுமிக்கொண்டு மக்களின் தலைக்கு மேலால்பயணிப்பதும் குண்டுவீச்சுக்கள் நடப்பதும் எறி கணைகள் ஆங்காங்கேவிழுந்து வெடிப்பதும் யாழ்ப்பாணப் பட்டணத்தில்அன்றாட நிகழ்வுகளாக இருந்தன.

எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்பதே யதார்த்த மாக இருந்தது. எனவே கைதடிக்குப்போவதுதான் நல்லது என்று நாம் முடிவெடுத்தோம்.

காணி உறுதிகள், எனதும் மனைவியினதும் கல்விச் சான்றிதழ்கள் உத்தியோகம் தொடர்பான பத்திரங்கள், பிள்ளை களின் 1995 பாடப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், 1987ம் ஆண்டில் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட பின் தேடிக்கொண்ட ஒருசில நகைகள் போன்றவற்றை ஒரு சூட்கேசி லும் அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட உடுப்புகளை இன்னொரு சூட்கேசிலும் அடுக்கிக்கொண்டோம்.

எனது ஏசியா பைக்கில் பாரமான சூட்கேசையும் மனைவியின் லேடீஸ் சைக்கிலில்மற்ற சூட்கேசையும் கட்டிக் கொண்டேன்.

மகள்மார் இருவரும் தமது பாடசாலை பாக்குகளில் தமது உடுப்புகளை அடுக்கி முதுகிற் கொழுவிக் கொண்டார் கள்.

நான் வீட்டைக் கவனமாகப்பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டேன். நாம் திரும்பி வரும்போதுவீட்டுக்காரன் இவ் வீட்டை மீண்டும் எங்களுக்கே வாடகைக்குத் தருவார் என்பது நிச்சயமில்லை. வீட்டிலுள்ள எமது தளபாடங்களும் ஏனைய

பாவனைப் பொருட்களும் எமக்கு மீண்டும் கிடைக்கும் என்பதும் நிச்சயமில்லை. என்று நான் எண்ணிக்கொண்டேன்.

நேரம் பிற்பகல் ஆறு மணி ஆகிவிட்டது.இரண்டு வயது மகனை சைக்கில் பாரில் இருத்திக்கொண்டு சைக்கிலை உருட்டத் தொடங்கினேன் நான்.

என்பின்னால் மகள்மார் இருவரும் தத்தம் பாக்கு களுடன் நடந்தார்கள். அவர்களின்பின்னால் மனைவி தனது சைக்கிலை உருட்டியபடி புறப்பட்டு எல்லோருமாக செம்மணி மயானச் சந்தியை இலக்கு வைத்து நடக்கத் தொடங்கினோம்.

சைக்கில் ஓட்ட முடியாது. வேகமாக நடக்கவும் முடி யாது. அவ்வளவு சன நெருக்கடி. ஒருவரின் காலில் மற்றவரின் கால் மிதிபட்டு கால்கள் நோகத் தொடங்கின.

எறிகணைகள் வானத்திற் கூவிக்கொண்டு எமக்குப் போட்டியாகப் பயணிக்கின்றன. எங்கோ தூரத்தில் எறிகணை கள் விழுந்து வெடிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கின்றது.

வானத்தைக் கறுப்புக் கம்பளத்தாற் போர்த்தி இருள ரக்கன் அட்டகாசமாய்ச் சிரித்தான். பிள்ளைகள் கால் நோகுது என்று கூறிச் சிணுங்க ஆரம்பித்தார்கள். அதனால் பாதையை விட்டுச் சிறிது விலகிப் பக்கத்தில் இருந்த ஒரு வெறுங் காணிக் குள் சைக்கில்களை நிறுத்திவிட்டு உட்கார்ந்து ஓய்வெடுத் தோம்.

நேரம் இரவு எட்டு மணியை நெருங்கிக் கொண்டி ருந்தது. பிள்ளைகள் "அம்மா பசிக்குது" என்றார்கள்.

கையில் கொண்டு வந்திருந்த சோற்றுப் பாசல்களை (மத்தியானச் சாப்பாட்டு மிச்சம்) அனைவருமாகச் சாப்பிட்டு போத்தலில் இருந்த தண்ணீரைக் குடித்து எம்மை ஆசுவாசப் படுத்திக்கொண்டோம்.

அதன்பின் சைக்கில்களை உருட்டியபடி மீண்டும் நடக்கத் தொடங்கினோம்.

எட்டு மைல் தூரத்தை ஒரே இரவில் நடந்து முடிப்ப தென்பது இலேசுப்பட்ட காரியமா என்ன?

பிள்ளைகள் நித்திரை தூங்கி விழ. பார்க்கின்றார்கள். "அம்மா தண்ணி விடாய்க்குது" என்றார்கள். கொண்டு வந்த தண்ணீர் முடிந்துவிட்டது. யாரோ ஒரு புண்ணியவதி தந்த தண்ணீரை பிள்ளைகள்மூவருக்கும் குடிக்கக் கொடுத்துவிட்டு நடைபவனியை மீண்டும் தொடர்கின்றோம்.

தமிழ் மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டு வருண பகவான் கண்ணீர் விட்டு அழத் தொடங்கினார். கண்ணீர் மழையில் நாம் நன்றாக நனைந்துவிட்டோம்.

பிள்ளைகள் நனைந்த உடைகளுடன் நடுங்கியபடி நடந் ததைப் பார்க்கப் பெருங் கவலையாக இருந்தது. இனப்பிரச் சினையின் பேரால் அப்பாவி மக்களைப் போட்டுச் சிப்பிலி ஆட்டுகிறார்களே என்ற எண்ணமே என்னிடம் மேலோங்கி யிருந்தது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாவற்குழிப் பாலத்தை இதோ அண்மித்துக்கொண்டிருக்கிறோம் என்று மக்கள் கதைக்க ஆரம்பித்தார்கள்.

"அப்பா நாவற்குழிப் பாலம் எங்கே இருக்கிறது?" என்று மூத்த மகள் கேட்டாள்.

"ஓம் மகள் நாம் இப்போது நாவற் குழிப் பாலத்தை அண்மித்துக்கொண்டிருக்கிறோம். அதற்கப்பால் நாங்கள் போகவேண்டிய இடமான கைதடி ஒருமைல் தூரத்தில் இருக்கிறது விரைவில் போய்விடலாம் என்றேன் நான்.

நாவற்குழிப் பாலத்தை அடைந்ததும் ஓரேதள்ளுமுள்ளு ஏற்பட்டது. சிலர் பாதையை விட்டுக் கீழே இறங்கி தண்ணீருக் குள்ளால் நடக்கத் தொடங்கினார்கள்.

சில இடங்களில் எட்டாத் தண்ணீர் நின்றபடியால் மக்கள் சிலர் பள்ளத்தில் வீழ்ந்து மூச்சுத் திணறி அவதிப் பட்டார்கள். இளைஞர்கள் முன்வந்து பலரைக் காப்பாற்றிய போதிலும் ஒருவர் மூச்சுத்திணறி மரணமாகிவிட்டார்.

பாலத்தால் நடந்தபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எனது சைக்கில் கைதவறிக் கீழே விழுந்துவிட்டது.

பிள்ளைக்கும் சாடையாக அடிபட்டுவிட்டது.

நான் மகனை ஒருசகபயணியிடம் கொடுத்துவிட்டு சைக்கிலை நிமிர்த்தி சூட்கேசைக் கட்டிக்கொண்டு நிற்க சக பயணி தன்பாட்டில் முன்னால் நகர்ந்துவிட்டார். யாரென்றும் தெரியாது. முன்னால் அதிக தூரம் சென்று சிரமப்பட்டுத்தான் பிள்ளையை மீட்க முடிந்தது.

பசி தண்ணீர் விடாயுடன் நடந்து காலைஎட்டு மணிபோலக் கைதடிச் சந்தியை அடைந்தோம்.

தேநீர்க் கடையில் தேநீர் வாங்கிப் பிள்ளைகளுக்கும் கொடுத்து நாமும் குடித்தபோது போன உயிர் மீண்டும் திரும்பி வந்ததுபோல இருந்தது.

ஒரு ஆட்டோவைப் பிடித்துக்கொண்டு நுணாவிலில் வசிக்கும் எனது சுந்தோர் நண்பரான சோதி என்பவரின் வீட்டை நோக்கிச் சென்றோம் அவர் எம்மைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

முகம் கழுவிக் குளித்துச் சாப்பிட்டு இளைப்பாறினோம். சோதி தம்பதியினரின் அன்பான உபசரிப்பு காரணமாக ஒரே நொடியில் இடம்பெயர் துன்பம் தீர்ந்து விட்டது போல இருந்தது.

அடுத்த நாள் நுணாவிலில் இருந்து புறப்பட்டுக் கிளாலிக்குச் சென்று அங்கிருந்து படகுமூலம் பூநகரிக்குச் சென்றோம்.

பின்னர் பஸ் மூலம் எனது பிறந்த மண்ணான முல்லைத்தீவு மண்ணில்போய் இறங்கினோம். எம்மைக் கண்டு அம்மாவும் தங்கையும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

நான் பிறந்து வளர்ந்து 22 வருடங்களாக நடந்து திரிந்த மண் முல்லைத்தீவு மண். அம் மண்ணில் நீண்ட காலத்துக்குப் பிறகு காலடி வைத்தபோது நான் அடைந்த மகிழ்ச்சியை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது.

"இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற பாடலை யாரோ ஒரு இளைஞன் இனிமையான குரலில் பாடியபடி தெருவால் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. அப்பா உந்தப் பாட்டை இண்டைக்குத்தான் முதல்முதலாய் கேக்கிறன். நல்ல பாட்டு என்று மூத்தமகள் சொன்னாள்.

# நன்றியுரை

இந்நூலுக்கு அணிந்துரை எழுதித் தருமாறு கலாநிதி நா. தர்மராஜா(அகளங்கன்) அவர்களை நான் கேட்டபோது, எவ்வித மறுப்பும் சொல்லாமல் அதனைச் சிறப்பான முறையில் எழுதித் தந்ததோடு, புத்தக வெளியீடு தொடர்பான பல ஆலோசனைகளையும் அவர் கூறி உதவினார்.

வாழ்த்துரை, அறிமுக உரை ஆகியவற்றை முறையே கலாநிதி சாகித்திய ரத்னா முல்லைமணி அவர்களும், இளைப் பாறிய கல்வி அதிகாரியும், சமாதான நீதவானுமாகிய திரு. க. மார்க்கண்டு அவர்களும் வழங்கி உதவினர்.

புத்தகத்தின் பின் அட்டையை அழகு செய்யும் வாழ்த் துரையை வழங்கியவர் தினக்குரல் பத்திரிகையின் கண்டி முகாமையாளர் கலாபூஷணம் இரா.அ.இராமன் ஆவார். ஆசியுரை வழங்கியவர் எனது அன்புத் தாயார். மேற் கூறிய அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக கின்றேன்.

ஞானம் சஞ்சிகை எனது முதலாவது சிறுகதையையும் முதலாவது கவிதையையும் பிரசுரித்து என்னை ஊக்கப் படுத்தியது. அந்தவகையில் திரு தி. ஞானசேகரன் அவர் களுக்கும் விசேடமான நன்றிகள்.

எனது இலக்கிய ஆக்கங்களைப் பிரசுரித்த வகையில் இலக்கிய சஞ்சிகைகளான ஜீவநதி, மல்லிகை, செங்கதிர்,

பூங்காவனம், தாயக ஒலி, ஆகியவற்றின் பிரதம ஆசிரியர்கள் முறையே திரு க. பரணீதரன், சாகித்தியரத்னா டொமினிக் ஜீவா, திரு த.கோபாலகிருஷ்ணன், செல்வி றிம்சா முகம்மட், கலா பூஷணம் தம்பு சிவா ஆகியோருக்கும்,

எனது கட்டுரைகளை வீரகேசரி வாரவெளியீடு, தினக் குரல், ஞாயிறு தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரித்த பொறுப்பாசிரியர்களான திரு தேவராஜ், திரு.வீ. தனபால சிங்கம், திரு பாரதி ராஜநாயகம் அவர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகள்.

இப்புத்தகத்தை அழகான முறையில் அச்சிட உதவி யவர்களான பரணி அச்சக உரிமையாளர் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் பல்வேறு வகைகளில் எனக்கு உதவிகள் புரிந்த இலக்கிய நண்பர்களான கலாநிதி அகளங்கன், குரும்பசிட்டி வேலமுதன், கலாபூஷணம் வதிரி.சீ. ரவீந்திரன் கலாபூஷணம் அ.இராமன் ஆகியோருக்கும் எனது மனப்பூர்வ மான நன்றிகள்.

எனது ஆக்கங்களை வாசித்து அபிப்பிராயம் சொல்லி, ஊக்கமளித்து வரும் அனைத்து இலக்கிய நண்பர்களுக்கும் வாசக அன்பர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். மறதி காரணமாக யாருக்காவது நன்றி கூறாமல் விட்டிருந்தால் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகின்றேன்.

ஆசிரியர்



இந்நூலின் ஆசிரியரான கலாபூஷணம் கா. தவபாலன் அவர்கள் கண்டியில் அரச உத்தியோகத்தராகப் பணியாற்றிய காலத்தில் இலக்கியவாதியாகவும் பத்திரிகை எழுத்தாளராகவும் வாசகர்களுக்கு அறிமுகமானார்.

இவர் சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய துறைகளில் முப்பரிமாண எழுத்தாளராகத் திகழ்வதோடு ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழி களையும் கற்றுத் தேர்ந்து ஒரு மும்மொழி வித்தகராகவும் புகழ் பெற்றுள்ளார்.

எழுத்தில்மட்டுமல்ல மேடைப்பேச்சிலும் இவர் வல்லவராக இருக் கின்றார். மாணவப் பருவத்தில் பேச்சுப்போட்டி, விவாதப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றியதோடு கொழும்பில் உத்தியோகம் கிடைத்த பின்னர் தொழிற்சங்கமேடைகளில் மும்மொழிகளிலும் பேசக்கூடிய இயலுமையை இவர் வளர்த்துக் கொண்டார். வரிமதிப்பாளராகப் பணியாற்றி 2007 ம் ஆண்டில் ஓய்வுபெற்றார்.

2015ம் ஆண்டில் இவருக்கு இலக்கியத்துக்கான கலாபூஷணம் விருது கிடைக்கப்பெற்றது. இவருக்கு எனது வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

- கலாபூஷணம் இரா. அ. இராமன்
முகாமையாளர்
தினக்குரல் பணிமனை, கண்டி